
Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 01 | 25 - 03 - மார்ச் - 2005



# படித்ததில் பிடித்தது

## செருப்பும் என் கால்களும்

செருப்பும் என் கால்களும்
சிநேகிதமாய் இருந்தன.
அறிமுகமான
ஆரம்ப நாட்களில்தான்
கால்களை செருப்பு கடித்தது.
காலும் செருப்பை
கண்டித்து வைத்தது.
அப்புறம்
நாட்கள் மெதுவாய்
நடைபயில.
செருப்புக்கு தன் கால்களைத்
தெரியும்.
கால்களும் தமது
செருப்பை அறியும்.
கால்களுக்கும்
செருப்புக்கும்
காதல் வளர்ந்தது,
கால்களுக்காக
கல்லிலும் முள்ளிலும்
செல்வதற்கு
செருப்பு தயங்கியதில்லை.
அதனால்
காயம் ஏற்பட்டாலும்
மயங்கியதில்லை.
கைமாறாக
கால்களும்
வேறொரு செருப்பை
விழைந்ததில்லை
அதன்
விரல்களில் யாரும்
நுழைந்ததில்லை.
செருப்புக்கு எப்போதும்
என் கால்களைப் பற்றியே
கவலை.
என் கால்களுக்கும் எப்போதும்
செருப்பைப் பற்றியே
சிந்தனை.
கால்களை செருப்பு
கனமாய்
நினைத்ததில்லை.
கால்களும்
சுமை என்று
செருப்பை
சொன்னதே இல்லை.
மாதங்கள் பற்பல
மறைந்தன.
உறவின் உறக்கத்தில்
ஊடல்கள்.
ஊடல்
கூடலைப் பிரிக்கக்
குறிவைத்தது.
கால்களுக்கு செருப்பின் மேல்
காதல் குறைந்தது
செருப்பிற்கும் கால்களிடம்
சிநேகிதம் மறைந்தது.
கூடி நடந்தாலும்
ஒன்றை ஒன்று
குறை சொல்லத் தொடங்கின.
மிதிபடுவதாய்
செருப்பு நினைத்தது
ஒத்துவரவில்லை என்று
கால்கள் உரைத்தன.
பொருத்தமான சோடி
இப்போது
வருத்தமான சோடியானன.
கால்கள் செருப்பை
கண்டிக்கவே செருப்பும்
கால்களை சீண்டிப்
பார்த்தது.
உறவு அறுபடாமல்
ஒட்டி இருப்பதற்கு
அவ்வப்போது
மூன்றாவது நபரிடம்
முறையிடும் நிலைமை.
உறவை காப்பாற்ற
உதவிக்கு வந்தவர்கள்
உள்ளத்தில் பல இடங்களில்
ஆணியை அடித்தார்கள்
கூர்மையான ஊசியால்
குத்தினார்கள்.
செருப்பு முறைத்தது
கால்கள் உதைத்தன.
ஒவ்வொருநாளும்
ஓயாத சண்டை.
தெருவில் அவ்வப்போது
கிழிந்தது தேன்நிலவு.
பொறுத்துப் போன
கால்கள்.
ஒரு நாள்
செருப்பை
தூக்கி எறியவே.
செருப்பும்
முகத்தைத் திருப்பிக் கொண்டு
மூலையில் விழுந்தது
முடங்கிக் கொண்டது.
கால்கள்
சிலசமயம்
கவலைப்படுவதுண்டு.
அந்த நாள் நினைவுகளில் செருப்பும்
சிலசமயம்
சிந்தித்துப் பார்ப்பதுண்டு.
பிரிந்த பிறகுதான்
கால்களுக்குத் தெரிந்தது
செருப்பின் அருமை.
செருப்புக்கும் தெரிந்தது
கால்களின் பெருமை.
மூலையில் கிடக்கும்
செருப்பை மீண்டும்
சேர்த்துக் கொள்ளலாமா
என்று கால்கள் அதை நோக்கி
நடக்கும்.
ஆனால் கௌரவம்
வந்து தடுக்கும்.
செருப்பைப் பிரிந்து
சிரமப்பட்ட கால்கள்
திருட்டுத்தனமாக
திரும்பிப்பார்க்கும்.
பரிதாபமாகப்
பல்லிளித்தாலும்
சிரிப்பது போல
செருப்பு நடிக்கும்.
கடிகாரத்திற்குள்ளே
முள்ளும் துடிக்கும்.
காலம் நடந்தது
கால்களின் பக்கம்.
ஒரு நாள்
வேறொரு புதுச் செருப்பு
வீட்டுக்கு வந்தது.
அதை அணிந்திருந்த
கால்களின் அசைவில்
கர்வம் தெரிந்தது.
மூலையில் கிடந்த
பழைய செருப்பு
முனகியது.
உழைத்து உழைத்து
உருக்குலைந்த என்னை
ஒதுக்கிவிட்டு
இன்னொரு சோடியை
ஏற்பது நியாயமா.
அழகிய புதுச்செருப்பு
அணி செய்துகொண்டிருந்த
கால்களின் கணைப்பொலி.
செருப்பை மாற்றலாம்
கால்களை அப்படி
மாற்றமுடியுமா?
கால்களின் கர்ஜனை
காதில் விழுந்ததும்
பழைய செருப்பும்
உடனே சீறியது.
வீட்டை விட்டு என்னை
வெளியே எறிந்து
பாருங்கள்
எத்தனை கிழிசல்கள்
என் இதயத்தில்
இருந்தாலும்
தயங்காமல் அதற்கெல்லாம்
தையல் போட்டு
அன்புடன் என்னை
அரவணைத்துக் கொள்ளும்
இரக்கமுள்ள பாதங்களும்
இருப்பதை உணரலாம்.

ஆங்கிலத்தில்:- சீதா அமலதுங்க.
தமிழில்:- இ.றஜித்.

# கார சாரம்

## இவையளையும் கொஞ்சம் கவனியுங்கோ...

மகாவலி எச் வலயத்தில் நெல் விளைச்சல் அமோகமாக உள்ளதாம். பொலநறுவ,அம்பாறை, குருநாகல்,அநுராதபுரம் போன்ற பெருமளவு நெல் அபிவிருத்தி செய்யும் இடங்களிலும் நல்ல விளைச்சல் ஏற்பட்டுள்ளதாம். கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மாவட்டங்களும் அவ்வாறே அமோக விளைச்சல் கண்டுள்ளது. என்றாலும் இதன் பயனை உற்பத்தியாளர்கள் அனுபவிக்கப்போகிறார்களா என்றால் இல்லை. கிராமிய வழக்கில் ஒரு பழமொழி உண்டு. கமக்காரன் கணக்குப் பார்த்தா மாடுசாய்க்கிற கம்புதான் மிச்சம் என்று. எல்லாத் தொழில்களிலும் உயர்ந்த தொழில் விவசாயம்தான். .

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வார்"

என்றும் ஆற்றங்கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றோ..... ஏற்றம்.

உழுதுண்டு வாழ்வார்க்கு ஒப்பில்லைக் கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு.

என்றும் பழம் பாடல்கள் உண்டு. இருந்தாலும் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட ஒருவர், தனது பிள்ளைகளும் தன்னைப் போல மண்ணைக்கிண்டக் கூடாதென்பதில் வலுகவனமாகவே உள்ளார். அவர் பிள்ளை ஒரு பொறியியலாளராகவோ, அல்லது வைத்தியராகவோ,இல்லை வெளிநாட்டில் உழைப்பவராகவோ மாறுவதைக் காணலாம். இன்றைய விவசாயிகளுக்குள்ள பாரியபிரச்சினையே ஆட்பற்றாக்குறையாகும். எதிர்காலத்தில் இவற்றுக்கான தேவையை எந்திரங்கள் நிரவக்கூடும். ஆனால் இந்த எந்திரங்கள் யாருடைய உடைமையில் இருக்கப்போகின்றன. இன்றைய நிலையில் தமிழீழப் பரப்பெங்கும் விவசாயம் செய்வோரில், பெருந்தொகையினர் நிலமற்ற விவசாயிகளே. இவர்களுக்கு குத்தகையாக நிலங்களைக் கொடுத்துள்ள பெரும் நிலச் சொந்தக்காரர்கள் வெளிநாடுகளிலோ, அல்லது வெளி மாவட்டங்களிலோ வாழ்கின்றனர். இவற்றுக்கும் விதிவிலக்காக உள்ளூரில் உள்ளவர்களும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாக உள்ளனர்.

ஆக ஒரு சிறு விவசாயி தனது வாழ்க்கையை மேம்படுத்தி ஒரு நிலச்சொந்தக்காரனாகவோ, அல்லது எந்திர உரிமையாளனாகவோ வரவே முடியாதவாறு அவனை உற்பத்திச் செலவு நசுக்கிவருகிறது. ஒவ்வொருவிதைப்புக்கும் மனைவி பிள்ளைகளின் நகைகளை ஈடுவைத்துத்தான் வேலை தொடங்குகிறான். இடையில் பசளை, மருந்து என நிறுவனங்களிலும் கடன் பெறுகிறான். இயற்கை அழிவுகளையும் சந்திக்க வேண்டியவனாகுகிறான். இத்தனைக்கும் முகம்கொடுக்கும் விவசாயிக்கு அவன் பாடுபட்டதற்கான பயன் கிடைக்கும்போது அதை இடைத்தரகர்கள் தட்டிப் பறிப்பதைத் தடுக்க முடியவில்லை.

இன்றைய நிலையில் அறுவடை செய்த நெல்லை அவன் உடனடியாக விற்கும்போது மூடை ஆயிரம் ரூபா தான் விலையாகக் கிடைக்கும். ஆரம்பத்தில் சென்றபோகத்தில் சம்பா நெல்லை அறுவடை செய் தவர் அதை அவசரமாக விற்கவேண்டியிருந்தது. ஆக எண்ணூற்றிப்பத்து ரூபாவிற்கே விற்க முடிந்தது. அதே சமயம் சம்பா அரிசி ஐம்பது ரூபா விற்றது. இன்று சந்தையில் அரிசி விலை முப்பத்தெட்டு ரூபா. நெல் விலை வெறும் ஆயிரம்தான். ஒரு மூட்டை நெல் எழுபத்தொருகிலோ வாகும். அவித்துக் குத்தினால் மூன்றில் இரண்டு பங்கு அரிசிதேறும். அதாவது ஐம்பதுகிலோ அரிசி வரும். அதன் விற்பனை விலை முப்பது ரூபாவாக இருந்தாலும் ஆயிரத்து ஐநூறுரூபா வரும். மேலதிக ஐநூறு ரூபாவில் அவிக்கக், குத்த, சுமக்க என்று பார்த்தாலும் இருநூறு ரூபாவை விடலாம். சும்மா இருந்து கூட்டிக் கழிக்க ஆயிரத்துத் தொள்ளாயிரம் ரூபா அரிசியில் கூலிகழித்துப பார்த்தாலும் அறுநூற்றைம்பது ரூபாவை இடைத்தரகர் பெறுகிறார் ஒரு மூட்டை நெல்லில் மட்டும்.

கத்தரியை நட்டுக்களையெடுத்து மருந்தடித்து, நீர்பாய்ச்சிக் காவல்காத்து, அறுவடை செய்பவன் ஒரு கிலோவுக்கு இருபது ரூபாவைப் பெற, அதை வாங்கிச் சமைப்பவர் ஒரு கிலோக் கத்தரிக்காய்க்கு அறுபது ரூபாய் கொடுக்கிறார். இடைத்தரகர் இருந்த இடத்தில் இருந்து ஒரேநாளில் உற்பத்தியாளன் பெறும் விலையைப் பெறுகிறார். விவசாயிகளுக்கென சந்தை கிடையாது.

உற்பத்தி செய்பவர் வயலுக்குக் கொடுக்கும் குத்தகை, உழவு, களையெடுப்பு, பசளை, இவ்வளவுக்கும் ஆகும் செலவைவிட அறுவடைக்கும் சூடு அடிப்புக்கும் கூடிய செலவு ஆகிறது. காலேக்கர் அருவி வெட்டிக்கட்ட ஆயிரம் ரூபாவும் அதற்கு அதிகமாகச் செலவாகிறது. சூடு அடிப்புக்கு மெசின் கூலி ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரத்து ஐநூறும் அதற்கு மேலும். கூலி ஒருவர் நாநூறு ரூபாய்ப்படி நால்வர். கமக்காரனுக்கும் சேர்த்து இரண்டாயிரம் ஆகிறது. இன்னும் மேலதிகமாக ஒரு சூடடிப்புக்குத்தேவையான வாயு விளக்கை வாங்கி வைத்திருக்கவோ, தெளிகருவி வாங்கி வைத்திருக்கவோ வசதியற்ற விவசாயிகளே அதிகம்.

இவர்களுடைய உழைப்புக்கேற்ற ஊதியத்தை, மதிப்பை எந்த அரசும், எந்தக் காலத்திலும் கொடுத்ததில்லை. விவசாயிகளின் தொகை காலத்துக்குக் காலம் குறைந்து போவதற்கு இதுவுமொரு காரணம். இம்முறை மல்லாவி, வவுனிக்குளம் போன்ற இடங்களில் பூச்சித் தாக்கமொன்றினால் அநேகருடைய வயல், பயிர்கள் அழிந்து போயுள்ளன. இவர்களுக்கு காப்புறுதி நஷ்டஈடு ஏதாவது கிடைக்குமா?

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு சிறுதொழில் உற்பத்திகள் மூலம் சிறு முதலாளிகளின் பெருக்கம் அவசியம். உள்ளூர் வாசிகளின் வாழ்க்கை அபிவிருத்தி அடைந்து கொண்டால் மட்டுமே நாடு அபிவிருத்தி அடைந்துள்ளதெனக் கொள்ளலாம். தனி மனித நலன்கள் எனக் கருதப் பட்டாலும். பல தனிமனிதர்களைக் கொண்டதே ஒரு குடும்பம் என்பதும். பல குடும்பங்களைக் கொண்டதே ஒரு சமூகம் என்பதும் யதார்த்தமான உண்மை.

வெளி நாட்டு நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் வெளி நாட்டுப் பொருட்களின் சந்தை வளர்ச்சிக்கும். நாம் அரும்பாடுபட்டு வருகின்றோம். அதேசமயம் உள்ளூர் வளங்களையும், அவை அழிந்துபோவதையும் அமைதியாக அனுமதித்து, எமது தேசியத்தின் சுபீட்சமான வாழ்வுக்கு சிறுகக்கொல்லும் நஞ்சையூட்டுகிறோம். கால்நடை வளர்ப்பிலும்கூட இதேநிலை காணப்படுகிறது. சிறந்த முட்டைக் கோழிகள் எனச் சிபாரிசு செய்யப் பட்ட முட்டைக் கோழிக்குஞ்சுகள் ஒரு மாத ஒன்றரை மாத வயதுக் குஞ்சுகள் சந்தையில் இறைச்சிக் கான விற்பனை நிலையத்தில் காணப்பட்டன.

"இதை ஏன் இப்போது விற்கிறீர்கள்" என்று கேட்ட போது".

''இது உதவியற்ற பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்புக்காகத் தரப்பட்டது. எம்மிடம் கோழித்தீன் வாங்கிப் போட்டு பராமரிக்க வசதியில்லை அதனால் விற்கிறோம்" என்றார்கள். கோழித்தீன் அந்த விலை விற்கிறது. கோழி வளர்ப்பு முறைபற்றி பயிற்சியற்ற பெண்கள் இவர்கள். அத்துடன் அவற்றை வளர்த்தும் சந்தைப்படுத்த முடியாத நிலைதோன்றுகிறது.

உற்பத்தி செய்வதும் அதை விற்பனை செய்வதும் பெரும்சிரமமான விடயமாக உள்ள நிலையில் உள்ளூர் உற்பத்திகளை பால், இறைச்சிக்கோழி, முட்டை என்பவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டாமோ?

இறைச்சிக் கோழிகளையும் முட்டைக் கோழிகளையும் திறந்து விட்டே வளர்த்தார் ஒருவர். "அடடா இவை ஈரத்தில் திரிந்தால் இறந்து போகுமே" என்று நினைத்து அதை அவருக்குச் சொல்லவும் செய்தோம். அவர் ஒரு நமட்டுச் சிரிப்புடன் பேசாமலிருந்துவிட்டார்.

சில நாட்களின் பின் அவரது கோழிகள் குறைந்து கொண்டே வந்தன "பாவம் கோழியளால ஆளுக்கு நட்டம் போல" என்றேன்.

கதையைக் கேட்டவர் கலகலவெனச் சிரித்துவிட்டுச் சொன்னார்.

"அப்பிடியில்ல கோழியள் அப்படிக் குளிரில செத்தாலும் அவன் உரிச்சுப் போட்டுக்கொண்டே கொட்டலுகள்ள வித்துப் போடுவான்" இதையே ஒரு சந்தை வியாபாரியும் சொன்னார். நாட்டுக் கோழி பிரச்சினையில்லைக் கிடக்கும். எப்பவும் விற்கலாம் புறோயிலர் செத்துப் போனாப் பிறகு உரிச்சிப்போட்டுக் கடைகடையாத் திரிஞ்சு குடுக்கோணும். ஏதோ கண்டதும் கேட்டதுமாச் சொல்லுறன் எண்டு நினைக்க வேண்டாம். இண்டைக்கு கால்நடை உற்பத்தியாளனின் நிலை இதுதான்.

உற்பத்திப் பொருளை உள்ளூர் மூலவளங்களைக் கொண்டு செய்து ஒழுங்காகச் சந்தைப்படுத்தினாத்தான் அபிவிருத்தி. அயலூரால் வரும் பொருளை அரைரூபா இலாபம் வைச்சு விற்கிறதால வருவது அபிவிருத்தியில்லை அழிவுப்பாதை கல்லிலநார் உரிச்சு அல்ஜீரியா வாழயில்லையோ கைத்தொழிலை மட்டும் நம்பி சிங்கப்பூர் வாழயில்லையோ எண்டு கேக்கிறபோது நாங்கள் முன்னேற எவ்வளவு முட்டுக்கட்டை. கொண்டாவும் கையேசும் ஓடித்திரியிறதும், கூரைக்கு மேல கூரை வளர்க்கிறதும் அபிவிருத்தியில்லை. வருமானம் மக்களுடைய உழைப்புக்கு என்றைக்குக் கிடைக்கப் போகுதோ அன்றைக்குத்தான் சுதந்திரம் அபிவிருத்தி சகவாழ்வு.

மாயா

# இலங்கை அரசியலின் பிரதான இரண்டு தலைமைகள்

கே.ரி.கணேசலிங்கம்


கடந்த காலங்களில் இலங்கையின் முழுப்பாகத்திலும் ஏற்பட்டுவரும் மாறுதல்கள் புதிய கண்ணோட்டங்களுக்கும், புதிய நகர்வுகளுக்கும் வித்திட்டுள்ளது. குறிப்பாக, கிழக்குப் பகுதி அரசியல் பொறுப்பாளர் கௌசல்யனின் படுகொலையோடு இவ் அரசியல் ஆரம்பமாகிவிட்டது. இது சர்வதேச மட்டத்திலும் இலங்கை மட்டத்திலும் தவிர்க்கமுடியாத சில யதார்த்தங்களை வெளிப்படுத்திவிட்டது. அது இலங்கையின் அதிகாரவர்க்கத்திற்கும், பிராந்திய சக்திக்கும் எட்டியிருக்கும் அதிர்ச்சி என்பதுடன் மாற்றுக்கொள்கைக்கு அவ்விரண்டு சக்திகளும் பல உபா-யங்களை வகுத்து செயற்படுவதாகத் தெரிகின்றது. எனவே, புதிதாக உருவெடுத்துள்ள போக்கை விரிவாக நோக்குவோம்.

மட்டு. அம்பாறை மாவட்டத்தின் அரசியல் பொறுப்பாளர் திட்டமிட்டு கொலைசெய்யப்பட்டதை கொபிஅனான் கண்டித்திருந்தார். கொபிஅனானின் வருகையை வட-கிழக்குக்கு சாத்தியமற்றதாக்கிய தரப்பு அவரது கண்டனத்தினால் அதிர்ந்து போயுள்ளது. இது சாதாரணமாக ஐ.நா. சபையினால் மட்டும் மேற்கொள்ளப்பட்ட விடயமல்ல. அவ்வாறு ஐ.நா. வின் செயலாளரால் செய்யப்பட்டதென கருதினால் ஐ.நாவை விளங்கிக்கொள்ளாமல் வெளியிடப்பட்ட செய்தியாக அமைந்துவிடும். அதனை மிக இலகுவாக விளங்கிக் கொள்ளலாம். அதாவது, அமெரிக்காவின் முன்னாள் வெளிவிவகார செயலாளரின் விஜயத்தினை தொடர்ந்தே கொபி அனான் இலங்கை வந்திருந்தார். கொபி அனானும், கொலின்பவல் விஜயம் செய்த பிரதேசங்களுக்கே விஜயம் செய்திருந்தார். அத்தோடு அமெரிக்க இராணுவத்தின் வருகை இந்திய இராணுவத்தின் வருகை என பலவிடயங்கள் நிகழ்ந்து முடிந்துள்ளது. ஆனால், இந்த சுனாமி அவசர பணியாளர்களின் வருகையில் கடும் வாதங்கள் ஏற்பட்டதுடன் இந்திய, அமெரிக்க தரப்புக்கள் வெளிப்படையாக முரண்படாதுவிட்டாலும் அடிப்படையில் முரண்பட்டுக் கொண்டன. இதனால் அமெரிக்கப்படைகள் வெளியேற முனைந்ததாகவும், இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் அதிகமாக ஒத்துழைக்கின்றதென்பதால் தாம் வெளியேறுவதாகவும் அமெரிக்கா பக்கம் கருத்துக்கூறப்பட்டது.

இதைவிட இன்னோர் கருத்தும் நிலவுகிறது. சுனாமியை சாதகமாகக் கொண்டு இலங்கைக்குள் நுழைவதுவும் பின்னர் ஏற்படப்போகும் நெருக்கடியின் போது சிறிலங்கா இராணுவத்திற்கு கை கொடுப்பதெனவும் கணக்குப்போட்டே இரண்டு நாட்டுப் படைகளும் இலங்கையில் குவிந்ததாக தமிழ் இணையத்தளம் ஒன்றின் ஆய்வாளர் ஒருவர் கருத்து கூறியிருந்தார். ஆனால், அதற்கான காலம் சாத்தியப்பட முன்பே வருகை தந்துவிட்டதனாலேயே அப்படைகள் வெளியேறும் நிலை ஏற்பட்டதாக அக்கட்டுரையாளர் வாதிடுகின்றார்.

ஆனால், எதுவாயினும், அமெரிக்கப் படைகள் வெளியேறிக் கொண்டிருக்கின்றன. அதன் பின்னணியிலேயே கொபி அனானின் அறிக்கை வெளிவந்துள்ளது. அனான் அமெரிக்காவின் பொம்மை என்பது உலகம் அறிந்த உண்மைச் செய்தி. ஐ.நா சபையே அமெரிக்காவின் பொம்மை என்பது பல சந்தர்ப்பத்தில் நிறுவப்பட்டுள்ளது. எனவே, அமெரிக்காவின் பின்வாங்கலுக்கும் கொபிஅனானின் கண்டனத்திற்கும் அதிக உறவுகாணப்படுவது யதார்த்தமானதே. அதாவது, அமெரிக்காவின் வெளியேற்றம் இலங்கை அரசியலில் எச்சரிக்கையாக மாறியுள்ளது. அமெரிக்கா சிறிலங்கா அரசாங்கத்தை நேரடியாக தான் கண்டிக்காது ஐ.நாவின் ஊடாக கௌசல்யனின் படுகொலையைக் கண்டித்துள்ளது. கௌசல்யனின் விடயத்தை அமெரிக்கா பயன்படுத்திக்கொண்டு சனாதிபதிக்கும் சிங்கள மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் தெளிவான சமிக்ஞை ஒன்றை அமெரிக்கா வெளிப்படுத்தியுள்ளது.









இதனை மேலும் சிலவிடயங்களுக்கூடாக நோக்குவோம். கௌசல்யனின் படுகொலையுடன் இலங்கை வந்த இன்னோர் தூதுவர் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசி கிழக்கிலங்கையில் ஆற்றிய உரையில் குறிப்பிட்ட அம்சம் கவனிக்கத்தக்கது. அங்கு சிறுவர்களைச் சந்தித்து உரையாற்றும்போது, ஜப்பானியரின் இரண்டாம் உலகப்போரை நினைவு-கூர்ந்ததுடன் எங்களைப் போல நீங்கள் முன்னுக்கு வரமுடியும் என்றும் உங்களைப் போலவே நாமும் அப்போது இருந்தோம் எனவும் சுட்டிக் காட்டியிருந்தார். இது சிறிலங்கா அராசங்கத்திற்கு நெருக்கடி கொடுக்கும் விடயமாகும். ஒரு வகையில் அகாசியின் தற்போதைய விஜயம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அமெரிக்காவின் போக்கை கோடிட்டுக் காட்டுவதாகவே அமைந்திருந்தது. மேலும் அகாசி வடக்கு-கிழக்குக்கு எந்தவித நிவாரணத்தையும் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்பதையும் தென்னிலங்கையுடன் சமமாக நிவாரண வேலைக்ளை ஆற்ற சிறிலங்கா அரசுதயாராக இல்லை என்பதையும் தெளிவாக உலகத்திற்கு வெளிப்படுத்தியிருந்தார்.

மேலும் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் மற்றும் மூத்த உறுப்பினர்களும் கிழக்கிலங்கை விஜயம் மேலும் அம்பலப்படுத்தலை சாதகமாக்கியதுடன் அகாசி அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த பின்பே சிறி லங்காவின் சனாதிபதியையும், பிரதமரையும் சந்தித்திருந்தார். சந்திப்பின் முக்கியத்துவத்தி னூடாக நிலைமையை வெளிப்படுத்துவதே ஒரு இராஜதந்திரியின் பணியும் இராஜதந்திரத்தின் வடிவமு மாகும்.

இறுதியாக சனாதிபதி கிழக்குக்கு விஜயம் செய்ய எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளின் அரசியல்குழுவின் விஜயத்தை கண்டு அச்சமடைந்ததன் பிரதிபலிப்போடு, தமிழ் - முஸ்லிம் முறுகளையும் விரிசலையும் பயன்படுத்தி அரசியல் நடத்திய சக்திகளுக்கு புலிகளின் அரசியல் குழுவினரது நடவடிக்கை சற்று ஆபத்தானதாகவே அமைந்துள்ளது. அதற்கு நிகராக அல்லது போட்டியாக கிழக்கிலங்கைக்கு சனாதிபதி விஜயம் மேற்கொள்ள விரும்பாது சிறிலங்கா அரசாங்கத்தின் பலவீனத்தையும் தெளிவற்ற கொள்கையையுமே காட்டுகின்றது.

எனவே இலங்கை அரசியலில் இரண்டு பிரதான தலைமைகள் உருவாகிவிட்டன. ஒன்று சிறிலங்கா மற்றயது வடக்கு-கிழக்கு ஆகும். சிறிலங்கா அரசு அல்லது விடுதலைப்புலிகள் என்ற இரண்டு பரிமாண அரசியல் பிராந்திய அரசுக்கும் சர்வதேச அரசுகளுக்கும் அவசியமானதாக மாற்றிவிட்டது. சிறிலங்கா ஒத்துழைக்கத்தவறினால் தமிழர் தரப்பை அணுகுவது தமிழ் தரப்புடன் முரண்பட்ட சக்திகள் சிறிலங்காத்தரப்பை அணுகுவ்து என்ற போக்கில் இலங்கை அரசியல் அமைந்துள்ளது.

---

## சந்தேக மணியத்தார்...



கிளாலியில சூனியப்பிரதேசத்தில ஆமிக்காரருக்கு என்ன வேலை.

அப்பிடித்தான் அவைக்கு வரவேண்டிய தேவையிருந்தாலும் இஞ்சால எங்கட பிள்ளையளிட்ட அனுமதி எடுக்கவேண்டாமோ.

இவையள் முதலில இப்பிடி ஒராளா, இரண்டு பேரா நடந்து வருவினம்.

பிறகு மெல்லமா சேட்டை விட்டுப்பார்ப்பினம் அதுக்குப் பிறகு தங்கட பொயிண்டுகளை முன்னுக்குத் தள்ளிப் பார்ப்பினம் இவையிண்ட விளையாட்டு எங்களுக்கு விளங்காதோ என்ன?

இதுக்கு முந்தி இப்பிடித்தான் ஒரு பிரச்சினை 'ஸ்டான்பையில' இருக்கு.

அதாவது பாருங்கோ நாகர்கோயில் பகுதியில முந்தி அவையள் இருந்த இடத்திலிருந்து சூனியப்பிரதேசத்துக்குள் முன்னேறி பொயிண்ட அடிச்சவை.

இப்ப எங்கடபிள்ளையளிண்ட பக்கத்தால ஒரு 'சைலன்ட்மூவ' கேட்டால் கூறுவினம் ஒராள் இரண்டு பேர் வந்து என்னசெய்ய எண்டு?

ஒராள் என்ன இவங்கள் பாதி மனிதனே எங்கட நிலத்தை விழுங்கக் கூடியவையள்.

அதோட ஏதாவது ஒரு சேட்டையை விட்டுப்போட்டு இதுக்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை. இது கருணா குழுவினரின் வேலையாக இருக்கலாம் எண்டும் கதைவிடுவினம்.

ஒண்டு மட்டும் நாங்கள் முழிச்சே இருக்க வேணும் எண்டிறதை மட்டும் அடிக்கடி ஞாபகப்படுத்தினபடியே இருக்கினம்.

இவையள் இனி இந்த சம்பவத்திற்கு புதுக் கதை அளக்க முயற்சி செய்யினம்.

இராணுவப் பேச்சாளர் தாங்கள் காத்திருக்கிறதா எனக் கூறினவர் அல்லோ.எதுக்குக் காத்திருக்கிறாரோ யாருக்குத் தெரியும்

அதுசரி சூனியப் பிரதேசத்துக்குள்ள வந்தவையள் ஆயுதங்களோடவேற வந்திருக்கினம்.

சொல்லுவினமே முந்துரவன் வெல்லுவான் எண்டு அப்ப இதில எங்கட பிள்ளையள் சரியாத்தான் நடந்திருக்கினம்...?

# கொட்டிச்சிதறி சீரழிகிறது நெல் மணிகள்

சுழியன்

வடக்கு கிழக்கின் நெற்களஞ்சியமாகக் காணப்படுவது வன்னிப் பிரதேசமாகும். இதற்குக் காரணம் இப்பிரதேச வாழ் மக்களுக்கு பெரும் கொடையாக கிடைக்கப் பெற்ற இரணைமடுக் குளமாகும். இது வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் மிகப்பெரிய குளமாகும். இதன் கீழ் பல ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.


தர்மலிங்கம்
சுந்தரேஸ்வரன்

தெற்காசிய மக்களைப் பொறுத்தவரையில் அவர்களின் பிரதான உணவு சோறு, அதனை நாம் பெற்றுக் கொள்வதற்குரியவர்கள் விவசாயிகள். அவர்கள் இன்று பல பிரச்சினைகளை எம்மோடு பகிர்ந்து கொண்டனர். எமது பிரதேசத்தை பொறுத்தவரை விவசாயம் மிகப் பிரதான தொழில்களில் ஒன்று. அதிலும் நெற்பயிர்ச் செய்கை முக்கியமானது. காலபோகம் சிறுபோகம் என இரண்டுமுறை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. கால போகத்திற்கு பெரும்பாலும் மழையை நம்பி விதைப்பதனால் அதிகமான நிலத்தில் பயிரிடப்படுகிறது. சிறுபோகத்தில் நீர்ப்பாசன எல்லைக்குட்பட்ட வரையறுக்கப்பட்ட நிலத்தினிலேயே பயிரிடப்பட்டு வருவது வழக்கம். அந்த வகையில் கால போக நெற்பயிர் அறுவடை செய்யும் இந்த நேரத்தில் அந்த விவசாயிகள் எதிர் கொண்ட பிரச்சினைகளை தர்மலிங்கம் என்ற விவசாயி எமக்கு இவ்வாறு கூறுகிறார்.

''நான் பத்து ஏக்கர் விதைச்சனான் இப்போது பயிர்கள் அறுவடை நிலைக்கு அப்பாற்பட்டுக் காணப்படுகிறது. நானும் வேலைக்கு ஆட்களைத் தேடிக் களைச்சுப் போட்டன் ஒருவரும் இருக்கிறதா தெரியவில்லை. மெசினில வெட்டுவம் என்று பார்த்தால் அவையளும் மாட்டன் என்று சொல்லிப் போட்டாங்கள். ஏனென்றால் என்ர வயல் படுத்திட்டு காலம் கடந்து வெட்டினால் அரைவாசி நெல்தான் கைக்கு வரும் மிச்சமெல்லாம் கொட்டி விடும் இப்படியே இந்த நிலை தொடர்ந்தால் விவசாயத்தை விட்டிட்டு வேறு ஏதாவதுதான் செய்யவேண்டும்.

இப்படி எத்தனை விவசாயிகள் எமது பிரதேசத்தில் இருப்பார்கள். எமது மண்ணில் பிரதான தொழில்களில் ஒன்று விவசாயம். அதன் நிலை இன்று இவ்வாறு உள்ளது என்பது கவலைக்குரியதே. மேலும் அதே பிரதேசத்தைச் சேர்ந்த மற்றொரு விவசாயியான சுந்தரேஸ்வரன் என்பவர் கூறுகிறார்.

''நான் தம்பி பதினைந்து ஏக்கர் விதைத்திருக்கிறன் ஆனால் அறுவடை நிலையில் இருந்தும் இன்னும் வெட்டப்படவில்லை. காரணம் வேலையாட்கள் பிரச்சினை தான். காலம் பிந்தி வெட்டினாலும் சேதம்தான் ஏற்படும் முன்னர் மட்டக்களப்பு, அம்பாறையில் இருந்து வந்து வேலையாட்கள் வேலை செய்தார்கள் இப்போது அவர்கள் வரவும் குறைந்து விட்டது. இருக்கின்ற வேலையாட்களும் அதிகளவான கூலி கேட்கின்றார்கள். என்ன செய்வது என்றே தெரியாமல் இருக்கிறது. என வேதனையுடன் கூறினார்.

ஒரு ஏக்கர் அறுவடை செய்வதற்கு ஆறாயிரம் கூலி கொடுக்க வேண்டியுள்ளது. இதைவிட இருக்கின்ற வேலையாட்களும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி அதிகளவான கூலிகளைக் கேட்கின்றார்கள். சாதாரணமாக 350-400ரூபா வரை கேட்கின்றனர் அதைவிட ஒரு ஏக்கர் பயிர் செய்வதற்கு 20000 - 25000 ரூபா வரை மொத்தச் செலவு ஏற்படுகின்றது. இவ்வாறான செலவுகளுக்கும் மத்தியில் அறுவடை செய்து பின்னர் விற்பனை செய்யும் நேரத்தில் போதியளவு வருமானம் கிடைக்காமை மற்றொரு பிரச்சினையாகும். இந்தச் சோக நிலை தொடர்ந்தால் இனிவரும் காலங்களில் இளைய தலைமுறையினர் விவசாயத்தில் இறங்குவதே சந்தேகமாகும். எனவே இவற்றுக்குரிய தீர்வை காண வேண்டியது பொறுப்பு வாய்ந்த அனைவரினதும் கடமையாகும்.



இந்நிலையில் மற்றொரு விவசாயியான தம்பிப்பிள்ளை கூறுவதனைக் கேட்போம்.

''நான் தம்பி ஐம்பத்தி நான்காம் ஆண்டிலிருந்து விவசாயம் செய்து வருகின்றேன். ஆனால் கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாகத்தான் இந்தக் கூலிப் பிரச்சினையை எதிர் நோக்குகின்றோம். வேலையாட்களை பிடிச்சு, வெட்டிக் கட்டி, சூடு வைத்து, அடித்து எடுப்பதிலும் பார்க்க மெசினால வெட்டுவதில் இலாபம் இருக்கிறது. அத்தோடு கால விரையத்தையும் தடுக்கலாம்.''

இந்த நிலையில்தான் நாம் இனி பாரம்பரியத்தில் இருந்து மாறவேண்டிய ஓர் நிலை ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. நவீன உபகரணங்கள் மூலம் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தவேண்டிய கட்டாயத் தேவை எழுந்துள்ளது. இவ்வாறான புதிய மாற்றங்களை புகுத்தாவிடின் அதன் எதிர்காலம் பிரகாசமற்றுப் போய்விடும். தற்போது வன்னி வேளாண் சேவையினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அறுவடை இயந்திரத்திகு பெருமளவு கேள்வி ஏற்பட்டுள்ளது. ஆனால், அதற்கேற்ப போதியளவு இயந்திரங்கள் இல்லை விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்ற இவ் இயந்திரத்தை காலப்போக்கில் அதிகளவு இறக்குமதி செய்தால் எமது விவசாயிகளின் பெரும் பிரச்சினை தீர்வதோடு விவசாயிகளையும் ஊக்குவித்ததாக அமையும் என்பது உண்மையே. அத்தோடு பெருமளவான சிறிய விவசாயிகள் சுழற்சிமுறையில் தாங்களே அறுவடை செய்து கொள்கின்றார்கள். அதாவது பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் மக்கள் தங்களுடைய தேவைகளை எவ்வாறு நிறைவேற்றிக் கொண்டனரோ அவ்வாறுதான் இன்று பல சிறிய விவசாயிகள் தங்களுடைய அறுவடைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றனர். அதிகளவான தொழிலாளர்கள் நிறுவனங்களிலும் அமைப்புகளிலும் மாதாந்த சம்பளத்தில் வேலை செய்யவே விரும்புகின்றார்கள் அதன் மூலம் அவர்கள் ஏதோ ஒரு கௌரவம், அந்தஸ்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர் போலும் இன்று கூலி வேலையில் பெரும்பாலானவர்களின் நாட்டம் குறைந்து கொண்டே செல்கின்றது. இந்த நிலை தொடர்ந்தால் வரும் காலத்தில் வேலையாட்களின் பிரச்சினை பெரும் பிரச்சினையாக மாறிவிடும் இதனால் தற்போது இருக்கின்ற மனித வலுவிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இயந்திர வலு அறிமுகம் இருக்கவேண்டியது அவசியம்.

இப்போது கட்டட நிர்மாணப்பணிகளில் அதிகளவான தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர் வேலையாட்கள் பிரச்சினைக்கு மற்றொரு காரணமாகும் நிர்மானப் பணிகள் தொடர்ந்து இப்போது இருக்கின்ற நிலையில் நீடிக்காது. சில காலங்களின் பின் வேலையாட்கள் சற்று அதிகரிக்கும் நிலைமையுண்டு இந்நிலையில் நாம் அவதானமாக இருக்கவேண்டிய விடயம் என்னவெனின் கூலித் தொழிலையே நம்பியிருக்கின்ற எமது மக்களின் வாழ்விற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் இயந்திர தொழில்நுட்ப அறிமுகம் அமைய வேண்டும் என்ப கட்டாயமே எனவே இந் தொழில்நுட்பத்தை அறிமுக செய்கின்ற அமைப்புக்கள் கவனத்தில் எடுக்கவேண், என்னவெனில் எமது பிரதே விவசாயிகளும் பாதிக்கப்படக்கூடாது அதே நேரம் இருக்கின்ற மனித வலுவும் பாதிக்கப்படக்கூடாது. ஆகவே இரண்டுக்குமான ஓர்சமநிலையில் இயந்திர வலு, மனிதவலுப் பயன்பாடு இருக்க வேண்டும்.

அதைவிட விவசாயிகளைப் பொறுத்தவரை பசளை கிருமினாசினி என பொருமளவான உள்ளீட்டுச் செலவுகளை மேற்கொண்டு வெளியீடுகளைப் பெற்ற அவர்கள் சந்தைப்படுத்தும் போது செலவுக் கேற்ற வருமானம் கிடைப்பதில்லை இது அவர்களின் விவசாயம் மீதான ஆர்வத்தைக் குறைத்துவிடும். அதனைத் தவிர்க்கும் முகமாக காலத்திற்குக் காலம் கட்டுப்பாட்டு விலையினை மறுபரிசீலனை செய்வது அவசியம் அத்தோடு அதிகளவான விளைச்சல் களைத் தருகின்ற புதிய புதிய விதை வகைகளை அறிமுகப் படுத்துவதும் சிறந்ததாகும். எவ்வாறேர் நாம் விவசாயத்தையும் விவசாயியையும் ஊக்குவிக்கவேண்டும் அதே நேரம் கூலித்தொழிலையே நம்பியிருக்கின்ற எமது மக்களையும் பாதுகாக்க வேண்டும்.

# விலகிய பயணங்கள்

விவசாயத்துறையில் படித்த என்னுடைய நண்பரொருவர் இப்போது வங்கியொன்றில் மேலாளராக வேலை செய்கிறார். இதே துறையில் பயின்ற இன்னுமொரு நண்பர் வேறு திணைக் களம் ஒன்றில் பொறுப்பதிகாரியாக வேலை பார்க்கிறார். இப்படி எனக்கு அறிமுகமில்லாத பலர் இந்தத துறையில் படித்துவிட்டு இதற்குச் சம்பந்த மில்லாத வேறு பகுதிகளில் வேலை செய்கிறார்கள். அந்தப் பகுதிகளில் அவர்கள் பொறுப் பதிகாரி களாகவும் மேல்நிலை உத்தி யோகத்திலும் கூட இருக்கி றார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் கைநிறையச் சம்பளம் கிடைக்கிறது. பிறவச திகள் தாராளமாகவுண்டு. மதிப்பி ருக்கிறது. இவ்வளவும் வேலை செய்யுமிடத்தில் இருக்கும்போது எதற்காக விளங்காத ஒரு துறை யில் அந்தத்துறையில் படித்து விட்டோம் என்பதற்காக அதைக் கட்டிப்பிடித்துக்கொண்டு சிரமப் படவேணும்? என்று அவர்கள் யோசிக்கிறார்கள் போலும்.





விவசாயத்துறையில் படிக்கிறோம் என்பதை வெளியில் சொல்வதற்கே சில மாணவர்கள் வெட்கப்படுவதைப் பார்த்திருக்கிறேன். அதே போல விவசாயத்துறையில் வேலை செய்கிறேன் என்பதைச் சொல்வதற்கும் சிலர் வெட்கப் படுகிறார்கள். வயலிலும் வரம்பிலும் வாய்க்காலிலும் தோட்டத்திலும் நடந்துதிரிவது படித்தபடிப்புக்கு பொருத்தமில்லை என்பது அவர் களுடைய கருத்து. தோட்டக்கார ரோடும் வயலில் நிற்கும் விவ சாயியோடும் தொடர்ந்து மட்டை யடிக்க வேண்டுமா என்ற அபிப்பிராயம் வேறு. இப்படியான காரியங் களெல்லாம் படித்துப் பட்டதாரியாகி வெளியே வந்து எதிர்காலத்தில் காலடி எடுத்து வைக்கும் இளையோ ருக்கு சிறுமைப்படுத்தும் விசயங் களாகவே இருக்கின்றன.

இல்லாவிட்டால் விவசா யத்துறையிலிருந்து பட்டதாரிகளாக வெளியேறுவோர் எதற்காக அந்தத் துறையில் வேலைசெய்யாமல் வேறு திணைக்களங்களை நாடிப்போகி றார்கள்? அல்லது எத்தனைபேர் ஆர்வத்தோடும் முழு ஈடுபாட்டோடும் இந்தத் துறையில் வேலைசெய்ய வருகிறார்கள்?

எங்கேனும் எப்போதேனும் அதிசயமாக, அபூர்வமாக ஓரிருவர் ஆர்வத்தோடு தாம்படித்த கல்வியை அதேதுறையில் பயன்படுத்த வருகிறார்கள். தொடர்ந்து அந்தத் துறை பற்றிச் சிந்தித்து அதனை வளர்க்கவோ, மேம்படுத்தவோ முனை கிறார்கள். மிகக் குறைவானவர்கள் மட்டும் ஒரு துறையில் முயன்று பெரும்மாற்றங்களையோ வளர்ச்சி யையோ ஏற்படுத்திவிடுவது என்பது சாத்தியக் குறைவானது. என் நண்ப னொருவர் சொல்வது போல திறமை யுள்ள ஓர்மம் உள்ள ஒருவரே வர லாற்றை புதிய பாதையில் திருப்பப் போதும். ஆளுமையிலும் மனப் பாங்கிலும்தான் தங்கியிருக் கின்றன எல்லாம் என்பது ஓரளவுக்குச் சரியாக இருந்தாலும் அந்த ஆளுமை யோடு இணைந்து ஏனையவர்களும் திருந்தவேணுமே தவிர இப்படி வரு வோர் தமது திறன்களையும் ஆளு மைகளையும் அந்தத்துறை சார்ந்து வளர்ப்பதற்குப் பதிலாக அதிலிருந்தே பின்வாங்குகிறார்களே. இவை யெல்லாம் ஏன் நிகழ்கின்றன.

எங்களிடையே இருக்கிற 'குறைமனது' சிலதுறைகளைக் குறைத்தே மதிப்பிடுகிறது. அதனால் தான் அந்தத்துறைகளிலும் அந்தத்துறைகளின் தொழிலிலும் ஈடுபடப் பின்னிற்கிறது, கூச்சப் படுகிறது, தயங்குகிறது எங்களின் குறைமனது.

படிக்கும்போது உயர் கல்வித் தேர்வுக்கு ஒரு உபாயமாக, வேறுவழியின்றி வெவ்வேறு பிரிவு களில் நுழைகிறார்கள் ஒவ்வொரு வரும். ஏனைய துறைகளில் இடமில்லை அவற்றில் கடுமையான போட்டிகள் என்பதால் பிறதுறை களுக்கு வருகிறார்கள் பலர். குறிப் பிட்ட துறைகளில் ஆர்வம், ஈடுபாடு, மதிப்பு, விருப்பம் என எதுவுமே யில்லாமல் வருகிறார்கள் இவர்கள். இந்தத் துறைகளில் தேர்வாவதற்கு வசதிகளுண்டு என்பதுதான் இவற்றை இவர்கள் தேர்வதற்குக் காரணம். விவசாயம், கடற்றொழில், நாடகமும் அரங்கியலும், ஓவியம் என விரிகின்ற பல துறைகளில் கூடு தலானவர்களை உட்பட வைக்கவேண் டும் என்பதற்காகவே இவற்றுக்குரிய வாசல்களிருக்கின்றன. புள்ளிகள் குறைவாகவும், இட ஒதுக்கீடுகள் கூடுதலாகவும் இந்தத்துறைகளுக்கு இருக்கின்றன. இந்த வசதி வாய்ப்பு களைப் பயன்படுத்தி உள்நுழைந்து படித்துப் பட்டம் பெற்றுவிட்டு பிறகு வேறு இடங்களுக்குத் தாவுவதுதான் பொது நடப்பாகவுள்ளது.


இப்படி நடக்கும்போது குறிப்பிட்ட துறைத் தொழில்களில் ஈடுபட்டுழைக்கின்ற மக்களின் வளர்ச்சி மட்டுப்படுத்தப்படுகிறது. அதேவேளையில் அந்தத்துறை யிலும் வளர்ச்சியில்லை. அதனால் எப்போதும் ஆரம்பநிலையிலும், சிரம நிலையிலும்தான் அந்தத் தொழில் தரும் துறையும் தேங்கியிருக்கிறது.

ஒவ்வொரு வருடமும் பலர் ஒவ்வொரு துறையிருந்தும் பட்டம் பெற்றுக்கொண்டு மக்களிடம் வருகின்றார்கள். வருகிறவர்கள் பிறகு அரசாங்க உத்தியோகமொன்றுக்கா கவே காத்திருக்கிறார்கள். (சிலர் சர்வ தேசத் தொண்டர் நிறுவனங் களில் தொழில் தேடுகிறார்கள்) உத்தி யோகத் துக்காகக் காத்திருக்கும் காலத்தில் படித்தவர்கள் கூட்டாகச் சேர்ந்து தாம் படித்த துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்காகவும் சிந்திக்கலாம். புதியவிடயங்களைக் கண்டறிய முயற்சிக்கலாம். அவை பரிசோதனை களாகவே அமையட்டும். பரிசோதனை முயற்சிகளினூடகவேதான் உலகின் சகல கண்டுபிடிப்புகளும் வளர்ச்சி களும் ஏற்பட்டன. சில முயற்சி களை விரிவாக்கலாம். சில முயற்சி களை புதிதாகத் தொடங்கலாம். மக்களுக்கு தாங்கள் பெற்ற அறிவை பகிரலாம். அவர்களோடு இணைந்து வேலை செய்து நடைமுறை அனுப வங்களைப் பெற்றுக்கொள்ளலாம் அப்படிச் செய்யும்போது மக்கள் + தொழிலாளர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்க லாம். புதிய விளக்கங்கள் அதன்மூலம் ஏற்படும் புதிய விடயங்கள் புரியும். புதிய சிந்தனைகள் உருவாகும். மக்களுக்கும் படித்தவர் களுக்குமிடையிலான உறவு மலரும். இடைவெளியற்றுப் போகும். தொடர்ந்து அந்தத் துறையில் ஈடுபடு வதற்கான ஆர்வம் பிறக் கும். குறிப்பிட்ட துறை யில் பிடிப்பேறபடும். இவ்வாறான செயல்கள் துறையின் வளர்ச்சியை உயர்த்திவிடும். அதன் மூலம் சனங்களிடமும் சூழலிலும் வளர்ச்சியைக் காணமுடியும்.

இந்த அணுகுமுறையோ பொறுப்போ பலருக்கும் இல்லாத நிலைதான் தொடர்ந்தும் நீடிக்கிறது. இதுவேகவலையளிக்கும் பெரு விசயம்.

கல்விக்குறையபாட்டைத் தொடர்ந்தும் பலரும் குறைசொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் அதனைத்திருத்துவதற்கும் மாற்று வதற்கும் முயல்வதாக எந்த அறிகுறியும் தெரியவில்லை. குறைசொல்வதும் விமர்சிப்பதும் ஒரு வித அறிவுஜீவித்தனமான அடை யாளமாக மாறிவிட்டது. அதே வேளை தமது பொறுப்பிலிருந்தும் தப்பித்துக்கொள்வதற்கான ஒரு வழியாகவும் இந்த உத்தியைப் பலர் பின்பற்றுகிறார்கள்.

கல்வி முறைக் குறைபாடு ஒரு பக்கமென்றால் மனப்பாங்கில் உள்ள வீழ்ச்சி மற்றப்பக்கமாக வுள்ளது. பெற்ற கல்வியை அதன் குறைபாட்டை நீக்கிவிட்டு புதிதாக எழுவதற்கு மனப்பாங்கில் எழுச்சி வேணும். நல்ல மனப்பாங்கை உருவாக்குவதற்கும் கல்விதானே வேணும் எனச் சிலர் வாதிடுகிறார்கள், இருக்கலாம். ஆனால், மனப்பாங்கின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் கல்விக் கப்பாலான சிந்தனைசார் நிகழ்ச்சி கள் சமூகத்தில் இருக்கின்றன. அதனை துலக்கமடையச் செய்யலாம். அப்படிச்செய்யவேணும். அடுத்தது



அவ்வாறான சிந்தனை முனைப்புக்கும் செயலூக்கத்துக்கும் ஊடகங்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் இருக்கிறது. வேண்டுமானால் அதனை இன்னும் உயர்த்தலாம், தீவிரமாக்கலாம்.

ஊடகங்களுடனும் சமூகச் சிந்தனைசார் நிகழ்ச்சிகளுடனும் சகலரையும் இணைப்பதும், சகலரும் இணைவதும் இன்று அவசியமாகி யுள்ளது. இவ்வாறு ஒரு கூட்டுறவும் கூட்டுணர்வும் ஏற்படுவதன் மூலம் துறைசார் கல்வியைப் படித்தவர்கள் வேறிடங்களுக்கு நகராமல் தடுக்க முடியும். அவர்களும் வேறுதிசை நோக்கி முகம் வைக்காமல் தம்மை பார்க்கமுடியும்.

இல்லாதவரை குறுக்கு வழிகளும் விலகிய பயணங்களும் தொடர்ந்துகொண்டேயிருக்கும்.

எனக்கு விவசாயிகளாக இருக்கும் பலருடைய பிள்ளைகள் விவசாயத்துறையில் படித்துப் பட்டம் பெற்றவர்கள். அதில் மிகச் சிலர் மட்டும்தான் தங்கள் குடும்ப விவசாயத்துக்கே பயன்படுகிறார்கள். மற்றவர்கள் பெற்றோர் செய்த விவசாயத்தையே கைவிடும் படியான வாழ்க்கைக்கு மாறிவிட்டார்கள்.

எல்லோரும் ஒரு மையத் தைச் சுற்றிக்கொண்டிருக்க வேண்டுமென்றில்லை. ஆனால் பொறுப்புகளிலிருந்து விலகியோடி விடவும்கூடாது. அடுத்தகட்ட வளர்ச்சியில், விருப்பத் தேர்வு நோக்கி இன்னொரு தளத்துக்குப் போகலாம். ஆனால் அதற்காக பொறுப்பிலிருந்தும் கடமையிலிருந்தும் சறுக்குவது சரியல்ல.

ஏற்கெனவே குறிப்பிட்ட நண்பர்களும் பிறரும் இப்போது தாங்கள் வேலை செய்கிற பணி களிலிருந்து முடிந்தவரையில் சனங் களுக்குரிய உதவிகளைச் செய் கிறார்கள். நல்ல மனப்பாங்கோடு இயங்குகிறார்கள். ஆனால், அவர்கள் படித்த துறையில் விட்டுச் சென்ற இடந்தான் இன்னும் தரிசாக இருக்கிறது.

வெளிவாசல் பாலன்



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 25 . 02 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

## பயனற்ற காலம்..?

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி மூன்றுவருடங்கள் கடந்துவிட்டது.

இதன் விளைபயனாக உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டிருக்கிறது, மக்களுக்கு போக்குவரத்துக்கு பாதைகள் திறந்துவிடப்பட்டுள்ளது. ஓரளவு பொருளாதார தடைநீக்கம் ஏற்பட்டுள்ளது. என்றவாறெல்லாம் புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூன்றாண்டுகால நிறைவின் வெற்றியாகப்பேசப்படுகிறது.

ஆனால், இதே புரிந்துணர்வு உடன்படிக்கையினை அடிப்படையாகக்கொண்டு எதனை முதன்மை இலக்காக அடையவேண்டுமெனக் கருதி இந்தப்புரிந்துணர்வு உடன்படிக்கை பிரசவிக்கப்பட்டதோ அந்த முதன்மை இலக்கு அதாவது நிரந்தர சமாதானமோ, மறுக்கப்பட்ட உரிமைகளோ தமிழ்மக்களுக்கு இன்றுவரை மறுக்கப்பட்டதாகவே உள்ளது.

இந்த வகையில் மூன்றாண்டு காலம் என்பது மக்களைப் பொறுத்தவரையில் பயனின்றி கடந்த மூன்றாண்டாகவே கொள்ளவேண்டியுள்ளது.

ஏனெனில் இந்த மூன்றாண்டு காலம் தமிழ் மக்களுக்கான வெறுமையான காலமாக அதாவது எந்த உரிமைகளும் பெற்றுத்தராத அதேவேளை மேலும் மேலும் நம்பிக்கையீனங்கள், அதிருப்திகள், கோபங்கள் என மக்களை கொதிப்படையச் செய்திருக்கிறதே தவிர, வேறொன்றையும் உருப்படியாக சாதித்துவிடவில்லை என்றுதான் கூறவேண்டும்.

இப்போது தமிழ் மக்களை வந்தடைந்த அற்ப சொற்ப உதவிகள் என்பதுகூட தமிழ்மக்கள் போராடிப் பெற்றவையே தவிர வேறு எந்த வகையிலும் பெற்றுக்கொண்டதல்ல.

அந்தவகையில் இப்போது போராடி அற்ப உதவிகளை பெறுவதைவிட தமிழ் மக்கள் களத்தில் போராடி பெற்றுக்கொண்ட உதவிகளும் உரிமைகளும் மிகப்பெரியது. இந்த நிலையில்தான் புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூன்றாண்டுகால நிறைவைத் தமிழ் மக்கள் கொண்டாடும் நிலையில் இருக்கவில்லை.

அதன் ஒரு அங்கமாகவே புலிகள் கூட புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூன்றாண்டுகால கொண்டாட்ட நிகழ்வுகள் எதிலும் கலந்துகொள்ளவில்லை. மறுவலமாக இந்த மூன்றாண்டுகால உடன்படிக்கையின் நிறைவை இலங்கை அரசும், கண்காணிப்புக்குழுவும் ஒரு சாதனையாக கருதி கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

அந்தவகையில் இலங்கை அரசைப்பொறுத்தவரை இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலமாக தென்னிலங்கையில் சாதித்துக்கொண்டதும் பெற்றுக்கொண்ட நலன்களும் ஏராளம்.

இதேபோன்று கண்காணிப்புக் குழுவைப் பொறுத்தவரையில் உலகில் போர்நிறுத்தங்களைக்கண்காணிப்பதில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளையும், ஆபத்துக்களையும்விட குறைந்தளவு நெருக்கடியோடு வெற்றிகரமாக மூன்றாண்டு காலத்தைக் கடந்துவிட்ட நடவடிக்கையாக இதனைக் கருதியிருக்கக் கூடும்.

இந்தவகையில் கண்காணிப்புக்குழுவின்பிரதித் தலைவரின் கூற்றும்காணப்பட்டது.

அரசைப்பொறுத்தவரையில் சமாதானச் செயலகப்பணிப்பாளர் ஜெயந்த தனபால யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. இது திருப்திகரமாகவுள்ளது என்றும் கூறியுள்ளார்.

அதாவது அரசினதும், கண்காணிப்புக் குழுவினதும் நிலைசார்ந்து நோக்கும்போது அவர்களுக்குத் திருப்திகரமாகவுள்ளது.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மூன்றாண்டு காலம் பயனின்றி கழிந்த ஒரு காலமாக மட்டுமே கருதவேண்டியுள்ளது.

## மறக்கப்படும் சமாதான முயற்சி

**மு.தமிழ்ச்செல்வன்**

சிறிலங்காவின் பொருளாதாரத்தில் ஏற்பட்டவீழ்ச்சியே சமாதானத்தின் எழுச்சி என்பதே பொருத்தமானதாக இருக்கும். அதாவது கடந்த மூன்றாண்டுகளுக்கு முன் சிறிலங்காவில் மொத்தத் தேசிய உற்பத்தி வீழ்ச்சி, அந்நியச் செலவாணி வருகை வீழ்ச்சி, தனிநபர் வருமான வீழ்ச்சி, வேலையின்மைப் பிரச்சினை, வெளிநாட்டுக் கடன்சுமை, வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகை அதிகரிப்பு இப்படி ஏகபட்ட பிரச்சினைகள் இதன் விளைவு தான் மூன்றாண்டுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்.

தங்களது அரசியல் வாழ்க்கையையும், பொருளாதாரத்தினையும் ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் யுத்தத்தை சில வருடங்களுக்கு ஒத்திவைக்க எண்ணியது சிங்களத் தலைமைகள். அதன் நிமிர்த்தமே சமாதானம் மாறாக உள்நாட்டில் கடந்த இரண்டரை தசாப்த காலமாக நிலவி வந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் நல்லெண்ண நோக்கில் அல்ல. மேற்கூறப்பட்ட பாதக பொருளாதார விளைவுகள் இருக்க, யுத்தம் நடக்குமாயின் பாதுகாப்புச் செலவினம் அதிகரித்து நாட்டின் பொருளாதாரம் பாதாளம் நோக்கி சென்றுவிடும். இவ்வாறான ஓர் நிலைமை ஏற்பட்டால் தென்னிலங்கை மக்களும் முதலாளி வர்க்கமும் அரசிற்கு எதிராக போராட்டம் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்கிவிடுவார்கள் அவ்வாறு நடக்குமாயின் அது தங்களது அரசியல் வாழ்க்கைக்கு ஆப்பு வைத்ததாக அமைந்து விடும். இதனை தென்னிலங்கை அரசியல் தலைமைகள் விரும்பவில்லை. எனவேதான் தங்களுடைய பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கு தேவைப்படும் காலத்திற்கு சமாதானம் எனும் நாடகத்தில் நடிக்கவேண்டிய நிலைக்கு சிங்கள தலைமைகள் தள்ளப்பட்டனர். அதன் ஒரு பகுதியாகவே பேச்சுவார்த்தை அரங்கேறியது.

நோர்வேயிலும் தாய்லாந்திலும் இரு தரப்பினரும் பல தடவைகள் சந்தித்துப்பேசினர். ஆனால் பயன் ஏதும் கிடைக்கவில்லை. காரணம் அரசானது பிரச்சினையை தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தை ஆரம்பித்திருந்தால் ஒரு சில சந்திப்புகளிலேயே பயன் கிடைத்திருக்கும். அதைவிடுத்து பொருளாதாரம் பலமடையத் தேவைப்படும் காலத்திற்கு சமாதானத்தை ஒரு பகடைக் காயாக பயன்படுத்தியது சிறிலங்கா அரசு. அத்தோடு காலத்தைக் கடத்துவதிலும் குறியாக இருந்தது. இதனை நன்றாக விளங்கிக் கொண்ட புலிகள் தங்களது இடைக்காலத் தன்னாட்சி அதிகார வரைவை சமர்ப்பித்ததோடு மட்டுமல்லாமல், இதுவரையான சந்திப்புக்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கப்பட்டால்தான் இனி அடுத்த கட்ட பேச்சுவார்த்தை எனக் கூறி தற்காலிகமாக பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக் கொண்டனா.

ரணில் அரசு செய்வதறியாது திணறிக் கொண்டிருந்த வேளையில் தான் சந்திரிகாவால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றமும், அதனால் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் இதனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த சந்திரிகா தான் ஒரு போர் விரும்பி என்பதனை



வெளிக்காட்ட விரும்பவில்லை. அத்தோடு தன்னால் சமாதானம் முறிவடைந்ததாக இருந்தால் சர்வதேச அழுத்தம் தன்மீது அதிகமாக இருக்கும். அது விடுதலைப் புலிகளுக்குச் சாதகமாக அமைந்துவிடும். மேலும் வளர்ச்சியடைந்துகொண்டுவந்த நாட்டின் பொருளாதாரம் மீண்டும் பழைய நிலைக்குச் சென்றுவிடும். எனவேதான் இவைகளை விரும்பாத அரசு யுத்தத்தை மேலும் சில வருடங்களுக்குப் பிற்போட எண்ணியது. அதன் மூலம் பொருளாதாரத்தினையும் தனது இராணுவத்தினையும் அரசு பலப்படுத்த விரும்பியது. அதுவரைக்கும் எவ்வாறு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காமல் இழுத்தடிப்பது என்றிருந்த அரசுக்கு ஜே.வி.பி பழம் நழுவி பாலில் விழுந்தது போன்று அமைந்து விட்டது. அதனை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள திட்டம் போட்ட வேளையில் தான் கடந்த வருட மாவீரர் தின உரை வந்தது. அதன் பின் நிலைமை சற்று தலைகீழாக மாறியது. அதாவது சமாதானத்தின் ஆயுளை நிர்ணயிக்கும் பொறுப்பை தேசியத்தலைவர் சிங்கள தேசத்திடம் ஒப்படைத்திருந்தார்.

அந்த உரையில் தலைவர் பேச்சுவார்த்தை இன்றி நிரந்தர தீர்வும் இன்றி ஓர் அரசியல் வெறுமைக்குள் இனிமேலும் தமிழ்மக்கள் வாழமாட்டார்கள் நாம் பொறுமையின் எல்லைக்கே சென்றுவிட்டதாகவும் கூறிய அவர் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க ஏதுவான ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காது போனால் நாம் தேசிய விடுதலைக்கான போராட்டத்தை ஆரம்பிப்பதை தவிர வேறு வழி இல்லை என்பதை உறுதியாக சிங்கள தேசத்திடம் கூறியிருந்தார். சமாதானத்தின் ஆயுள் முடிவடையப் போகிறது என அனைவரும் அப்போது எண்ணியிருந்தனர். சந்திரிகாவோ நோர்வையிடம் அவசர அவசரமாக தொடர்புகொண்டு போர் தொடங்குவதற்கான ஏது நிலைகள் மாவீரர்தின உரையில் கூறப்பட்டுள்ளதா? என கேட்டமை அப்போதைய பரபரப்பான நிலைமையினை புலப்படுத்தியது. மீண்டும் போர் தொடங்கப் போகிறது என எதிர் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் தான் அந்த டிசம்பர் 26 வந்தது.

அதன் பின் நிலைமை தலைகீழாகவே மாறிவிட்டிருந்தது. அனைவரும் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவு செய்வதில் கவனம் செலுத்தினர். இந்நிலையிலும் சிங்கள அரசு அரசியலே நடத்தியது. சுனாமியைப் பயன்படுத்தி பெரும் வெளிநாட்டு நிதியுதவிகளை பெற்றுக் கொண்டது. பெற்றுக் கொண்ட நிதியுதவியினை பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கு வழங்குவதில் இன்றுவரையும் பாரபட்சம் காட்டி வருகின்றது அரசு. பொது கட்டமைப்பை உருவாக்குவதிலும் அசட்டையீனத்தைக் காட்டி வருகின்றது. மேலும் வெளிநாடுகளில் இருந்து அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் மூலம் நேரடியாக வடக்குக் கிழக்குக்கு என கொண்டு வரும் நிவாரணப் பொருட்களுக்கு பெரும் வரிவிதிப்பது அல்லது அதனைத் தங்களின் ஊடாக வழங்குமாறு நிர்ப்பந்திப்பது போன்ற நடவடிக்கையானது அரசு வடக்குக் கிழக்கு தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள அக்கறையினை தெளிவாக காட்டி நிற்கின்றது.


சுனாமியின் பெயரில் கிடைத்த பெரும் நிதியை வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதனை அரசு விரும்பவில்லை. அதற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தால் பெரும்பாலும் சாத்தியப்படாமல் போய்விடும் என்பதை உணர்ந்த அரசு சுனாமி நிதியின் பயன்பாட்டை தமிழ் மக்கள் அடைவதை தவிர்ப்பதற்கு போரைக் கருவியாகப் பயன்படுத்த எண்ணியது. அதன் ஒரு விளைவுதான் கௌசல்யன் படுகொலை. சிறிலங்கா இராணுவம் மற்றும் புலனாய்வு பிரிவினரின் கூட்டு நடவடிக்கை மூலம் இப்படுகொலை மேற்கொள்ளப்பட்டமை தெளிவானவை. இதன் மூலம் அரசின் நோக்கம் யாதெனின் புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு போருக்கு வரலாம். அவ்வாறு வந்தால் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் விழுத்திய பெருமையைத் தட்டிவிடலாம் என சிங்கள தேசம் எண்ணியிருக்கலாம். அதாவது ஒன்று போர்நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக் கொண்ட பழி தம்மீது விழாது. இரண்டு சுனாமியின் நிதியை தமிழ் மக்களுக்குச் செல்லாது தடுத்து தனது பொருளாதாரத்தினையும் இராணுவத்தினையும் பலப்படுத்திக் கொள்ளலாம் என்று திட்டம் போட்டிருக்கலாம். அதற்காகவே விடுதலைப்புலிகளைச் சீண்டும் நடவடிக்கைகளிலும் இறங்கி இருக்கலாம். எது எப்படியோ மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரிக்காமல் தனது தேவைகளை நிறைவு செய்ய பெருமளவு நிதி குவிந்து கிடக்கிறது. அதனை தனது பொருளாதாரத்திற்கும் இராணுவத்திற்கும் மட்டும் பயன்படுத்த முடிவும் எடுத்து விட்டது.

# உண்மைகளை உணர்த்தும் தென்னிலங்கை









போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்பாட்டின் மூன்றாம் ஆண்டுப் பூர்த்தியை கொண்டாடுமளவுக்கு தென்னிலங்கையின் நிலவரம் இருக்கின்றது. அவர்களுக்கு உண்மையில் பிரகாசமான காலமாகவே மூன்றாண்டுகளும் இருந்துள்ளன. மாறாக தமிழர் தாயகம் அப்படி எதனையும் இக்காலப்பகுதிக்குள் கண்டு விடவில்லை.

மூன்றாண்டுகளை புரிந்துணர்வு உடன்படிக்கை எட்டும் நாட்களில், மக்கள் போராட்டங்கள் வெடித்த சூழலே கூடுதலாக இருந்திருக்கின்றன, இருக்கின்றன. இயற்கைப் பேரனர்த்தம் கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட முன்னர் இருந்த போராட்டத் தீவிரம் இப்போது மீண்டும் முனைப்புப்பெறத்தொடங்கிவிட்டது. போராட்டம் இன்றி தமிழ் மக்கள் வாழமுடியாது என்ற உண்மையை தென்னிலங்கை அடிக்கடி கடுமையான தொனியில் உணர்த்திக்கொண்டிருக்கின்றது. ஒரு இடைமாறு காலகட்டம் என்று அரசியலில் கருதப்பட்ட இயற்கை அனர்த்தத்தின் பின்பான காலம் கூட அதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

சர்வதேசம் வழங்கும் நிவாரண உதவிகளைக் கூட தமிழர் பகுதியை வந்தடையச் செய்யப் போராடவும் இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்ளவும் வேண்டியிருந்தது. தமிழ் மக்களை புறமொதுக்கும் மிகத் தீவிரமான செயற்பாட்டின் விளைவாக இதனை உணர முடியும்.

இப்போது அந்த இடைமாறுகால கட்டமும் முடிவடைந்து திரும்பவும் நெடிய விடுதலைப் பயணத்துக்கான பாதையில் தமிழர் தாயகம் ஏறிவிட்டுள்ளது.

மனிதாபிமான, அவசர நிவாரணப் பணிகளில் மட்டும் தீவிரப்பட்டிருந்த தமிழர் தரப்பை, தென்னிலங்கையில் நிகழ்த்திய படுகொலை திசை திருப்பியுள்ளது. தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான சக்திகளை ஆயுதமும் பாதுகாப்பும் கொடுத்துப் பாவிப்பதை லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்டோரை படுகொலை செய்ததன் மூலமாக உணர்த்தியுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட தென்னிலங்கையின் பிரதிபலிப்புக்கள் பல தமிழர் விரோதப் போக்கின் வெளிப்பாடாகவே உள்ளன. இக் கொலையை நியாயப்படுத்தி ஆங்காங்கே தென்னிலங்கை ஊடகங்களில் வெளியிடப்பட்ட கருத்துக்களும் அநாமதேயமான முறையில் வெளியாகி முக்கியப்படுத்தப்பட்ட அறிக்கைகளும் அமைதி வழியை விரும்புவனபோல காட்டவில்லை.

மாறாக வடக்கும் கிழக்கும் தனித் தனியானவை என்பதான தோற்றத்தையும் கருணா அணி என்பது மிகுந்த பலத்துடன் உள்ளது என்ற மாயையையும் உருவாக்கும் தன்மையுடையவையாகவே உள்ளன. தென்தமிழீழத்தில் உள்ள விடுதலைப்புலிகளை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குவதற்கு பிரதேச வாதத்தை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றன.

ஆனால், கௌசல்யன் உள்ளிட்டவர்களின் வீரமரணத்தைத் தொடர்ந்து எழுந்துள்ள மக்கள் போராட்டங்கள் இவற்றை அர்த்தமற்றதாக்குவதாக நடக்கின்றன. வடபகுதி முழுவதும் இடையாறாது நடந்துவரும் வெகுஜனப் போராட்டங்கள் இந்தச் செய்தியை தெளிவாக உணர்த்தும்.

கடந்த வாரம் முழுவதும் யாழ்ப்பாணக் குடாநாடு ஒவ்வொரு அமைப்பு ரீதியான வெகுஜனப் போராட்டங்களை நடத்தியது. ஐந்து நாட்களும் ஒவ்வொரு தரப்பினரால் நடாத்தப்பட்ட போராட்டமும் புரிந்துணர்வு உடன்பாட்டின் வழியாக தமிழினம் வஞ்சிக்கப்படுவதை சீற்றம் கொண்ட குரலில் எடுத்துரைத்துள்ளது.

இனிமேலும் சிறிலங்காவின் இத் தகைய ஏமாற்றுவித்தைகளுக்கு இடமளிப்பது முன்னைய மிதவாத அரசியல் தலைமைகள் அடைந்த முடிவையே காணச்செய்யும் என்பதை எடுத்துரைத்திருக்கின்றது. லெப்.கேணல் கௌசல்யன் உட்பட்டவர்களின் படுகொலைகளோடு தீவிரமாக வலுப்பெற்றுள்ள இக்கருத்து மன்னார்,வவுனியா, கிளிநொச்சி, முல்லைத் தீவுப்பகுதிகளில் இடம்பெற்ற போராட்டங்களிலும் பிரதிபலித்துள்ளது; தென்தமிழீழத்திலும் பிரதிபலித்திருக்கின்றது.

வரும் வாரம் இவை எல்லாவற்றுக்கும் மேலாக பெரும் வெகுஜனப் போராட்டம் குடாநாட்டில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது, இவை தவிர்க்கமுடியாது. போராடியாக வேண்டும் என்ற கட்டத்தை மீளவும் அடைந்து விட்டதை அடையாளப்படுத்துகின்றன.

ஆனால்,இவை யாவற்றையும் மழுங்கடிக்கவும், திசைதிருப்பவும் தென்னிலங்கை முற்படுகின்றது. இராணுவமும் அரசும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை வலிந்து அமுக்குகின்றன. அதில் மிக முக்கியமானதே வன்னியில் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை விடுதலைப் புலிகள் நிறுத்தியிருப்பது என்பது. அதேபோன்று அதிகளவான சிறுவர்களை படைகளில் சேர்த்திருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டாகும்.

இதனூடாக புரிந்துணர்வு உடன்பாட்டையும் சர்வதேச மனித உரிமைகளையும் விடுதலைப்புலிகள் மீறிவிட்டதாக பிரசாரப்படுத்தப்படுகின்றன. ஆனால், இவையாவும் தவறான, இட்டுக்கட்டப்பட்ட பரப்புரைகளே என்பது ஆதார பூர்வமாகவும், விஞ்ஞான பூர்வமாகவும் நிரூபிக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை சிறிலங்கா இராணுவத்தரப்பு மேற்கொண்டுவரும் ஆயுதத் தளபாடக் கொள்வனவுகள், வெளிநாடுகளில் பயிற்சி பெறும் திட்டங்கள், பாதுகாப்பு ஒப்பந்தங்கள் என்பன மிகத்தெளிவாக தமிழர்களுக்குரிய செய்தியைத் தெரிவிக்கின்றன. தமிழ் மக்களின போராட்டங்களுக்கான மேலதிக நியாயப்பாடுகளாகவும் அமைகின்றன. இந்த மூன்றாண்டு காலப்பகுதியில் இடையிடையே ஏற்பட்ட மாயைகளும் கலைந்து உண்மைகளும் வெளிச்சமாகியிருக்கின்றன. புரிந்துணர்வு உடன்பாட்டைத் தொடர்ந்து அமைதிப் பேச்சுக்கள் நடைபெற்றபோது தீர்வு ஒன்று ஏற்படலாம் என்றிருந்த எதிர்பார்ப்புக்களும் சுனாமிப் பேரலைகளின் தாக்குதலை அடுத்து தாயக - சிறிலங்காப் பகுதிகளுக்கு இடையில் ஒன்றிணைவு ஏற்படும் என்றிருந்த எதிர்பார்ப்புக்களும் ஊட்டப்பட்டன. ஆனால், அவை எவையுமே நடைபெறக்கூடியன அல்ல என்பதை மிகப்பிந்தியகாலம் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

ஆக, மாயைகள் முற்றாகக் கலைந்து உண்மை வெளிக்கத்தொடங்கிவிட்டது. இதை தமிழினம் உணர்ந்துள்ளது; உலகம் எந்தளவுக்கு உணர்ந்திருக்கின்றது;; என்பதே அடுத்த நகர்வுக்கான அடிப்படையைக் கொடுக்கும். ●

**ஞாபகன்**

---



# நெஞ்சு பொறுக்குதில்லையே...!

யாழ்ப்பாணம்- காங்கேசன்துறை வீதியில் அளவுக்கதிகமான பயணிகளை உள்வாங்கிக் கொண்டு அந்த மினிபஸ் விரைந்துகொண்டிருந்தது.

பஸ் தரிப்பிடம் என தீர்மானிக்கப்பட்ட இடங்களில் மட்டும் நிற்கும் பயணிகள் என்றில்லாது, பயணிகள் நிற்கின்ற சாதாரண இடங்களிலும் சாரதி ஓட்ட வேகத்தை குறைக்க நடத்துநர்-வாங்கோ, வாங்கோ என்று கேட்க அவர்கள் வாகனத்தில் இருக்கும் சனநெரிசலை பார்த்துவிட்டு பின்பக்கம் திரும்பிப்பார்க்க பஸ் தொடர்ந்தும் வேகமெடுக்க இவ்வாறு மாறி மாறி நடந்துகொண்டிருந்தது.

அந்த நெரிசலில் ஒட்டல் வகை நீளக்காற்சட்டையும் ரீசேட்டும் அணிந்திருந்த இளைஞர்கள் மூவரும் நின்றுகொண்டிருந்தனர். இவர்கள் மூவரும் தமிழர்கள் என்றே அந்த பஸ்ஸில் இருந்த அனைவரும் நினைத்திருப்பார்கள்; நினைத்தும் இருந்தனர்.

ஆனால், அவர்கள் மூவரும் சிங்கள மொழியிலேயே ஏதோ பேசிக் கதைத்து சிரித்துக்கொண்டனர். அப்போது பஸ்ஸில் இருந்த சிலர் இவர்கள் சிங்களவர் என நினைத்துக் கொள்ள சிலர் சிங்களவரா, தமிழரா என்று தெரியாது பேந்தப் பேந்த முழித்தனர்.

ஆனால், அவர்களின் பேச்சின் போதும், சிரிப்பும், நக்கல் பார்வையும் அந்த பஸ்ஸில் இருந்த நுண்கலைக் கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளை இம்சைப்படுத்துவனவாக இருக்கலாம் என சிலர் ஊகித்துக் கொண்டனர். ஆனாலும் அந்த இளைஞர்களோ தமது கூத்தினை விடுவதாக இல்லை.

ஆனால், அந்த மாணவிகள் எல்லோரும் தம்முடன் வந்த ஒரு மாணவியிடம் (இவர் வன்னி மாவட்டத்தைச் சேந்தவர்) கண்சாடையில் ஏதோ கேட்டுக்கொண்டிருந்தனர்.

மாணவிகள் இறங்குவதற்கான தூரம் சில மீற்றர்கள் இருக்கும் அப்போது அந்த மாணவி சிங்களத்திலேயே அந்த இளைஞர்களை பார்த்து நீங்கள் மூவரும் எங்களைப்பற்றி கேலியாகப் பேசியதை- அதுவும் சிங்களத்தையே அரைகுறை சிங்களமாகவே பேசியதையும் நான் தமிழில் சொல்லட்டுமா என்று கேட்டார்.

இப்போது அந்த மூன்று அப்பாவி தமிழ் இளைஞர்களும் அந்த மாணவியின் காலில் விழாத குறையாக தமிழில் மன்னிப்பு கேட்டனர். அந்த பஸ்ஸே சனநெரிசல் மறந்து கெக்கட்டமிட்டுச் சிரித்துக்கொண்டது.

பஸ்ஸை விட்டு மாணவிகள் இறங்கிச் செல்லும்போது அந்த மாணவியை மற்றைய மாணவிகள் எல்லோரும் அவர்கள் எங்களைப் பற்றி என்ன கதைத்தார்கள் என்று கேட்டனர்.

அதற்கு அந்த மாணவி பதில் சொன்னார்"அவர்கள் பேசியதை நான் அப்படியே உங்களுக்குச் சொன்னால் நீங்கள் இப்போது உங்கள் காலில் இருக்கும் செருப்புகளைக் கழற்றி எனக்கு கன்னத்தில் அறைவீர்கள்"

"ஏனென்றால் அவர்கள் பேசியது அனைத்தும் எங்களை எங்கள் அங்கங்களை பச்சையாக கேவலப்படுத்தி வர்ணித்த சொற்கள். ஆனால், எங்களை அவர்கள் கேவலமாக மாற்று மொழியில் கதைத்தாலும் நான் அவர்களுக்காக மிகவும் இரங்கி வேதனைப்பட்டேன். ஒரு மனநிம்மதி எங்களை பற்றி அவர்கள் என்ன கதைக்கின்றார்கள் என்பது அதில் இருந்த என்னைத்தவிர வேறு எவருக்குமே தெரியாது. ஆனாலும் அப்போது அவர்கள் பேசுவதை நீங்கள் கண்சாடையில் என்னிடம் கேட்கும்போது நான் சொல்லியிருந்தால் அந்த இளைஞர்களை நீங்களும் பஸ்ஸில் இருந்திருந்தவர்களும் துவைத்தெடுத்திருப்பீர்கள்.

ஆனால், அந்த மூன்று தமிழ் அண்ணாக்களையும் நான் எமது சகோதரர்களாக நினைத்தே மன்னித்தேன். அவர்கள் இனி நிச்சயம் திருந்துவார்கள்" என்று கூறி பெருமூச்சு விட்டார்.

**———————— சிவியா**



இலங்கையில் 40 வீதமான இளைஞர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி விட்டார்கள் என சிறிலங்காவின் தலைவி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார். இதற்கு தீர்வாக மார்க்கப்பற்று வளர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

# பயனேதும் உண்டா..?

போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு குறித்த எச்சரிக்கை இன்றுநேற்றல்ல பலவருடங்களுக்கு முன்னரே பௌத்த மதகுருமார்களால் விடுக்கப்பட்டிருக்கிறது. பௌத்தமத பீடாதிபதி ஒருவர் சிறிலங்காவில் நடைபெறும் வைபவங்கள் அனைத்தும் போதைப்பொருள் அல்லது குடிவகைகளை மையமாகக் கொண்டே இடம்பெறுகிறது எனக் கூறினார். இவ் வைபவங்களில் கலந்து கொள்வோர் ஆண், பெண் வேறுபாடின்றியும் பெரியவர் சிறியவர் வேறுபாடின்றியும் அனைவருமே குடிப்பழக்கத்துக்கு அடிமையாகி சீரழிந்து கொண்டிருக்கின்றனர், எனவும் அவர் கூறியிருக்கிறார். அதாவது ஒரு மரண வீட்டிற்குச் சென்றால் பிணத்தைத் தவிர உயிருள்ள அனைவருமே போதையில் தள்ளாடிக் கொண்டிருந்ததை தான் பார்த்ததாகத் தெரிவித்திருக்கிறார்.

இந்தப்பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் பற்றி அறியாமல் எவருமே போதைப் பழக்கத்துக்கு அடிமையாவதில்லை. பெரும்பாலும் சூழல் அதற்கான ஊக்குவிப்புக் காரணமாகவே போதைப்பொருளுக்கு பலரும் அடிமையாகின்றனர்.

இப் போதைப்பொருள் பாவனை அதிகரிப்புக்கு நாட்டின் பொருளாதாரம் உலகிற்குத் திறந்து விடப்பட்டதை அவர்காரணமாகக் கூறுகிறார். அது உண்மையாக இருப்பினும் அவர் தனது நிறைவேற்று அதிகாரம் கொண்ட 10 வருடங்களுக்கு மேற்பட்ட ஆட்சிக்காலத்தில் அதே பொருளாதாரக் கொள்கையையே கடைப்பிடித்தார் என்பதை அவர் மறந்துவிட்டார். அதாவது சுமார் 25 வருடகாலமாக திறந்த பொருளாதாரக் கொள்கையை சிறிலங்கா கடைப்பிடித்து வருகிறது எனின் அதில் 10 வருடங்கள் அவரது ஆட்சியே நடைபெற்றுள்ளது. எனவே அந்தக் குற்றச்சாட்டிற்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு அவருக்கும் உள்ளது.

இதேவேளை இன்று போதைப் பொருள் வர்த்தகம் மூலம் வல்லமை மிக்க சக்தியாக மாறிவிட்டவர்கள் பாதாள உலகக் குழுவினராவர். இவர்களை ஒழிக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகக் காட்டிக்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் அவர்களின் வலுக்குன்றிவிடவில்லை என்பதை இவ்வார ஆரம்பத்தில் நீதிமன்றத்தில் நடந்த தாக்குதல் உணர்த்தியது.

இப்பாதாள உலகக் குழுவினரை ஒழித்துவிட முடியாது என்பதற்கு பல காரணங்களை கூறலாம். அதாவது நீதிபதி அம்பேபிட்டியவின் கொலையில் முக்கிய சந்தேக நபருக்கு இருக்கின்ற உயர்மட்டத் தொடர்புகள் குறித்து- அது பிரதி அமைச்சர்கள் தொடக்கம் உயர் பொலிஸ் அதிகாரிகள் வரை உள்ளது. வெளியான தகவல்கள் பல விடயங்களைப் புலப்படுத்துகின்றன.

மேலும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்குவதற்கு முற்படும் நீதிபதிகள் அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல்வாதிகள்-ஆட்சியாளர்களுடன் பாதாள உலகக் குழுவினருக்கு உள்ள தொடர்பு மிக நெருக்கமானது.

எனவே குற்றச்செயல்கள் அதிகரிக்கும்போது ஆட்சியாளருக்கு வேண்டப்படாத பாதாள உலகக் குழுவினர் மீதே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்நிலையில் போதைப் பொருள் விற்பனையைத் தடுப்பதென்பது சாத்தியமான ஒன்றல்ல.

இவ்வாறு போதைப் பொருளை விற்பனை செய்வோர், பல்வேறு தந்திரோபாயங்களைக் கைக்கொண்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் கூட இப்பழக்கத்தை ஏற்படுத்தி வருகின்றனர். எனவே இது அவர்களின் வாழ்நாள் முழுவதும் தொடர்கதையாகி ஓர் அழிவை நோக்கிச் செல்லும் சந்ததியினராக உருவாக்கி விடுகிறது.

மாணவர்கள் மத்தியில் போதைப் பழக்கம் ஏற்படாதிருக்க எல்லாவற்றிலும் முதன்மையானதாக அவர்களுக்கு இப் பொருட்கள் கிடைப்பதைத் தடுப்பதே சிறந்ததாக இருக்க முடியும். ஆனால் அதுவோ தடுக்கப்பட முடியாததாக வளர்ச்சிகண்டிருக்கிறது.

இதேவேளை சிறிலங்காவிலே பல்வேறு ரீதியில் சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவருவது அதிகரித்த போக்கில் செல்கிறது! நவீன உலகத்தில் வருமானம் ஈட்டும் முக்கிய துறையாக உள்ள உல்லாசப் பயணத்துறையை சிறிலங்காவும் முக்கியமானதாகக் கொண்டிருப்பது இதற்குக் காரணமாகின்றது. எனவே இத் துஷ்பிரயோகமானது போதைப் பொருள் பாவனை உள்ளிட்ட சகல தீய பழக்கங்களையும் சிறுவயதுமுதலே இளைஞர்கள் மத்தியில் வளர்த்துவிடுகிறது.

இவ்வாறு பலகாரணிகள் இப் போதைப்பொருள் பழக்கத்துக்குக் காரணமாக இருக்கையில், அவற்றைச் சீர்செய்யும் நடவடிக்கைகளை எடுப்பதை விடுத்து இவ்வாறு புள்ளி விபரங்களை வெளியிடுவதன் மூலம் தனது "அக்கறையை" வெளியிடுவதில் பயன் எதுவுமில்லை.

வேலவன்





நேர்நோக்கு







# இடையூறு விளைவிக்கும் படையினர்!

**போர்**நடவடிக்கைகள் மூலமோ, அல்லது அண்மையில் ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் என்றாலும் மீள் கட்டுமானம் என்றாலும் அவற்றைத் துரித கதியில் முன்னெடுத்து வருகின்ற பெருமை, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தையே சாரும். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகளை தமிழ்மக்களும், சகோதர இனமக்களும், பொது அமைப்புக்களும் பாராட்டி வருகின்றமை யாவரும் அறிந்த விடயம். இவ் அமைப்பின் மீது சிறிலங்கா படையினரும், அவர்கள் சார்ந்த அடிவருடிகளும் திட்டமிட்டு பல்வேறு அத்துமீறல்களையும் நெருக்கடிகளையும் கொடுத்து வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் துரிதகதியில் மீட்புப் பணிகளும், நிவாரண நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன, அல்லது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றால் அது ஒரு ஒழுங்கான திட்டமிடலில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டு வருகின்ற அளப்பரிய பணியாகவே காணப்படுகின்றது. யாழ்குடா நாட்டிலும் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும், இவ்வாறான புனர்வாழ்வுப் பணிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றபோது, அவற்றை உரிய முறையில் முன்னெடுப்பதற்குப் பெரும் முட்டுக்கட்டையாக ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள சிறிலங்காப் படையினர் இவற்றைத் தடுத்து நிறுத்துவதும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் செயற்பாடுகளை முறியடித்துவரும் செயற்பாடுகளில், தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றனர். இவற்றுக்கு மத்தியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது, பாதிக்கப்பட்ட பகுதிகளில் அதுவும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தற்காலிக குடியிருப்பு நிலங்களை தெரிவுசெய்வதில் இருந்து, மக்களைத் தற்காலிகமாக குடியமர்த்துவதிலும், அவர்களுக்கான மருத்துவ வசதி, கல்வி வசதி அனைத்தையும் நன்கு திட்டமிட்டு உரிய முறையில் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களை தடுத்து நிறுத்துதல், அவர்கள் மீது அடாவடித்தனங்களை மேற்கொள்ளுதல், அவர்கள் மூலமாக எடுத்துச்செல்லுகின்ற நிவாரண உதவிப் பொருட்களை பறிமுதல் செய்து படையினர் தாம் மக்களுக்கு விநியோகித்து மக்கள் மனங்களை வெல்ல முனைதல், மீட்புப் பணியாளர்களையும், மீள்கட்டுமானப் பணியாளர்களையும் தாக்குகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.

குறிப்பாக அம்பாறையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செல்வாக்கு அதிகரித்ததுடன், மக்கள் மனங்களையும் வென்ற நிலையில் சிறிலங்கா படையின் சிறப்பு அதிரடிப்படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளது. அதாவது திருக்கோயில் பகுதியில் செயலணிச் செயலகம் திறக்கப்பட்டு நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது சகலவற்றையும் படையினர் மறித்து. கூட்டு விசேட அதிரடிப்படையினர் உதவிகளை மேற்கொண்டு கிராம அலுவலர்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அவர்கள் மூலம் மக்கள் மனங்களை வெல்லுவதற்கு துரித முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதைவிட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கீழ் உள்ள ஒரு கட்டமைப்பு மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு இக்கட்டமைப்பு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இவ்வமைப்பு துரிதகதியில் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்வதுடன் மீள் குடியமர்வுக்கான வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பிரதேசங்களை உறுதி செய்து மக்களிடம் கையளிக்கின்றது.

ஆனால், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயங்களா இருந்து விடுபட்ட பகுதியில், அவற்றுக்கா வரைபடங்கள் (வெடிபொருட்கள்) படையினரின் கையில் இருந்தும் அப்பகுதிகளில் எந்தப்பணியும் விரைவாக முன்னெடுக்கப்படவில்லை. அப்பகுதிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேய கண்ணிவெடிகள் அகற்றும் பிரிவினர் சென்று பணிகளை மேற்கொள்ள அனுமதியினை வழங்க படையினர் மறுக்கின்றனர்.

நேரடியாகவே, சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உள்ள மக்கள் மனங்களை வெல்லும் ஒரு முனைப்பான செயற்பாடுகளில் சிறிலங்காப் படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தாலும் தமிழ்மக்கள் மத்தியில் எதிர்ப்பையே சந்தித்து வருகின்றனர். அதாவது, யாழ்ப்பாணத்தில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதாகக் கூறிக் கொண்டு மக்கள் மீது கெடுபிடிகளை மேற்கொண்டமை, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய பகுதிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் மீது படையினர் அடிக்கடி கெடுபிடிகளை மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் மக்களிடம் பெரும் எதிர்ப்புக்களை படையினர் சந்தித்து வருகின்றனர்.

இதைவிட பாதிக்கப்பட்ட பகுதிகளை சென்று பார்வையிடுகின்ற பொது அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகளை பாராட்டியுள்ளன. இதனை பொறுக்க முடியாத இனவாத சக்திகள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனிதாபிமானப் பணிகளையும் உதவி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது அவர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற உதவிகளைத் தடுத்து நிறுத்தியும் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.

சு.பாஸ்கரன்

# அமெரிக்க-ஐரோப்பிய நெருக்கம் அதிர்ச்சியான விளைவை ஏற்படுத்துமா?

இரண்டு எதிரிகளை ஒரே நேரத்தில் எதிர்கொள்வதனை விட ஒவ்வொரு எதிரியாக எதிர்கொள்வதுடன் மிக அண்மையிலுள்ளதும் பாரம்பரிய உறவு நிலையுள்ளதுமான ஐரோப்பாவை நண்பனாக்கிக் கொண்டு சீனாவை முறியடித்து விட்டால் பின்னர் இலகுவாக ஐரோப்பாவை துவம்சம் செய்யலாம். எதிரிகளை உதிரியாக்கும் அணுகுமுறையை கொண்டிருக்கும் அமெரிக்காவின் போக்கு எதிர்கால உலகத்திற்கு புதிய அத்தியாயமாக அமையும்.





உலக நாடுகளிடையே உருவாகிவரும் உறவுகள் அபிவிருத்திக்காகவும், நட்புக்காகவும் தயார் செய்யப்படும் விடயமாக பார்க்கப்படும் இயல்பு காணப்படுகின்றது. ஆனால், அவ்வாறு வளரும் உறவுகள் தனித்து அமைதியையும் சமாதானத்தையும் சகவாழ்வையும் மட்டும் உருவாக்குவதில்லை மாறாக அழிவையும் ஆக்கிரமிப்பையும் போரையும் உருவாக்கியிருக்கின்றது. மன்னர்கள் எப்படி ஏனைய இராட்சியங்களோடு நட்புக்கலந்து சாம்ராட்சியங்களை உருவாக்கினார்களோ அவ்வாறேதான் இன்றைய அமெரிக்கர்கள் பேரரசுக்கான எண்ணத்தோடு உலகளாவிய ஆதிக்கத்தை உருவாக்கும் நோக்கோடு செயல்பட்டு வருகின்றனர். அத்தகைய விஸ்தரிப்புக்கான உபாயமாக அமெரிக்க- ஐரோப்பிய உறவு நோக்கப்படுகிறது.

மிக அண்மைக்காலத்தில் அமெரிக்காவின் கவனம் ஐரோப்பா பக்கம் திரும்பியுள்ளது. குறிப்பாக ஐரோப்பாவுக்குள் பலமடைந்துவரும் பிரான்சுடன் மிக நெருக்கமான உறவை பலப்படுத்த திட்டமிட்டு வருகிறது. பிரான்சுடன் புதிய அத்தியாயத்தை உருவாக்க முயலும் அமெரிக்கா பிரான்சுடனான கசப்புணர்வுகளை மறக்கவும் மன்னிக்கவும் தயாராகவுள்ளது. பிரான்சை முதன்மைப்படுத்திய அமெரிக்க வெளிவிவகார செயலாளர் ஐரோப்பாவுடன் நட்புக்கான தளத்தை பிரான்சே கொண்டிருப்பதுபோல வெளிப்படுத்தினார். அமெரிக்க வெளி விவகாரச் செயலாளரின் ஐரோப்பிய விஜயத்தின் போது தெரிவித்த கருத்துக்கள் கடந்த காலத்தை விட சற்று மாறுபட்டதாகவுள்ளது. இதனை முதலில் அவதானிப்போம்.

கொண்டோலோ ரைய்ஸ்ஸை ஐரோப்பியர் 'கொண்டி' என்றே அழைக்கின்றனர். கொண்டியின் ஐரோப்பிய விஜயம் சனாதிபதியின் விஜயத்துக்கான அடிக்கட்டுமான வேலையாகவே கருதப்படுகின்றது. கொண்டி எட்டு ஐரோப்பிய நாடுகளின் தலைநகரங்களுக்கு விஜயம் செய்திருந்த எல்லா நாடுகளிலும் அவர் தெரிவித்த கருத்துக்களின் முதன்மையானதாக விளங்கிய விடயம் New phase, New chapten, New way, New Attitud என்பனவையாகும். ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்துகின்ற ஆவல் கொண்டவராக 'கொண்டி' காணப்பட்டார்.

கொண்டி ஐரோப்பாவுடனான உறவில் ஏற்படுத்தவுள்ள விடயத்தைப்பற்றி குறிப்பிடும்போது பொதுவான வேலைத்திட்டத்தை முதன்மைப்படுத்தினார். ஐரோப்பியரும், அமெரிக்கரும், பொதுவான வேலைத்திட்டத்தின் கீழ் பணியாற்ற வேண்டும் என்பன சுட்டிக்காட்டிய கொண்டி அமெரிக்கா அவ்வகையான பொது வேலைத்திட்டத்திற்கு தயாராகிவிட்டது. ஐரோப்பா தயாரானால் சரியானதாக அமையுமென குறிப்பிட்டார். இவ்வாறு அமெரிக்க செயலாளர் குறிப்பிடுவது அமெரிக்காவின் புதிய கொள்கைக்கு அடிப்படையாகவுள்ளது. மிக நீண்டகாலமாக ஐரோப்பாவையும் அதன் பொதுக் கட்டமைப்பையும் முதன்மைப்படுத்த விரும்பாத அமெரிக்கா தற்போது ஐரோப்பா என்ற பொது அரசோடு இணைந்து செயல்பட முன்வந்துள்ளது. வோஷிங்டன் மிகத்தெளிவாக ஐரோப்பிய யூனியனுடன் கூட்டாகச்சேர்ந்து தொழிற்பட முன்வந்துள்ளது. ஐரோப்பிய யூனியன் ஆரம்பிக்கப்பட்டு பலமாறுதல்களை செயல்படுத்திவந்துள்ளது. ஆனால் இதுவரை காலமும் இல்லாத புதிய கரிசனையை கொண்டியின் விஜயம் உணர்த்தியிருப்பதுடன் அமெரிக்காவுக்கு 'மாற்றுத தலைமையக' ஐரோப்பிய யூனியன் வளருகின்றதென்ற தொனியில் அவர் கருத்துக்கூறாது தவிர்த்தாலும் ஏறக்குறைய அதுவே அடிப்படையான மறைபொருளாகக் காணப்பட்டிருக்கலாம்.

'கொண்டி' இன் விஜயத்தின் போது ஈராக் பற்றியோ, சதாம் உசைன் பற்றியோ எந்த விதமான வாதங்களையும் அவர் முன்வைக்கவில்லை. அதனைத் தவிர்க்க பெரும் முயற்சி எடுத்தவராகவே காட்டிக்கொண்டார். அந்த வகையில் அவரது பிரதான உரைகளில் சீனா பற்றிய அதிருப்தி வெளிப்படுத்தப்பட்டிருந்தது. குறிப்பாக சீனாவின் ஆயுத விற்பனை பற்றியும் அதனால் உலகத்தில் ஏற்பட்டுவரும் அணுவாயுதப் பரவல் தொடர்பான விடயமும் அவரது உரையில் தொனித்தது. சாராம்சத்தில் அவரது அமெரிக்க விஜயம் ஐரோப்பியரை அரவணைப்பதில் வெற்றியை தேடிக்கொடுத்ததுடன் அமெரிக்க-ஐரோப்பிய கூட்டு பலமடையும் என்ற நம்பிக்கையையும் ஐரோப்பியர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

மிக நீண்ட காலமாக ஐரோப்பாவின் ஐக்கியத்தையோ, ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்பையோ எதிர்பார்க்காத ஏற்றுக்கொள்ளாத அமெரிக்கா தற்போது அதனை பகிரங்கமாக ஆதரித்து கருத்துத்தெரிவித்திருப்பது பற்றி கவனம் கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக இரண்டு விடயங்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்பு இருக்கலாம்.

ஒன்று கூட்டாகச் செயற்படுவதன் மூலம் உலக ஆதிக்கத்தை தனதாக்கிக் கொள்ளலாம். கூட்டுஅணி அதிர்ச்சி அளிக்கும் விதத்தில் தொழிற்பட்டு ஆபத்தானதும் அமெரிக்காவுக்கு நெருக்கடி மிக்கதுமான வேலைகளில் ஈடுபட்டால் அதன் விளைவுகள் அமெரிக்காவுக்கு ஆபத் தாக அமையும். அதனால் அதனை முந்திக் கொண்டுதானே தலைமைதாங்கும் நிலைக்குப் புகுந்தால் இலகுவாக வெற்றியை தனதாக்கிக் கொள்ளலாம். ஐரோப்பாவின் எழுச்சியும், அமெ

**ஐங்கரன்**

ரிக்காவின் எழுச்சியும் ஒன்றானதாக மாறும் சூழலை உருவாக்கிவிடலாம். இதனால் கூட்டணிக்குள் தலைமை தாங்கும் பலத்தையும் பெற்றுவிடலாம். இதனையே இரண்டாம் - உலக யுத்தத்தின் போது சனாதிபதி ரூமன் ஏற்படுத்தியிருந்தார். யதார்த்தமாகவே பிரிட்டனே அதிகமான உபாயங்களையும் தந்திரங்களையும் பின்பற்றியது. அதற்கு அடுத்த நிலையில் பிரான்ஸ் செயல்பட்டது. மறுபக்கத்தில் சோவியத் யூனியன் பங்களிப்புப் செய்ததுடன் கூட்டணிக்குள் அதிக இழப்பீடுகளைச் சந்தித்தது. ஆனால் முதலாளித்துவ அணிக்குள் அமெரிக்காவே தலைமைதாங்கும் சூழலை அமெரிக்க சனாதிபதி ஏற்படுத்தியிருந்தார். மொத்தத்தில் அமெரிக்க தலைமை அமெரிக்காவின் ஆதிக்கத்தினாலும் போட்டியினாலும் ஏற்பட்ட ஒன்றே, இதே போன்றே தற்போதும் அமெரிக்காவின் அணுகுமுறை அமைந்திருக்கின்றது. பிரான்சையும், ஜேர்மனியையும் முறியடித்துக் கொண்டு இன்னுமே முதலாளித்துவத்துக்கு தலைமை தாங்கும் பக்குவத்தினை சாதிக்கலாமென்ற உப்பாயத்துடனே ஐரோப்பாவின் உருவாக்கத்தையும், ஐரோப்பிய ஒத்துழைப்பையும் வரவேற்கின்றமை விளங்குகின்றது.

இரண்டாவது நேரடியாகவும் அதிகமானதாக்கத்தையும் ஏற்படுத்தக்கூடிய இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிராக ஐரோப்பாவை அணிதிரட்ட 'கொண்டி' முயன்றுள்ளார். ஐரோப்பாவின் ஒத்துழைப்பு குறைந்த ஈராக் யுத்தத்தால் அதிகமான அதிருப்தியை உடைய நாடாக அமெரிக்கா விளங்குகிறது. இதனால் அதிகமான வர்த்தக பொருளாதார நெருக்கடியை அமெரிக்காவை ஏற்றுக்கொள்ளவைப்பதுடன் சந்தித்துள்ளது. இதன் நிமித்தமே ஐரோப்பாவுக்கு அமெரிக்கா இஸ்லாமிய அடிப்படைவாதத்தை படிப்படியாக தகர்க்கவும் அதற்கு உறுதுணையான அரசுகளை முறியடிக்கவும் திட்டமிட்டு வருகின்றது. அத்தகைய நடவடிக்கையின் பிரதிபலிப்பாகவே சீனா தொடர்பான கருத்துக்களையும் முன்வைத்துள்ளது. சீனாவின் போக்கைப்பற்றி சுட்டிக்காட்டியுள்ள 'கொண்டி' ஐரோப்பாவுடன் சேர்ந்தே சீனாவை மிரட்ட அமெரிக்கா திட்டமிட்டுள்ளதென்பது தெளிவாகத்தெரிகின்றது.

சீனாவின் போக்கில் அதிக குழப்பங்களுக்கு வழி வகுத்துவரும் அமெரிக்கா மேலும் சீனாவின் பலத்தை முறியடிக்க முயலுகின்றது. சீனாவின் போக்கும், ஐரோப்பாவின் போக்கும் அமெரிக்க நடவடிக்கைகளுக்கு அதிருப்தியாக அமைந்துள்ளது. இரண்டு எதிரிகளை ஒரே நேரத்தில் எதிர்கொள்வதனை விட ஒவ்வொரு எதிரியாக எதிர்கொள்வதுடன் மிக அண்மையிலுள்ளதும், பாரம்பரிய உறவு நிலையுள்ளதுமான ஐரோப்பாவை நண்பனாக்கிக்கொண்டு சீனாவை முறியடித்துவிட்டால் பின்னர் இலகுவாக ஐரோப்பாவைது வம்சம் செய்யலாம். எதிரிகளை உதிரியாக்கும் அணுகுமுறையை கொண்டிருக்கும் அமெரிக்காவின் போக்கு எதிர்கால உலகத்திற்கு புதிய அத்தியாயமாக அமையும்.

அத்துடன் இஸ்லாமிய அடிப்படையையும் சீர்திருத்தத்தையும் ஒன்றாகக் கொண்டிருக்கும் ஈரானை எதிர்கொள்ளும் போது எவ்வாறான உபாயங்களை பின்பற்ற வேண்டும் என்பதும் அமெரிக்காவின் அணுகுமுறையாக உள்ளது.

எனவே அமெரிக்கா-ஐரோப்பாவுக்கான நெருக்கம் மீண்டுமொரு அதிர்ச்சியான விளைவை ஏற்படுத்துமா என்ற அச்சம் பலர் மத்தியில் ஏற்பட ஆரம்பித்துவிட்டது. ஈராக் தேர்தல் முடிவுகள் அமெரிக்காவின் அணுகுமுறைக்குக் கிடைத்த வெற்றியாகவே அமெரிக்கர்கள் பார்க்கின்றனர். பலஸ்தீன ஆப்கானிஸ்தான் வரிசையில் மாறுதல்களுக்கான உபாயம் தொடரவாய்ப்பிருப்பது போலவே தென்படுகின்றது.



# சுயநிர்ணயத்திற்கான அரங்காக அவல நீக்க ஆற்றுப்படை அரங்கு



செ.விந்தன்

"எங்கட சனம் சத்தம் கேட்ட உடன ஓடாமல் நிண்டிருக்கு, விழுந்து படுத்திருக்கு பழைய யுத்த நினைவுகள், 'கிபிர் வருகுது', "புக்காரா" வருகுது "சண்டை துவங்கி விட்டுதோ" நேவி இறங்கி விட்டானோ" எண்டு நினைச்சு கிடங்குகளுக்குள்ளையும்? மண் கும்பிகளுக்கு பின்னாலையும் விழுந்து படுத்திருக்கினம். அப்பிடிப் படுத்திருந்த எத்தினை பேரைக் கடற் கோள் கொண்டு போட்டுது. இது எவ்வளவு அவலம், எவ்வளவு பரிதாபநிலை. தென்னிலங்கையில் இந்த அனுபவம் இல்லைத்தானே".

"அவல நீக்க ஆற்றுப்படையரங்கு" நிகழ்த்திய பின் ஆற்றுப்படையணியினருடன் நடந்த கலந்துரையாடலின்போது நண்பர் ஒருவர் மேற்படி உணர்ச்சி ததும்பக் கூறியிருந்தார்.

தெற்கில் கடற்கோளால் பாதிக்கப்பட்ட உயிர்களுக்கும் நாம் மனிதர்கள் என்றமுறையில் மானுடம் தழுவி அஞ்சலி செய்கிறோம். அது தான் மனிதம் மிக்க செயலும்கூட. ஆனால் "ஆமி" செய்த அதே வேலையை 'சுனாமி' செய்த அவலம்-கொடூரம் உலகின் வேறெங்கும் நிகழ்ந்திருக்கமுடியாது. வடகிழக்கு பிரதேசங்களில் பல இடங்களில் பல மக்கள் இவ்வாறு அவலமாகச் சாவுண்டு போயினர். இதற்கு யார் பொறுப்பு? சிறிலங்கா அரசு இதற்கு என்ன பதில் சொல்லும்? மனித நேயம்மிக்க தென்னிலங்கைச் சிங்கள மக்கள் எவராவது இந்தச் செய்தி கேட்டு வெட்கித்தலைகுனிந்து கூனிக் குறுகிப் போயிருக்கமாட்டார்களா?

இவ்வாறு பலகோணங்களிலும் தெற்கிலும் வடக்கிலும் கடற்கோள் வெவ்வேறு விதமான தாக்கங்களையும் உணர்வுகளையும்தான் ஏற்படுத்தியுள்ளது. அனர்த்த நிவாரண முன்னெடுப்புக்கள்கூட வெவ்வேறு நிலைகளில்தானே நடைபெறுகின்றன.

உலகம் வியக்குமளவுக்கு தமிழீழத்தில் அனர்த்த நிவாரண பணிகள் முன்னெடுக்கப்படுவதைப் பொறுக்கமுடியாத சிங்களப் பேரின வாதிகள் புலிகளோடு இணைந்து மீள்கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவதற்கு முரட்டுத்தனமாக முட்டுக்கட்டை போட்டே வருகின்றனர்.

தமிழீழ கரையோரம் எங்கும் 'அவலநீக்க ஆற்றுப்படை அரங்கு' நிகழ்த்தும்போது மனம் திறந்து எமது மக்கள் சொல்லும் கதைகள் கடந்தகால ஆக்கிரமிப்பு யுத்த மேகத்தால் சூழ்ந்த இருள் நெஞ்சைவிட்டு அகன்று போகாமையினால் அந்த இருள் நெஞ்சுடனேயே கடற் கோளை எதிர் கொள்ளமுடியாது தவித்த தவிப்பைக் காட்டுகின்றன.

"நான் பக்கத்து வீட்டில கதைச்சுக் கொண்டு நிண்டன், வெடிச் சத்தமும் 'கிபிர்' சத்தமும் மாதிரிக் கேட்டுது நாங்கள் நினைச்சம் கடலுக்கை சண்டை தொடங்கிட்டு தாக்கும் எண்டு, வெளியில வந்தம் கடல்ல கறுப்பு அலை வந்துது பனையளவு இருக்கும், எங்களத் தண்ணி மூடிட்டுது..." தாளையடியைச் சேர்ந்த 22 வயது இளைஞன் இவ்வாறு தன் அவலத்தை தெரிவித்தார்.

தும்பளையில் ஒரு முகாமில் வாழ்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையொருவர் கூறும்போது;

"நான் கடையில சாமான் வேண்டிக்கொண்டு நிண்டனான். அப்ப ஏதோ ஒரு சத்தம் கேட்டுது. அந்த இந்தியன் ஆமியின்ர "முறாச் பிளேன்" அது வந்த் மாதிரிக் கிடந்தது. நான் நினைச்சன் சண்டைதான் துவங்கி விட்டுதாக்கும் எண்டு. ஒளிஞ்சு கொள்ளப்பாத்தன். பிறகு பார்த்தால் சனம் எல்லாம் கடல் வருகுதெண்டு ஓடிச்சுதுகள். அப்ப பாத்தா தண்ணி வந்தோண்டிருந்தது. அதைக் கண்டிட்டு அப்படியே உடுத்த உடுப்போட ஓடி வந்தது தானே..."

என்று மூச்சுவிடாமல் கூறிக் கொண்டு போனார். மனதில் கொண்டிருந்த பீதி அவர் கதையில் தெரிந்தது.

கடந்த கால ஆக்கிரமிப்பு யுத்த அனுபவங்கள் பலவிதமாய் எம்மக்களை பயப்படுத்தி நாளடைவில் நோய் செய்யும் பீதியாக மாறியுள்ளது. அதிலிருந்து விடுபட முடியாமல் இன்னும் தமது பழைய கதைகளை சுமந்தபடியே உள்ளனர் எம்மக்கள்.

செம்பியன்பற்று வடக்கு தேவாலயத்தில் வந்திருந்த மக்களை கண்டோம். குடாரப்பு, மாமுனை பகுதியிலிருந்து வந்திருந்தனர்..

"நாங்கள் முந்தியும் அனுபவப் பட்டனாங்கள்தானே. குடாரப்பிலதானே முந்தியும் கொண்டுவந்து தரையிறக்கினவை ஆமியை. அப்ப சத்தம் கேட்டோண்ணை நாங்கள் நினைச்சம் இப்பவும் ஆமியைக் கொணர்ந்து தரையிறக்கிப் போட்டான், எல்லாம் ஓடிப்போய் மண்கும்பியளுக்குப்பின்னால ஒளிஞ்சிருப்பம் எண்டு. அப்பிடி ஒளிஞ்சிருந்த எங்கட உறவுகளையே கடல் வந்துகொண்டுபோட்டுது. பாருங்கோ எங்கட கதியை"

உண்மையில் இதுதான் அனர்த்தத்துக்குள்ளும் அனர்த்தம் அவலத்துக்குள்ளும் அவலம். யார் பொறுப்பு இந்த அவலத்துக்கு?

குடத்தனை கிழக்குப் பகுதியில் ஒரு யுவதி எமது பெண் ஆற்றுகையாளரிடம் திகிலுடன் சொன்னார்.

"இப்படித்தான் அக்கா எங்கட அண்ணா ஒருவர் 2000 ஆம் ஆண்டு நித்திரப் பாயில வைச்சு ஆர் பிடிச்சது எண்டு தெரியாமல் ஒரு தகவலும் இல்லாமல் இருக்கிறம். எங்கட அண்ணாவின்ர நிலையை அறியமுடியாத நிலை... அம்மா அந்தப் பயத்திலும் வருத்தத்திலும் இருக்கிறா- ஓடி வரேக்கை அம்மா குழறிக்கொண்டு ஓடி வந்தா "சண்டை தொடங்கிற்று போல ஓடுவம்" எண்டு.

"அலை வரேக்கை நாங்கள் வீட்டதான் இருந்தனாங்கள், சத்தம் கேட்க நாங்கள் நினைச்சம் ஆமிக்காரன்ர வாகனம் ஏதோ போகுதாக்கும் எண்டு, ஆனால் பாத்தா பெரிய கடலே வந்தது" இது சக்கோட்டையிலிருந்து மீண்டுவந்த ஒருவரின் கதை.

முல்லைத்தீவில் இருந்து கடற்கோளுக்கு தப்பிவந்திருந்த மக்களில் செல்வபுரம் என்ற இடத்தில் 41 வயது தாய் ஒருவர் படபடப்புடன் கூறுகிறார். "வந்த கடலை நாங்கள் அண்ணார்ந்து தான் பாத்தம். இரைஞ்சு சத்தம் கேட்டது, ஆனால், இப்பிடிக் கடல் எண்டு நினைக்கவேயில்லை. "கிபிர்"வருகுது கிபிர் வருகுது எண்டு விழுந்து படுத்தம் பிறகுதான் அறையுக்கை இருந்து எட்டிப் பாத்தா புகையாத் தெரிஞ்சுது. அப்ப 'கிபிர்' அடிச்சுட்டான் விழுந்து படுங்கோ எண்டு படுத்ததுதான்... தம்பி வெளியிலே போனவன் வந்து சொன்னான் கிபிர் அடிக்கேல்ல கடல் வருது எழும்பிப் பாயுங்கோ எண்டு. சொல்லுறதுக்கு இடையில் பக்கத்தில வந்து கலக்க வெளிக்கிட்டுது......." விழுந்து படுத்து, எழும்பி, அல்லல் பட்டு, கடல் வருவதே தெரியாமல் தமது உறவுகள் நிறையப் பேரைப் பறிகொடுத்த துயர் நெஞ்சடைக்க விக்கி விக்கி அழுது தன் கதையைச் சொல்லுகிறார் இந்த தாய்....

சக்கோட்டை என்ற இடத்தில் இருந்து தப்பி வந்த 18 வயது பெண் தன் அவலம் சொல்லும் போது,

"நான் வீட்டுக்க ரீவி (TV) பார்த்துக் கொண்டிருக்கேக்க "கிபிர்" இரைஞ்ச மாதிரிக் கிடந்தது. ஓடிவந்து வெளியில பார்க்க கடல் அப்படியே பெரிய பனை அளவில உயர்ந்து ஓடி வந்தது. அம்மாவுக்கு சொல்ல முன்னமே என்னைத் தண்ணி மூடிட்டுது- ஆமியின்ர முள்ளுக் கம்பியில சிக்கிக் கம்பி கீறி என்ர பாவாடையும் கொளுவிண்டு போயிற்றுது. நான் பாவாடையைக் கழட்டிப் போட்டு ஓடிவந்து மதிலைக் கடந்து நிக்க... ஒரு இடமும் போக ஏலாது எண்டு நினைச்சன். அம்மா அழுது கொண்டு ஒரு சட்டையைக் கொண்டு வந்து தந்தா. இன்னும் எத்தினை பொம்பிளைப் பிள்ளையள் ஆமியின்ர "கொமண்டோக் கம்பியில" தலைமயிர் சிக்கி உயிரை விட்டுட்டுதுகள்.

ஆமி போட்டவேலியில் எங்கள் உறவுகள் சிக்கி இறந்து போக இன்று மறுபடியும் அவர்கள் வேலி போடுகிறகதைகள் அறிவீரோ! யாருக்கு வேலி யார் போடுவது?

சுனாமி அனர்த்தம் உலகப் பொதுவானதாய் இருக்கலாம். பல நாடுகள் பல மக்கள் அழிந்து போயினது உண்மையில் அவலமே. ஆனால் தமிழீழத்தின் கடல் மடியில் வாழ்ந்து வந்த எங்களின் உறவுகளின் கதைகளைப் பாருங்கள். எங்கள் நிலமும் வளமும் பறிக்கவென்று வந்து, எம் மக்களின் மனங்களில் சிறிலங்கா இனவாதப் படைகள் ஏற்படுத்திய ரணங்கள் இன்னும் ஆறவில்லை. மீளவும் அவை புதுப்பிக்கப்பட்டுவிட்டன.

ஆற்றுப்படை அரங்கு இவ்வாறு கனத்த நெஞ்சுடன் இருக்கும் மக்களை அணைத்தெடுத்து படிப்படியாக அவர்களை கடலை மீண்டும் நேசிக்கும் மனநிலைக்கு நெறிப்படுத்துகின்றது. அரங்கு தரும் இதமும் அனுசரணையான அணுகுமுறையும் மனம் திறந்து மக்களை வெளிப்படுத்த வைக்கின்றது.

படிப்படியாக வளர்ந்து செல்லும் ஆற்றுப்படையரங்கு இப்போது மக்களை கடல் நினைவுகளோடும் கடல் பொருட்களோடும் ஊடாட வைக்கின்றது. ஆற்றுப்படை அணியோடு சேர்ந்து தாமும் ஆற்றுகை செய்கின்றனர் மக்கள். கடற்கரையில் சென்று ஆடிப்பாடி விளையாடி கடலுக்குள் இறங்கி வலையிழுத்தலும் வள்ளம் ஓட்டுதலுமாக ஆற்றுகையில் ஈடுபடத்தொடங்கிவிட்டனர்.

எதிர்காலம் நோக்கி எமது மக்களை வழிப்படுத்துவதையே அவல நீக்க ஆற்றுப்படை அரங்கு முக்கிய பணியாகக் கொண்டுள்ளது. அந்தப் பணியில் இன்று கடலுக்கு மக்களை மீண்டும் பரிச்சயப்படுத்தும் நிலையில் வெற்றிநடை போடுகிறது அரங்கு.

விடுதலைப் புலிகள் தமது அருகில் இருந்து சுமைதாங்கி பணிபுரிவதை பெருமையோடும், பரவசத்தோடும் அரங்கிலே வெளிப்படுத்துகின்றனர் மக்கள். "எங்கட தலைவர் எங்களுக்காக எத்தினையோ கோடி ஒதுக்கியிருக்கிறார், பத்து ரூபா வரி வேண்ட கோபிச்சனாங்கள் ஆனால், இப்ப எங்களுக்கே கோடி கோடியாய் தாறார் தலைவர்-உவை அரசாங்கம் செய்வினம் எண்டு கனவிலும் நினைக்கேல்ல. தலைவர் தருவார்" என்று உருகிப் போய் தேசியத் தலைமைக்கு விசுவாசம் தெரிவிக்கின்றனர் மக்கள்.

(22 ஆம் பக்கம் பார்க்க...)



## சொல்லுறன் கேளுங்கோ

### "ஊமைக்கிக்"



சனாதிபதியை ஓரங்கட்டிவிட்டு பிரதமர் மகிந்த ராஜபக்ஸவோடு ஜே.வி.பி கூட்டு சேரப்பார்க்கிறதாம்.

அது ஒண்டுமில்ல எங்க உருட்டினால் எங்க சுருளும் எண்டிறத அம்மையாருக்கு ஜே.வி.பி காரர் ஒரு 'ஊமைக்கிக' மூலம் குடுத்துப்பார்க்கினம்.

இதுக்கு மகிந்தவை பயன்படுத்த ஜே.வி.பிகாரர் நினைக்கினம். மகிந்த மருளுவாரோ. அவர் தமிழில இருக்கிற பழமொழி தெரியுமெல்லே. கழுவுற மீனில நழுவுற மீனாட்டம் நழுவியிருக்கிறார்.

ஆகவே, ஜே.வி.பி காரருக்கு மகிந்த சொல்லுற பதில் என்ன எண்டிறதும் ஜே.வி.பி கேக்கிற கேள்விக்கு அம்மணி வழுங்கப்போகிற பதிலும்தான் இனி கொஞ்சக் காலத்துக்கு இலங்கையில் சுடச் சுட அரசியல்.

அப்ப சமாதானம்?, சமாதானப் பேச்சு?

அட போங்கய்யா மறந்து போனதை ஞாபகப்படுத்திக் கொண்டு.

### ஊருக்குபதேசம்



அது சரி இதுவும் தாடிக்கார கும்பல் பற்றிய செய்திதான் பாருங்கோ இதுக்கு சரியான பதில் வேணும் காணும்?

எங்கட சனத்திட்ட விளக்குமாத்து சாத்தல் வாங்கப் பார்த்த விமல் வீரவன்சவின்ர கையடக்க தொலைபேசியப் பற்றியது.

சந்திரிகாவிண்ட கைப்பை எவ்வளவு பேமசோ அது போல விமலிண்ட கைத் தொலைபேசியும் பேமஸ் தானுங்கோ.

முந்தி முற்றும் துறந்த முனிவர்கள் எண்டிற மாதிரி முற்றாக தங்கட ஆசைகள் சிலதை துறக்காமலிருக்கிற சில பௌத்த பிக்குகள் நாடாளுமன்றம் போகேக்க ஆத்திரப்பட்ட ஜே.வி.பி காரர் என்ன செய்தவை.

துறவிகளை நிர்வாணமாக்கப்பார்த்தவை பத்தாதுக்கு செய்யக் கூடாத அநியாயம் எல்லாம் செய்து ஆசுப்பத்திரியிலயும் கிடத்தினவையல்லே- அப்ப இந்த காட்சியெல்லாம் விமலிண்ட கையடக்கத் தொலைபேசியில இருக்கிற கமராவில படம் எடுத்தவர்.

இப்ப அந்த கைத் தொலை பேசியிண்ட விலை என்னவாம் எண்டு தெரியுமோ கனக்கயில்ல ஒரு இலட்சத்து ஐம்பதுனாயிரமாமல்லே.

அப்பிடியானால் இவ்வளவு ஆடம்பரமா இருக்க இவையள் சொல்லுறபடி இவையிண்ட வருமானம் போதாதே.

எல்லாம் ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி மகளே எண்டிற மாதிரித்தான்.

ஒரு ரூபா சம்பளம் எடுக்கிற ஜெயலலிதா எவ்வளவு டாம்பீக வாழ்க்கை வாழுறா எண்டால் இப்பதானே இவையள் அனுபவிக்கத் தொடங்கியிருக்கினம்.

அனுபவிராசா, அனுபவி.



# அறிவியல்

ஆரம்பத்தில் உலகம் ஒரு கிராமம் என்றார்கள். அதன் பின் உலகம் ஒரு வீடு என்றார்கள். ஆனால் இப்போது உலகம் உள்ளங்கையில் என்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் விஞ்ஞானத்தின் அதிவேக வளர்ச்சியே. தொடர்பாடல் துறையில் ஏற்பட்ட புரட்சி காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டே செல்கின்றது. அந்த வகையில் கையடக்கத் தொலைபேசி இன்று உலகின் பெரும் பாகத்தை ஆக்கிரமித்துள்ளது.

சந்தைக்கு நாளுக்கு நாள் புதிய புதிய கையடக்கத் தொலைபேசிகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில் இனி அறிமுகமாக இருக்கின்ற கையடக்கத் தொலைபேசிதான் பீ.பீ.ஏ அதாவது பிரத்தியேக டிஜிற்றல் உதவியாளன் என்பது அதனுடைய கருத்து. "சூப்பர் அசிஸ்ரன்ற்" எனும் இவ்வகை கைத்தொலைபேசி ஒரு கணினியை நாம் கையில் கொண்டு செல்வது போல சகல வசதிகளையும் கொண்டமைந்தது.

இதன் மூலம் மின்னஞ்சல் அனுப்புதல், செய்திகளை அறிதல், குறிப்புகளை எழுதி வைத்துக் கொள்ளல், நகரங்களின் வீதிகளை ஒன்லைன் மூலம் அறிந்துகொள்ளல் என ஒரு கணினி செய்யும் அத்தனை வேலைகளையும் விட அதிகமான வேலைகளை செய்யத்தக்கது. மேலும் இதில் உள்ள தகவல்களை கணினிக்கு உடனடியாக மாற்றம் செய்யவும் முடியும். அத்தோடு வங்கிக் கணக்கு விபரங்களை அறிந்து கொள்ளல், பாடல்களை கேட்டல் என பல வேலைகள் இதன் மூலம் செய்யலாம்.

நாம் இணையத்தளத்தை திறப்பதென்றால் சுமார் 20 விநாடிகளாவது காத்திருக்க வேண்டி வரும். ஆனால் இந்த கையடக்கத் தொலைபேசியில் அப்படியல்ல. இங்கு இணைப்பு நிரந்தரமாகவே இருக்கும் அதனால் உடனடியாக இணையத்தளத்தை திறக்க முடியும் ஜீ.ஓ.ஆர்.எஸ் எனும் புதிய தொழில்நுட்ப முறை மூலம் இதனை வழங்குகின்றார்கள். இப்போதுள்ளஜீ.எஸ்.எம். முறை மூலம் ஒரு விநாடிக்கு 1000 குறியீடுகளை மட்டுமே பரிமாற முடியும். மேலும் சில வருடங்களில் U.M.T.S எனும் புதியமுறை மூலம் ஒரு விநாடியில் 25000 குறியீடுகளை பரிமாற முடியும். இது வெகு விரைவில் ஐரோப்பாவில் அறிமுகமாக இருக்கிறது. இந்த தொழில்நுட்பத்தையும் சூப்பர் அசிஸ்ரன்ற் என்ற புதிய தொலைபேசி இணைத்துக்கொள்ளும். செலவு அதிகம் என்பதால் காட்டிஸ்க் இணைக்கப்படமாட்டாது. அத்தோடு பற்றரிகளை நீடித்த காலத்திற்கு பாவிப்பதற்கு புதிய தொழில்நுட்ப முறையும் சேர்த்துக்கொள்ளப்பட இருக்கிறது. எது எப்படியோ இன்று உள்ளங்கையில் உலகம் என்பது சந்தோசமான விடயயம் தானே.



## உலகத்தை என்னவென்று சொல்வது?

விஞ்ஞானத்தின் வளர்ச்சி மருத்துவத்துறையில் பெரும் பங்காற்றிக்கொண்டிருக்கின்றது. நாளுக்கு நாள் மருத்துவர்கள் நோய்களை குணப்படுத்துவதற்கு புதியபுதியசிகிச்சை முறைகளையும் புதியபுதியமருந்துகளைக்கண்டு பிடிப்பதிலும் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். அந்தவ்கையில் மாரடைப்பு நோயை குணப்படுத்துவதற்கு சிறிய கருவிகளை பொருத்தும் முறை ஒன்று 1994ஆம் ஆண்டு அறிமுகமாகிவிட்டது. மாரடைப்பு ஏற்பட்டவர்களின் இதயத்தை இயங்கச்செய்வதற்கு இக் கருவி பொருத்தப்படுகிறது.

மனிதனின் உடலினுள் இருந்தபடியே இதயத்தை இயங்கச் செய்யும் இக்கருவி பொருத்தப்பட்ட மனிதர்கள் இன்று நிறையப் பேர் உள்ளனர். எனவே இனி மாரடைப்பு நோய் பற்றி அஞ்சத் தேவையில்லை. முன்னர் மாரடைப்பு ஏற்பட்டவர்களுக்கு



## இனிப்பிரச்சினை இல்லை

அறுவைச் சிகிச்சை மூலம் பன்றியின் இதயத்தையே பொருத்தப்பட்டது. ஆனால் இதன் மூலம் எதிர்பார்த்த நன்மைகள் ஏதும் கிடைக்கவில்லை. அதன் விளைவாகத்தான் அறிமுகமானது மேற்சொன்ன செயற்கைக்கருவி இப்போது இந்தக் கருவிகளில் மேலும் புதிய வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது.

கடுமையான மாரடைப்பு ஏற்பட்ட 129 பேரை தெரிவு செய்து அவர்களிடம் ஓர் ஆய்வு செய்யப்பட்டது. இதில் 68 பேருக்கு இந்தச் செயற்கைக் கருவி பொருத்தியும் மற்றய 61 பேருக்கு இது பொருத்தப்படாமலும் சாதாரண சிகிச்சையும் அளிக்கப்பட்டது. முடிவு இந்தக் கருவி பொருத்தப்பட்ட 68 பேர் கொண்ட குழு மற்றையவர்களை விட மிகவும் ஆரோக்கியமாக இருந்தனர் அத்தோடு இவர்கள் நீண்ட காலம் வாழ்வோராகவும் காணப்பட்டனர்.

இப்புதிய கருவி முழு அளவில் இதயத்தை இயக்கச் செய்கின்றது. ரைற்றானியத்தினால் செய்யப்பட்ட வட்டவடிவான உருவம் கொண்டது. இதனுடைய நிறை 1500 கிராம் ஆகும். இதயத்தின் தொழிற்பாடு எவ்வாறோ அவ்வாறே இக்கருவியின் செயற்பாடும் இதற்கான பற்றரி மனிதனின் வெளி உடம்பில் இருந்து சக்தியை வழங்குகின்றது. சக்தியை பெற்றுக் கொண்ட விசேட கருவி தோலை ஊடறுத்து மேற்கூறப்பட்ட கருவிக்குக் கடத்தும். இதன் மூலம் மேற்படி கருவி இயங்கும். இது மாரடைப்பு நோயாளர்களை பொறுத்த வரை அவர்களது நண்பனாக வேகாணப்படுகிறது. இனிமேல் மாரடைப்பு ஒரு பெரிய பிரச்சினை இல்லை என்பது மகிழ்ச்சியே!



# மருத்துவம்

தசை வள்ர்ச்சிக்கும், உடல் வலிமைக கும் மிகுந்த அளவில் பயன் தரக்கூடியது பேரீச்சம் பழம்.

நமது நாட்டில் கிடைக்கும் பேரீச்சம் பழம் எல்லாம் பிற நாடுகளில் பக்குவம் செய்து அனுப்பப்பட்டவையாகும்.

## காச நோய்க்கு பேரீச்சம் பழம்

பேரீச்சம் பழத்தில் விட்டமின் 'ஏ' உயிர்ச்சத்துகள் அதிகமாக உள்ளன. ஓர் அவுன்ஸ் பழத்தின் விட்டமின் 'ஏ' சத்து 170 மில்லிக்கிராம் அளவு அமைந்துள்ளது. மற்றும் பி-1 விட்டமின் 26 மில்லிக்கிராம் பி-2 விட்டமினும் அமைந்துள்ளன.

இருப்புச்சத்து 30 மில்லிக் கிராம் அளவும். சுண்ணாம்புச் சத்து 20 மில்லிக் கிராம் அளவும் பேரீச்சம் பழத்தில் உ ங்கி இருக்கின்றன.

பேரீச்சம் பழத்திற்கு இரத்தத்தை விருத்தி செய்யும் ஆற்றல் உண்டு. இரத்தத்தின வளத்தை மேம்படுத்தும் இயல்பும் இதற்கு உண்டு. ஒவ்வொரு நாளும் இரவில் சிறிதளவு பேரீச்சம் பழத்தை சாப்பிட்டு, பசுவின் பாலை அருந்தி வந்தால் நல்ல இரத்த விருத்தி ஏற்படுவதோடு உடலையும் நல்ல வளம் பெறச் செய்யும்.

## ஆஸ்துமாவுடன் வாழ்தல்

ஆஸ்துமாவின் நிலைமை குறித்து அதிகளவில் புரிந்து கொள்வதன் மூலம் ஆஸ்துமாவுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கவும் அதைக்கையாளவும் முடிகின்றது. இதன் கருத்து என்னவெனில் ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டவரையும் அவரது குடும்பத்தினரையும், வைத்தியரையும் சரியான வழியில் சம்பந்தப்படுத்தல் என்பதாகும்.

பெருமளவு சந்தர்ப்பங்களில் ஆஸ்துமா நிலைத்திருக்கக் கூடியது. இதன் கருத்து என்னவெனில் இது பற்றி நீங்கள் புரிந்துகொள்வதுடன் சாத்தியமானளவு அது கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டுள்ளது என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஆஸ்துமாவுடன் வாழ்தல் ஒரு நடைமுறையிலுள்ள செய்முறையாக விளங்கலாம். ஆனால் சகல செயற்பாடுகளிலும், பெரும்பாலானோர் பங்குபற்றக் கூடியவர்களாக விளங்கவேண்டும்.

ஆஸ்துமா என்பதன் அர்த்தம் என்ன?

சுவாசக் குழாய்கள் சுருங்கி சுவாசிப்பதற்குக் கஷ்டமாக இருக்கும் ஒரு நிலைமையே ஆஸ்துமா ஆகும். ஆஸ்துமாவின் சாதாரண அறிகுறிகள் வருமாறு:-

*மூச்சிழுப்பு. (நெஞ்சில் ஒரு சீழ்க்கை ஒலி)
*நெஞ்சில் இறுக்கமும்,
*சுவாசிப்பதில் கஷ்டமும்.
*இருமல் - பொதுவாக இரவில்.
*சளி உற்பத்தி.

கிரேக்க மொழியில் ஆஸ்துமா என்ற சொல்லுக்கான அர்த்தம் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? மூச்செடுப்பதற்கு திணறுதல் அல்லது மூச்சுத் திணறலுக்கு ஆளாதல் என்பதே அர்த்தமாகும்.

நாம் சுவாசிக்கும் போது ஒன்றுடன் ஒன்று இணைந்த குழாய்கள் அல்லது காற்றுவழிகள் ஊடாக காற்றானது ஒரு தொடராக உள்ளேயும் வெளியேயும் செல்கின்றது. சுவாசக் குழாய்கள் பெரிய மரம் போன்ற கட்டமைப்பைக் கொண்டதாகும்.

காற்று முதலில் குரல்வளை அல்லது காற்றுக்குழாய் எனப்படும் தனித்த "அடிமரம்" ஊடாகச் சென்று பின்னர் சுவாசப்பைக்குழாய் மற்றும் சுவாசப்பைக் குழாய்க்கிளை என அழைக்கப்படும் சிறிய சிறிய கிளைகளாகப் பிரிகின்றது. பின்னர் நுண்ணிய இலைகளில் காற்றுவழி முடிவடைகின்றது. இது இரத்த ஓட்டத்திற்குள் ஒட்சிசனை($O_2$) அனுப்புவதற்கும் காபனீர் ஒட்சைட் ($CO_2$) போன்ற கழிவு உற்பத்திகளை வெளியேற்றுவதற்கும் அனுமதிக்கின்றது.

ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டுள்ள பெரும்பாலானோர் அழற்சியான சுவாசப்பைக் குழாய்களை அல்லது காற்று வழிகளைக் கொண்டுள்ளார்கள். ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டுள்ள ஒருவரில் காற்றுவழிகள் வழமையைவிட கூருணர்வுள்ளவை (Hypersnsitivity) என்பதுடன் " அதி பர மீள் தீவிரம்" அல்லது "திடீர் தசை இழுப்பு" என பெரிதும் அழைக்கப்படுகின்றது. இதன் கருத்து என்னவெனில் "எரிச்சலூட்டும் தூண்டலுக்கு" வெளிப்படும்போது அவை அதிகளவில் தீவிரமடைந்து சுருங்குவதுடன் சுவாசிப்பதற்குக் கஷ்டத்தையும் ஏற்படுத்துகின்றது. கடுமையான நிலைமைகளில் இது "ஆஸ்துமா



தாக்கம்" என அழைக்கப்படுகின்றது. பின்வரும் காரணங்களின் நிமித்தம் காற்றுவழிகள் சுருங்குகின்றன.

* குழாய்ச் சுவர்களில் தசைகளின் இறுக்கம்.
*குழாய்களின் அழற்சி.
*நுதியங்களில் வீக்கம்.
*குழாய்களினுள் அதிகரித்த சளி. இந்த அம்சங்கள் பலதரப்பட்ட மட்டங்களில் விளங்கும் குழாய்ச் சுவர்களில் தசைகளின் எளிய இறுக்கத்தைவிட ஆஸ்துமாவில் அதிகளவு உள்ளது என்பதை உணருவது முக்கியமானதாகும்.




# எத்தனை காலம்..?

ரமணன்

அந்த ...அழகான கடல்... அந்த கரையோரம் நடந்து... ஏரல் கிண்டுறதுக்கு நல்ல ஆசை. நல்ல ஏரல் பிடிச்சுக்கொண்டு வந்து அம்மாட்ட குடுத்தா அவ வெந்தயக் குழம்பு வைச்சு தந்தா எண்டால் அமுதம்தான்.

அந்த கடற்கரையோரம் நடந்து கொஞ்சத் தூரம் போனமெண்டால் காளிதோட்டம் வரும் அங்கதான் அம்மாவோட போய் விறகு கட்டிக் கொண்டுவாறனாங்கள்.

என்னோட படிச்ச மரியதாசோட நான் அங்க நெடுகப் போறனான். அங்கதான் நாகதாளிப் பழம் கிடக்கு... அவன் என்னை கூட்டிக் கொண்டு போய் இரண்டு பேரும் நல்லா நாகதாளிப்பழம் சாப்பிடுவம். அதுக்குள்ள நாகபாம்பு இருக்குமாம் அந்த பூவின்ற மணத்துக்கு வருமெண்டு எல்லாரும் சொல்லுறவை.

நாகதாளிப்பழம் நல்ல சிவப்பாய் இருக்கும். நல்ல இனிப்பு அதுக்குள்ள இருக்கிற நட்சத்திர முள்ளை எடுத்துப் போட்டு சாப்பிடவேணும் இல்லை எண்டா் அந்த முள் தொண்டைக்குள்ள போய் சிக்கி சாக்காட்டிப் போடுமாம்.

கவனமா சாப்பிட வேணுமெண்டு மரியதாஸ் சொல்லுவான். அவனுக்கு என்னில நல்ல விருப்பம் அப்பிடித்தான் அவனில நானும் நல்ல நேசம்.

பேந்து சம்பேதுவானவர் கோயில் மணி கேட்கும். அங்க கஞ்சி குடுப்பினம் நேத்திவைச்சா நேத்திக்கு கஞ்சி குடுக்கிறவை நானும் தங்கச்சியும் ஓடிப்போய் கஞ்சி வாங்கிக் குடிப்பம் நல்லாயிருக்கும்.

எனக்கு கடல்ல குளிக்க நல்ல ஆசை அந்த அலையுக்கை விழுந்து.... விழுந்து குளிச்சிட்டு வீட்ட போனன் அப்பர் வேலியில நிண்ட வாதராணித் தடியை முறிச்சு நல்ல அடி இப்பவும் என்ர துடையில அந்தத் தழும்பு இருக்கு.

அரிவரியில ஆனா எழுத கடற்கரை மணலைத்தான் அள்ளிக்கொண்டு வந்து அப்பர் ஆனா எழுதிக்காட்டுவார். அந்த கோயிலில ஏறி நல்லா விளையாடுவம். வைரவ கோயிலில சித்திரை பௌர்ணமிக்கு கடற்கரையில இருந்து திருவிழா பாப்பம்.

அந்த கடற்கரை மண்ணில கிளித்தட்டு விளையாடுவம், மாம்பழம் விளையாடுவம், பட்டம் ஏத்தி விளையாடுவம். வயித்தியாம்பிள்ளை சம்மாட்டியாரின்ர வாடியில ஐஸ்கட்டி வாங்கிச் சாப்பிடுவம். கொறுக்கா புளியாணத்தோட சோறு சாப்பிட்டா அந்த காரல் என்னருசியாய் இருக்கும் இப்ப நினைச்சாலும் வாயூறுது.

அந்த மண்ணில உருண்டு பிரண்டு விளையாடுவம். சம்பேதுருவார் பெருநாளுக்கு நாடகம் போடுவம் அதில செபஸ்தியாம்பிள்ளை அண்ணை மரியதாஸ் அண்ணை நடிப்பினம், என்ன சந்தோசமான வாழ்க்கை.

அமைதியாக இருந்த கடல் என்ன நடந்ததோ தெரியேல்ல. அந்த விடிகாலைப் பொழுதில் எங்கள் எல்லாரையும் அல்லோலகல்லோலப்பட வைத்தது.

வீடு, வாசல், பள்ளிக்கூடம், கோயில், எல்லாத்தையும் அழிச்சுப் போட்டுது. அது மட்டுமே எங்கட உறவுகள் எல்லாத்தையும் தன்னோட அள்ளிக்கொண்டு போட்டுது.

அதை எப்பிடிச் சொல்லுறது கடல்ல ஏதோ பெரிய சத்தம் கேட்டுது நான் வீட்டுக்குள் இருந்து வெளிய வந்து பார்த்தன் எல்லோரையும் ஓடுங்கோ... எண்டு சொல்லிப்போட்டு ஓடினன் ஒரு பெரிய அலை வந்து என்னை மோதிக்கீழ விழுத்தி அள்ளிக் கொண்டு போகுது... என்னால ஒண்டுமே செய்ய ஏலாமல் போட்டுது.

கழுத்தளவு தண்ணி கண்மூடி திறக்கிறதுக்கிடையில வந்திட்டுது தத்தளிச்சும் போனன். இப்பதான் ஒண்டு ஞாபகத்துக்கு வருகுது நான் கடல்ல குளிக்கிறன் எண்டு பயந்து "தம்பி... டேய் சத்தியம் செய்து தாடா இனிமேல் கடல் பக்கம் போக மாட்டன் எண்டு"

இப்பிடி அம்மாவுக்கு சத்தியம் செய்து குடுத்தப்பிறகு கடல்ல குளிக்கிறதை விட்டிட்டன். நான் கடல் தண்ணியில அடிபட்டுப் போறன். என்ர கையில ஒண்டும் அம்பிடேல்ல ஒருக்காத்தாண்டு மிதக்கிறன். கையில ஏதோ தட்டுப்படுகுது ஒரு பிளாஸ்ரிக் கதிரை அதைப்பிடிச்சுப் போட்டன்.

அதை பிடிச்சு மிதந்து கொண்டு வாறன் எங்க போறன் எண்டு தெரியேல்ல. காதில பெரிய ஓலக் குரல்கள் கேட்டபடி இருக்குது... கொஞ்ச நேரத்திற்குப் பிறகு என்ன நடந்தெண்டு தெரியேல்ல.

நான் கண்முளிச்சுப்பார்க்கிறன் நான் ஆராலேயோ காப்பாற்றப்பட்டு முள்ளியவளை பள்ளிக் கூடத்தில கிடக்கிறன்.

என்ர உறவுகள் ஒண்டும் இல்லை எல்லோரும் கடலோட போட்டினம். நான் அழுது....அழுது கண்ணீரும் வத்திப்போச்சு. நான் மட்டும் இல்லை எல்லோரும் தங்கட உறவுகளை இழந்துதான் தவிக்கினம். ஆர் ஆருக்கு ஆறுதல்-சொல்லுறது எண்டு தெரியேல்ல. எங்கட வீடு, வாசல், சொத்து, சுகம் எல்லாம் போனாப் பரவாயில்ல அநியாயமாய் உறவுகளை இழந்து தவியாய் தவிக்கிறம்.

திரும்பிப் பார்க்கிறேன்... காதில் செய்தியாக எங்கட வீட்டுக்குப் பக்கத்தில இருந்த சின்னப்பிள்ளை ஆச்சி, செல்ல முத்தாச்சி, மணியக்கா குடும்பம், என்னோட படிச்ச வின்சன்ர மனிசிக்காரி பிள்ளைகள்.

இப்பிடி தெரிந்த உறவுகள் எத்தினை, எத்தினை மாக்கும்பிள்ளை அண்ணை குடும்பம் எத்தினை பேர் சொல்லாமல் கொள்ளாமல் போட்டினம் என்ர மனம் தவியாய் தவிக்குது.

இப்ப எங்கட அந்த மணற்குடியிருப்பு, கோயில் குடியிருப்பு, வண்ணாங்குளம், கள்ளப்பாடு ஏன் சம்பேதுருவானவர் கோயில் எல்லாம் கடல் காவு கொண்ட பூமியாக இவை எல்லாம் எங்கே? எங்கே? எண்டு தேடுகிறேன்.


எங்கட பாச உறவுகளையும் எண்ணி எண்ணி எனக்குள்ளே அழுகிறேன். மௌனமாக்.... கடல். இத்தனையும் சாதித்தபின் அமைதியாக சர்வ சாதாரணமாக இருக்கிறதாம்.

எங்கள் மனம் மட்டும் அமைதி இழந்து ஏக்க அலை தொடர்கதையாக உயிர் உள்ள வரைக்கும் எம் உறவுகளின் அந்த பசுமையான நினைவலைகளுடன் நடைபிணமாக வாழவைத்து விட்டது அந்த கடல். என் தாயக உறவுகளையும் எண்ணி என் கண்களில் கண்ணீர்..... ஊற்றங்கரைப்பிள்ளையார் கோயில்... மணியோசை... நம்பிக்கையை இழக்காமல்... மீண்டும் உறுதியுடன் எழுவோம் என ஒலித்தது.

நான் நிமிர்கின்றேன்... என் கண்முன்னே... தன் குடும்பத்தில் எல்லாரையும் இழந்து ஒருமகன் மட்டும் மிஞ்ச..... தவிப்பையும், இழப்பையும் இதயத்தில் தாங்கி அப்பு அண்ணர் ஊன்று கோலுடன் என்னை நோக்கி நடந்து வருகின்றார்.

அவரின் அந்தத் தளராத உறுதி என் மனதிலும் ஆறுதலைத் தர எழுந்து அவரை நோக்கி செல்கின்றேன்.

"எல்லாரும்... உங்கட.... உங்கட நிவாரண அட்டையை கொண்டுவாங்கோ இண்டைக்குத்தான் அரசாங்கத்தின்ர நிவாரணம் வந்திருக்கு என்ற குரல் கேட்டவர்கள் நிவாரண அட்டையுடன் செல்ல அவர்களில் ஒருவனாய் நானும் கலக்கின்றேன்.



# மின்னற் கீற்று



உருவகம்

ஓர் இரவு. மாய இருள் உலகை மூடி, தானே உலகமாய்க் காட்சியளித்தது, அறியாமை என்ற அந்தகாரத்தைப் போலே.

வானத்தில் நட்சத்திர வெண் மலர்கள் மலர்ந்திருக்க வேண்டுமே; அவைகளும் மலரவில்லை. தாரகைச் சிறுசுடர்கள் கண் சிமிட்டி, அந்தக்காரிருளின் வலியைக் குறைத்திருக்க வேண்டுமே; அவைகளும் அணைந்துவிட்டன. சூல்கொண்ட கார் மேகங்கள் வான வெளியைத் தமதாக்கிக் கொண்டன. அவை இருளுக்கு முழுக்கருமை தீட்டி. கண்ணொளி தானும் நுழையாக் கனத்த இருளாக்கி விட்டன.

இப்பொழுது, நம்பிக்கை என்ற சிறு ஒளி தானும் காணாத மனித மனமாகி விட்டது உலகம். வானத்தையும், பூமியையும் ஒன்றாக்கி, எங்கும் வியாபகமாய், தானே ஏகமாய், பயங்கரமாய்க் காட்சி தந்தது இருள்; காரிருள்; கனத்த இருள்.

அந்தக் கனத்த இருளைக் கிழித்துக் கொண்டு, மேலை வானிலே ஒரு மின்னல் கீற்று சிரித்தது ஒருகணம் உலகமே ஒளி வெள்ளத்தில் மிதந்தது. இந்தக் கோலக்காட்சியை அந்த மின்னல் கண்டது. மின்னலின் மனத்தில் ஒரு துடிப்புப் பிறந்தது. அது அகம்பாவமாய் முளைத்து, 'நானா'ய் வளர்ந்து, பொறாமையாய் மலர்ந்தது.

மீண்டும் மின்னல் மின்னியது. தொடர்ந்து இடி இடித்தது. மின்னல் சிரித்துக் கொண்டு, பெருங் குரலாற் பேசியது. "சூரியனாம் சூரியன் அவன் சக்தி மிகுந்தவனாம். அவன்ஒளி, உலகத்துக்கு மலர்ச்சி அளிக்கிறதாம், உயிர்ப்பு ஊட்டுகிறதாம். இயக்கம் கொடுக்கிறதாம்.என்ன அறியாமை! இதோ நான் இந்த உலகத்துக்கு உயிர்ப்பும், இயக்கமும் கொடுக்கிறேன்."

மின்னலுக்கும் இருளுக்குமிடையிற் பெரும்போர் மூண்டது. மின்னல் தன்னொளியால் உலக இருளை துடைக்க முயன்று கொண்டிருந்தது. ஆனால், பாவம்! மின்னல் தன் ஆயுளின் அளவை உணரவில்லை!

மின்னல் மின்னியது; ஒருகணம் இருள் விலகியது; அடுத்தகணம் இருள் முன்னிலும் பார்க்க மகா பயங்கரமாய் உலகை அணைத்துக் கொண்டது.இந்தப் பலப்பரீட்சை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

மின்னல் சலித்துவிடவில்லை முயன்றது 'முயற்சி திருவினையாக்கும்' என்று உணர்ந்தது. விடிவுமட்டும் முயன்று கொண்டே இருந்தது.
பொழுது புலர்ந்தது.

கீழ்வான மங்கை, மஞ்சள் குளித்து, செஞ்சாந்து பூசி, மலர்ச்சி பொங்கச் சூரிய தேவனை வரவேற்றாள்.

சூரியன் மெல்ல மெல்ல மேலே வந்தான். அவன் ஒளி உலகிற் பரந்தது; இருள் விலகியது உலகம் மலர்ந்தது; உயிர்த்தது இயங்கியது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

ஜெயசிக்குறு களம் அதிர்ந்துகொண்டிருந்த காலமிது களத்தில் துணிவுடன் போராடிக்கொண்டிருக்கும் போராளிகளுக்கு வலு சேர்க்கவென புதிய போராளிகளின் அணியொன்றும் புளியங்குளம் தொடக்கம் ஓமந்தைவரை களமிறங்கி இருந்தது. அப்படி களப்பணிகளுக்காக வந்திருந்தவர்களில் பலதரப்பட்ட வயதை உடையவர்கள் வந்திருந்து

களம்புகுந்த அவனை புதிய போராளி என்று யாரும் எளிதில் சொல்லிவிட முடியாது.

எதிரியின் மூர்க்கமான எறிகணை வீச்சுக்கள் நடந்துகொண்டிருந்த காலம். களமுனையின் ஒரு பக்கம் நிர்வாக வழங்கலுக்கு பொறுப்பாக இருந்த கப்டன் எனெக்ஸ் தேவமைந்தனிடம் செய்தி ஒன்றை அனுப்பினான். செய்தியை

வளங்களையும் கொண்டுதரும் அணியில் கப்டன் தேவமைந்தனும் ஒருவன்.

பூனைக்கண் பார்வை, கலகலப்பான சிரிப்பு, ஏதாவதொரு பகிடிக் கதையுடன்வரும் அந்தப் போராளியை எளிதில் மறப்பது என்பது மிக மிகக்கடினமே. எமக்கான உணவுகளை கொண்டுவரும் நேரத்தில் சாப்பாடு வேண்டுமோ?....சாப்பாடு. சாப்பாடு வேண்டுமோ?....சாப்பாடு என கத்துவான்.

ரவைகள், குண்டுகள் கொண்டுவரும் போது. குண்டு....டு...டு.., ரவை.... குண்டு,குண்டு ரவை,ரவை,ரவை குண்டு என கத்தி தனது பகிடியை வெளிக்காட்டி எல்லோரையும் சிரிக்க வைப்பான்.

இதே போலவேதான் அவனது மருத்துவ சேவையின் போதும். எந்நேரமும் பகிடியுடனேயே மருந்திட்டு சிகிச்சை செய்து, குளிசைகளைக் கொடுப்பான்.

அவரை மேலதிக சிகிச்சைக்கென எடுத்துச்செல்ல வந்த அவசரகால ஊர்தி புளியங்குள மையத்திலுள்ள பாலமொன்றில் அமைந்திருந்த எமது மருத்துவ நிலைக்கு வந்தது. வேகமுடன் காயக்காரரை ஊர்தியில் ஏற்றிவிட்டு காப்பரணில் புகுமுன் எதிரியின் 120 மி.மீ எறிகணை ஒன்று வந்து வீழ்ந்து அவ்விடத்திலேயே மைந்தன் என்ற எமது மூத்த மருத்துவப் போராளி தனது ஒரு காலை தொடையோடு இழந்தார்.

மிக சிரமத்தின் மத்தியில் அவருக்கும் உடன் சிகிச்சை அளிக்கப்பட்டது. அந்த சிகிச்சைக்கு பெரும் உதவி செய்தான் கப்டன் தேவமைந்தன். அந்தப் போராளியின் உயிரைக் காப்பாற்றி விடவேண்டும் என மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டான். அவனது எதிர்பார்ப்புப் போலவே அந்தப்போராளியின் உயிரும் காப்பாற்றப்பட்டது. அன்றிலிருந்து தான் ஒரு மருத்துவப் போராளியாக வந்து பலரின் உயிரை காப்பாற்றவேண்டுமென்று ஆசைப்பட்டு மருத்துவப் படிப்பைத் தொடர்ந்து சிறந்ததொரு கள மருத்துவனானான்.

ஒருவனை தூக்குவதும் அவனைக் கொண்டுசென்று பாதுகாப்பான இடத்தில் கிடத்துவதுமாகவே வேகமுடன் செயற்பட்டான். இவனைவிட இரண்டு மடங்கு பெரியவனான மேஜர் மதியனை தூக்கிச்சென்றது அதிசயமாகவே இருந்தது. சண்டை உக்கிரமடைந்தபோது எறிகணைகள் இடைவிடாது வெடித்துச் சிதறின. அந்தச் சிதறலில் சுவர்ணனும் காயமடைய அவனையும் தேவமைந்தனே கொண்டு சென்று காப்பாற்றினான்.

இதே போன்று கிளிநொச்சி,பரந்தன் சமர்க்களத்திலும் இத்தாவில் சமர்க்களத்திலும் துணிவுடன் நின்று களமாடினான். தனித்து மருத்துவம் செய்வதைவிட்டு எந்தக் களத்திலும் முதலிலேயே எதிரியின் ஆயுதம் ஒன்றை எடுத்து சண்டை செய்வது அவனுக்குப் பிடித்தமானதொன்று. “மருந்திடுவது போராளிகளை காக்க வெடிமருந்தேந்துவது அக்கிரமக்காரர்களை அழிக்க” என தனது நாட்குறிப்பேட்டில் எழுதி வைத்திருந்தான்.

எந்நேரமும் சுறு சுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தவன் 2001.01.16 அன்று தைப்பொங்கல் முடிந்த மறுநாள் தனது



# மருந்திட்ட மகத்தானவன்

# கப்டன் தேவமைந்தன்

திறம்பட தங்களது வேலைகளைச் செய்தார்கள்.

சாயம் பூசப்பட்ட மேல் அங்கியும் பலவித வர்ணங்களுடைய அரைக் காற்சட்டையும் அணிந்து அவர்கள் களத்தில் வலம் வரும் போது பகிடியும் சிரிப்பும் கும்மாளமும் சீண்டல்களும் கலந்தேவரும். இப்படியானதொரு களநாயகர்களின் முதல் வருகையிலேயே இனிமை நிறைந்த சிரிப்புடன் சிறப்பான குணாம்சங்களுடன் எந்நேரமும் பகிடியுடன் வருகைதரும் மாவீரன் கப்டன் தேவமைந்தனும் கலந்திருப்பான்.

ஜெயசிக்குறு களம் எப்போதும் அதிர்ந்த வண்ணமே இருக்கும். ரவைகள் ஓயாது பொழியும். எறிகணைகள் ஓயாது தூவும். இயந்திரக்கழுகுகளின் எச்சங்கள் விழுந்தவண்ணமே இருக்கும்போதும் அங்கும் இங்குமாக ஓடித்திரிவான். இயக்கத்திற்கு புதியவனாக இருந்தாலும் இறுக்கமான அந்த களநடவடிக்கையில் மிகவும் உற்சாகமாகவும் வேகமுடனும் செயற்பட்டான். அவனது வேகமே எத்தினையோ ஆபத்தான இடங்களில் அவனைக் காப்பாற்றியது என்று சொல்லலாம்.

கொண்டு புளியங்குள வீதியை கடந்து ரயில் பாதையிலுள்ள பாலத்தை அடைய முற்பட்டவன் நானும் ஊர்வேலனும் பார்த்துக்கொண்டே இருந்தோம். இராமனூரிலிருந்த எதிரியின்

**க.மிரேசு**

81 மி.மீ எறிகணைகள் அனலை கக்கியபடி வந்தன.

எறிகணைகள் ஏவும் சத்தம் எமக்குக் கேட்ட அதே கணத்தில் கப்டன் தேவமைந்தனுக்கும் கேட்டிருக்கவேண்டும். என்னவென்று அந்தளவு வேகமுடன் வந்தானோ? தெரியாது. எறிகணைகள் வந்து விழுவதற்குள் ஓடிவந்து ஒரு பாதுகாப்பரணில் புகுந்து விட்டான். எறிகணைகள் வெடித்துச் சிதறியபின்பு பார்த்தபோது தேவமைந்தன் வந்துகொண்டிருந்த இடத்திலேயே எறிகணைகள் வீழ்ந்துவெடித்திருந்தன.

இப்படி அவன் தப்பிய எத்தனையோ சம்பவங்களை குறிப்பிடலாம். விநியோகப் பணியின் நிமிர்த்தம் எமக்கான உணவுப் பொருட்களையும் ஏனைய

ஓடிவா எல்லோரும் ஓடிவா

தடுப்பை (மலேரியா)பிடி

தடுப்பைப் போடு

இப்படி ஏதேதோ சொல்லி தனது சேவையை செய்து முடித்துவிடுவான். புண்ணுக்கு மருந்து கட்டப் பயப்படும் எந்தப் போராளியும் கப்டன் தேவமைந்தனிடம் மருந்து கட்ட பெரும்பாலும் ஆசைப்படுவதுண்டு. ஏதோ கதைகளைச் சொல்லி வித்தை காட்டி என்ர அப்பன், என்ர செல்லம் என்று ஏதாவது சொல்லி மருந்து கட்டிவிடுவான்.

கப்டன் தேவமைந்தனின் மருத்துவத் துறை பிரவேசம் என்பது, மிகவும் வித்தியாசமானதொன்று. எப்போதும் சுறுசுறுப்பாக அந்தப் போராளிக்கு தாக்குதல் அணியே விருப்பமாக இருந்தாலும் சம்பவம் ஒன்றை நேரில் கண்டதும் மருத்துவத் துறையை தேர்ந்தெடுத்தான்.


ஜெயசிக்குறு காலமது. முன்னரங்கு நிலையொன்றில் நடந்த சண்டையில் போராளி ஒருவன் காயமடைந்திருந்தான்.

கப்டன் தேவமைந்தனின் மருத்துவ வாழ்வில் ,எத்தனையோ போராளிகளை பொதுமக்களை காப்பாற்றி இருக்கிறான். இக்கட்டான பொழுதுகளிலெல்லாம் சளைக்காது நின்று தனது கடமையை செய்ததனால் கப்டன் தேவமைந்தன் எத்தனையோ வெற்றிகளை பெற்றுத் தந்திருக்கிறான். கப்டன் தேவமைந்தனின் அயராத உழைப்பிற்கு எத்தினையோ உதாரணங்களைச் சொல்லலாம். அவற்றில் முக்கியமான ஒன்று 1997ஆம் ஆண்டு 8ஆம் மாதம் நடந்த ஓமந்தை ஊடறுப்புச் சமர். இந்தச் சமரிற்குச் சாதாரண விநியோக அணியாகவும் (suply team ) காவும் அணியாகவும் (carring team ) வந்தவன் சண்டை உக்கிரமடைந்ததும் எமது பக்கம் காயக்காரர்களை ஓடி ஓடி தூக்கியது இன்னும் நிழலாக இருக்கிறது. வேறொரு மருத்துவப் போராளியான சுவர்ணனுடன் சேர்ந்து ஓடி ஓடி காயக்காரரை தூக்கினான்.

அணித்தலைவன் ஆழியனின் அந்த நாளுக்கான கட்டளைகளை கேட்டுக்கொண்டிருக்கும் போதே பெண் போராளிகளின் நிலைகள் மீது எதிரி தாக்குதலை தொடுத்தான். அவசர அவசரமாக தனது மருத்துவப் பையுடனும், துப்பாக்கியுடனும் களம் இறங்கினான்.

எதிரி கிணிகிரண 09 என தனது நடவடிக்கையை தொடர்ந்தான். புலிகள் சேனையும் தனது எதிர் நடவடிக்கையை தொடர்ந்தது. எமது நிலைகளுக்குள் உட்புகுந்த எதிரிகளுக்கு கப்டன் தேவமைந்தனின் துப்பாக்கி பதில் சொன்னது. உக்கிர சமர் நடக்க எதிரி பெரும் தொகையில் அவ்விடத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டான். அந்த நேரம் தன்னிடமிருந்த ரவைகள் அனைத்தையும் எதிரி மீது சுட்டு எதிரியை காவு கொண்டு எதிரி ஒருவனின் ரவைபட்டு தாயக மண்ணை முத்தமிட்டான். கப்டன் தேவமைந்தன் (குணசேகரம் விஜய்).

# எனது மேசை விளக்கு பற்றிய சில குறிப்புகள்



காலக்குறிப்பு-1

ஏதோவொரு,
மௌன அசைவினூடே....
தன்னுள் பலவற்றைப் புதைத்தபடி
என் வீட்டு மேசை விளக்கு
என்னைப் பார்க்கிறது.

கற்றலின் அசதி
ஏற்படுத்திய தூக்கத்தின் போது
விளக்கின் மீது தூண்டலைக்
காட்டினேன்
'தூங்கியது நியா...?
இல்லை நானா...?'
அது சிரித்தது
நான் சிந்தித்தேன்.

காலக்குறிப்பு-2

இன்னோர் நாள்
விளக்கு தூங்கியது
என் விழிகளும் தூக்கத்தை
நாடின.
எப்போதும் போலவே
'எனக்கா....? உனக்கா....?
தூக்கங்கள்'
'...............'
அது சொல்லிய போதுதான்
அடுப்படி எண்ணெய்க் குவளையில்
எனக்கோர் நாட்டம்.

காலக்குறிப்பு-3

இப்போது
விளக்கைப் பார்க்கிறேன்
என் வீட்டுத்
தாழ்வாரத்தில் கட்டப்பட்ட
வரிச்சுத் தடியில்
தொங்கியபடி - அது
கேட்கிறது.
'தொங்கிக் கொண்டிருப்பது
நானா..? நீயா..?'
'.................'
தொடர்கிறது நினைவுகள்
'தொங்கல்'
இப்போது கணக்கான போதும்
என்னிடம் விடையில்லை.

காலந்தான் கடக்கிறது: எனினும்
காரணங்கள்
கரைந்து போகுமுன்
என் வீட்டு மேசை விளக்கின்
வினாக்களுக்கு...
யாரும் விடை தாருங்களேன்.

நா. கானகன்

# காத்திருப்பு

உனக்கும் எனக்குமான
தூரம் அதிகம் தான்.
உனக்கும் எனக்குமான
பேதமும் அதிகம்தான்.
உனக்கும் எனக்குமான
பேதமும் வேறுதான்.
நாமிருவரும் இணையாத
இரு கோடுகள் தான்.
எப்பக்கம் நீட்டினாலும்
எப்போதுமே இணையாத
சமாந்தரக்கோடுகள் தான்.
நாங்கள்- ஆனாலும்
சமாந்தரங்கள்
சந்திக்க வேண்டுமென்றுதான்
சலியாமல் காத்திருக்கிறேன்
சரிவருமா?

மா. தீபன்



# ஒரு வாசகியின் குமுறல்...

"புங்குடுதீவு வீழ்கிறது" ஈழநாதம்:- வெள்ளிநாதத்தில் இதை வாசித்தபோது எத்தனை கவலை எவ்வளவு சோகம். சோகமே எங்கள் வாழ்க்கையா? வீழ்வதே எங்கள் விதியா? பாழாகிப் போவது எங்கள் கதையா? ஆளவந்தாரின் அடக்குமுறை மட்டுமல்ல சுனாமியின் கொடுமையும், குறையாத சோகங்கள் நிறையாத வாழ்க்கை.

அன்று நாற்பத்தெட்டு வருடங்களுக்கு முன்பு எனக்கு மணமானபுதிது அழகான கம்பீரமான கணவர். துள்ளும் இளமை துயர்களை எண்ணிப்பார்க்காத வயது. எண்ணினாலும் எதிர்த்து நிற்கும் தைரியம் நானும் என் துணைவரும் சந்தித்ததால் ஏற்பட்ட திருமணம் முதல் முதலாக புங்குடுதீவுக்குச் செல்கின்றோம். நீலப்பட்டாடை -கடலாடை போர்த்த புங்குடுதீவு அந்தத்தீவை அதுவரை நான் பார்த்ததுமில்லை. அங்குள்ள மக்களுடன் பழகியதுமில்லை. அங்கு செல்லும்போது நெஞ்சிலே பயம். எப்படி என்னை வரவேற்பார்களோ என்ற அச்சம்; அவலம்.

அந்த வேம்படிச்சந்தை வேப்பமரங்கள் நிறைந்த சிறிய சந்தை புங்குடுதீவின் சந்தை. நானும் அவரும் இறங்கினோம். வீடு மிக அண்மையில்தான் வாசல் திறந்து உள்ளே போனதும் வாங்கோ வாங்கோ என்ற வரவேற்பு வாய்நிறைந்த வார்த்தை முகம் மலர்ந்த சிரிப்பு அப்புறம் என்ன பயம் என்று பழகி மகிழ்ந்தது.

வரவேற்பதில் அந்த ஊர்மக்களை யாரும் மிஞ்சமுடியாது என்பது என் அபிப்பிராயம். மீன் பொரியல் மீன்குழம்பு, மீன் சொதி, முட்டை இப்படியான சாப்பாடு நண்டு, இறால், சோறு, கறி மட்டுமா அடிக்கடி கூழ். கூழ் என்றால் ஒரு சிறு கூட்டம் வீட்டில் கூடும். புலாலை மறுக்கும் புனிதர்களுக்கு இவை பிடிக்காதுதான் சின்னப் பையன்கள் வீடுதேடிக் கோர்வையாகக் கட்டிய மீனை கொண்டு வருவார்கள் இல்லையென்றால் கடற்கரைக்கு போய் மீன் வாங்கி வரலாம். அடுத்தடுத்த வீடுகளில் இருக்கும் பாட்டிமார் மாமிமார் என்ன மோன் வந்திருக்கிறாரா அந்தப் பொடிச்சியைப் பார்ப்பம் என்று சிரிப்பாய் மலர்வாய் வருவார்கள்.கையில் ஏதாவது தின்பண்டம் அல்லது முட்டை.

தண்ணீர்தான் கொஞ்சம் கஷ்டம். நல்ல தண்ணீர் நாடிப் போகவேண்டும். சில கிணறுகளில் நல்ல தண்ணீர் இருக்கும் நாங்கள் இருவரும் வயல் கிணற்றுக்கு குளிக்கப் போவோம். வெட்டவெளியில் பூங்காற்று வீசும் இடத்தில் குளிக்கும் போது ஒரு சுகம். சின்னப்பெண்கள் குடங்களுடன் தண்ணீர் எடுக்க வருவார்கள். வந்த பெண்களில் ஒருத்தி வாயாடி போலும். அடா? நீ கொண்டுவந்த அக்கா இவதானா என்று கேட்பாள் ஆமாம் ஏன் அவா அழகாயில்லையா? என்று என் கணவர் கேட்பார். ஏன் நான் அழகாயில்லையா? என்று அவள் திருப்பிக் கேள்வி கேட்பாள். இப்போது என்ன குறைஞ்சு போச்சு சொல்லு உன் கழுத்தில் தாலி கட்டவா என்று அவர் கேட்டதும் சீ போ கதைக்கிற கதையப்பார் என்று அவள் போய்விடுவாள் அப்படி அன்பாய்ப் பழகும் மக்கள்.

கண்ணகி அம்மன் கோயில், கந்தசாமி கோயில் திருவிழா வந்தால் எத்தனை மகிழ்ச்சி. நிலா வீசும் இரவுகள் திருவிழாக்கோலம், நினைக்கவே இனிக்கும் நினைவுகள். பள்ளிக் கூடங்கள் தேவாலயங்கள் எல்லாமே உள்ள தீவு. படித்தவர்கள் பலர் பட்டதாரிகள் பட்டியலிடமுடியாது. கண்ணகி அம்மன் கோயில் மட்டுமா நினைத்தவுடன் பஸ் ஏறி குறிகாட்டு வானில் இறங்கி படகில் பயணித்து நாகபூசணி அம்மன் ஆலயத்தைத் தரிசிக்கலாம். ஓலைப்பெட்டியில் போட்டு கட்டிய சாப்பாட்டுடன் கோயிலுக்குப் போய் இரவு தங்குவோம். மறுநாள் குளித்து மனமுருகி இறைவியை வணங்கினால் மன நிம்மதிதான்.

என்ன கண்ணூறோ தொண்ணூறில் ஊரைவிட்டுப் புறப்பட்டோம், புறப்படச் சொன்னான் புறப்பட்டோம். பறந்தடித்துத் திரிகிறோம் என்ற வார்த்தைகள் எவ்வளவு துயரமானவை. இன்று நாடு - புங்குடுதீவு நலிவுற்று பொலிவற்று சிறப்பிழந்து சீரிழந்து வேரறுந்து போன மரமாய் காட்சியளிக்கிறது.

மக்களோ வெளிநாடுகளில் பூட்டிய வீடுகளில் குளிரூட்டியையும் சூடேற்றியையும் நம்பி நாளெல்லாம் வீட்டுச் சிறைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எல்லாரும் கனடாவும் லண்டனும் போக முடியுமா? எங்கெங்கோ பரந்து தங்கி உயிர் சுமந்து உழைத்து ஒரு வாழ்க்கை வாழ வெளிநாடு சென்றவர்கள் உழைக்கலாம் கை நிறையக் காசு. மாறிப்போய் விட்ட உடை நடை பேச்சு வளர்ந்து வரும் சிறு வயதினருக்கு சொந்த மண்ணும் சுகவாழ்வும் சுதந்திரமும் தெரியாத ஒரு வாழ்க்கை.

இந்த நிலை மாறாதா? மாறும் மாறவேண்டும். சொந்த மண் சொர்க்கம், சொந்த மண்ணின் சுகம் எந்த மண்ணிலும் கிடையாது. எத்தனை தியாகங்கள் உயிரிழப்புக்கள் போராடிப் போராடி பொன்னான உயிரை மண்ணுக்கு ஈய்ந்த மாபெரும் செல்வங்கள் வீரர்கள் கல்லறையில் பூக்கும் கண்மணிகள் அவர்கள் கனவு அது நனவாக எங்கள் தலைவர் வழிகாட்டுவார் காட்டுகிறார்.

புங்குடுதீவு எழும்; எழுந்து நிற்கும். அங்கே கடலோரக் கவிதை பாடி களிப்போடு வாழ்ந்துவரும் எங்கள் பரம்பரை பயமின்றி வாழும் காலம் வரும்.

## புங்குடுதீவு எழும்... எழுந்து நிற்கும்...








## கைவண்ணம்



இ.அனஸ்டிகா,
பாரதி சிறுவர் இல்லம்.

# சுறா

கடலில் வாழும் மீன் இனங்களில் மிகப் பெரியது சுறா. காடுகளில் சிங்கம், புலி போன்ற விலங்குகள் ஏனைய விலங்குகளை கொன்று உண்பது போன்று கடலில் சுறா மீன் பிற உயிர்களை பிடித்து தின்னுகின்றன. இவ்வாறான சுறா மீன்களின் எலும்புகள் மென்மையானவை (எமது காதுகளில் உள்ள எலும்புகள் போன்று) இது 35 கோடி ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றன.

ஆரம்ப காலங்களில் காணப்பட்ட சுறா மீன்களுக்கும், தற்போது காணப்படுகின்ற சுறா மீன்களுக்கும், நிறைய வேறுபாடுகள் உள்ளன. ஆரம்பத்தில் இன்றுள்ள சுறாக்களைப் போன்று பல மடங்கு பெரிய சுறாக்கள் இருந்திருப்பதனை தொல்பொருள் ஆராய்ச்சியாளர் படிமங்கள் மூலம் கண்டறிந்துள்ளனர். மேலும் சுறா மீன்களுக்கு சிறப்பான ஒரு சக்தி உண்டு என்றால் அது மோப்ப சக்திதான்.

கடலில் அடிபட்ட மீன்கள் அல்லது இரத்தம் கடலில் கலந்தால் பல மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் குறிப்பிட்ட இடத்தை நோக்கி வந்து அதனை உணவாக்கிக் கொள்கின்றன. இதைவிட இவற்றின் உணர்திறனும் முக்கியமானது. கடலில் மீன்களின் அசைவினால் உண்டாகும் ஒலி அலைகளை நுட்பமாக உணர்ந்து அந்த இடத்தை அடைந்து அவற்றை இரையாக்கிக்கொள்கின்றன. மிகவும் கறுப்பாகக் காணப்படும்



இந்தச் சுறா மீன்கள் புதிய மாமிசத்தை பெரிதும் விரும்புகின்றன. உடல் உருளையாக இருக்கும். தலையிலிருந்து வால் பக்கம் நோக்கி தடவினால் வழுவழுப்பான தன்மையாகவும் வாலிலிருந்து தலைப்பக்கமாக தடவினால் சொரசொரப்பாகவும் காணப்படும்.

சுறா மீன்களுக்கு பசி வந்துவிட்டால் சில வேளை தனது இனத்தினையும், மனிதர்களையும் கூட சாப்பிட்டுவிடும். சிறிய மீன்கள் கடல் வாழ் உயிரினங்கள் இறந்த உயிரினங்கள் என்பனவே இவற்றின் உணவுகளாகும். இவற்றின் பற்கள் கூர்மையானவை இரையை பிடித்து உண்ணும்போது பற்கள் தேய்ந்து போனாலோ, விழுந்து விட்டாலோ அந்த இடத்தில் புதுப்பல் முளைத்து விடும். ஒரு சுறா தனது வாழ்நாளில் 20000 பற்களை உபயோகிக்கின்றன. இந்த சுறா மீன்களின் உடலோடு பைலட், மற்றும் சிமோரா இன மீன்கள் ஒட்டிக்கொண்டிருக்கும் இவற்றினை சுறா ஒன்றும் செய்வதில்லை. ஏனெனில் சுறாவின் பற்களையும், செதில்களையும் இவை சுத்தப்படுத்துகின்றன. சுறா மீனின் முட்டைகள் ஓடு போன்ற அமைப்பில் பாதுகாக்கப்பட்டு பத்து மாதங்களில் சுறாக் குட்டிகளாக வெளியே வருகின்றன. 300 வகை சுறா மீன்கள் கடலில் காணப்படுகின்றன. இவற்றில் 30 மனிதர்களை தாக்கக்கூடியவை. சுறா மீன்கள் பத்து மாதம் வரை பட்டினி கிடக்கக்கூடியன. இவ்வகையான சுறா மீன்கள் மட்டும் இல்லையென்றால் கடல் சாதாரண மீன்களால் நிறைந்து காணப்படும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

## சொற்சிலம்பம் - 75

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நே | ப் | ம | தி | லி | ட்ா | தீ |
| டி | கு | நீ | பா | ம | சீ | ட் |
| ரே | யா | ச் | சோ | ன் | ணி | கா |
| லை | அ | பா | ய | சு | ங் | வு |
| மே | ட் | தா | ஷ் | ரா | ம | ந |
| மு | ம் | கா | ச | ய் | யெ | ஸ் |
| சி | லை | ய் | ஒ | கி | ள | கூ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -73 இன் விடைகள்

01. சீவகசிந்தாமணி

02. முகமட் அப்பாஸ்

### சொற்சிலம்பம் - 73 இன் பரிசுக்குரியவர்

வி.விக்கினேஸ்வரன்,
கரம்பைக் குறிச்சி
கிழக்கு,
வரணி.

### சொற்சிலம்பம் - 73 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. கி.பிரசாந், அத்தார்திட்டம், புதுக்குடியிருப்பு.
02. தெ.ஜனனி, 1ஆம் வட்டாரம் நாவலர்வீதி, முள்ளியவளை.
03. ச.சபாநாயகன், இல.231 உக்கிளாங்குளம், வவுனியா.
04. க.கபிலேஷ், மு.பாலிநகர் ம.வி, வவுனிக்குளம்.
05. பூபவளேஸ்வரன், கச்சார் வெளி, பளை.
06. பு.தர்ஷன், இல 631 இராமநாதபுரம், கல்மடுநகர்.
07. வ.நிரோஜன், பற்றிமா றோ.க.வித்தியாலம, உருத்திரபுரம்.
08. தே.தர்ஷிகா, 2ஆம் கட்டை, பரந்தன்.

01. உலகிலே மிகப்பெரிய பாலைவனம்?

01) ....................................

02. அண்மையில் நடந்த வி.பி கிண்ண கிரிக்கெட்டை வென்ற நாடு?

01) ....................................

சொற்சிலம்பம்-75
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- ....................................


முகவரி :-....................................

# ஆமையாரின் இனிப்புச் சுவை

பகுதி-03




நன்றி:- பன்டேடைம்ஸ்






# விதியென எண்ணி காலத்தை வீணாக்காதீர்கள்

இன்றைய நாகரிக உலகில் எத்தனையோ புதுமைகளைப் படைக்கும் படைப்பாளிகள் மத்தியில் வீட்டுக்குள்ளே இருந்து தம் எதிர்காலத்தைப் பாழாக்கி இதுதான் தம்முடைய விதியென எண்ணி விழிப்படையாமல் இருப்பவர்கள் ஏராளம்.

இவர்கள் தம்மால் முடியாத ஒன்றிற்கு விதியென பெயர் சூட்டி தம்மை பரிதாபமான நிலைக்கு இட்டுச் செல்கின்றனர். வாழ்வில் நம் கவனயீனப்பிழையால் நடைபெறும் காரியம் யாவற்றுக்கும் விதியென வரையறை போட முடியாது. விதியையும் மதியால் வெல்லலாம் என்பது போல் எம்முடைய முயற்சி மூளை இவை இரண்டின் செயற்பாட்டால் விதியை மாற்றலாம் அல்லவா. எந்த ஒரு செயலைச் செய்யும்போதும் எம்மால் முடியுமானவரை முயற்சிக்க வேண்டும். நாம் ஒன்றுக்கும் முயற்சி செய்யாமல் அசட்டையாக இருந்து விட்டு இதுதான் எம் விதியென விரக்தி கொண்டு எம் காலத்தை வீணடிக்கலாமா?

ஒரு சில ஆண்கள் பெண்கள் இருக்கின்றனர் இறைவனிடம் நிறைய பக்தி கொண்டிருப்பார்கள். ஆனால் எவ்விதமான தொழிலிலும் ஈடுபடாமல் கஷ்டமான நிலையில் தம் குடும்பத்தோடு சிரமப்படுவார்கள். ஏன் உங்களுக்கு இப்படியான நிலை என்று கேட்டால் ஆண்டவனிடம் கும்பிட்டும் பலன் இல்லை என்பார்கள். நாம் இறைவனிடம் எதனை வேண்டுகின்றோமோ அதற்காக நாமும் அயராது உழைக்க வேண்டும். பக்தி இருக்கத்தான் வேண்டும். அது முயற்சியோடு சேர்ந்து நடைபெறவேண்டும். சும்மா இருந்து ஆண்டவனைத் தியானித்தால் கூரையைப் பிரித்துக்கொண்டு தருவாரா.

மனிதனாகப் பிறந்தவர்கள் யாவரும் இதுதான் தம்முடைய விதியென எண்ணி வீட்டுக்குள் இருந்தால் இறைவன் எமக்கு எப்படி அருள் பாலிப்பார். விதியை விரட்டி விட்டு உழைக்க வேண்டும். அப்போது அந்த விதியையும் எம்மால் மாற்றி எழுதமுடியும். எல்லாம் விதி விதி என அலுத்துக்கொண்டால் எம் வாழ்வில் விதியின் சதிகள்தான் தொடரும். விதி செய்யும் சதிகள் யாவும் சாதனைகள் ஆவது எம் கைகளில்தான் உள்ளது.

ஒரு நாளும் எம்மிடம் ஒன்றும் இல்லை வெறுங்கையோடு உள்ளோம் என்று தாழ்வு மனப்பான்மையோடு வாழ்தல் கூடாது. இறைவன் தந்த கரங்களில் உள்ள விரல்கள் பத்தும் பெரியதொரு மூலதனமே எமக்கு. அதனை வைத்து எம்மால் எத்தனையோ கோடிகளை சம்பாதிக்க முடியும். சும்மா வெறுமனே விதியெனவும் இறைவன் தரவில்லை எனவும் அலட்டாதீர்கள்.

எத்தனையோ இயலாதோர் வாழும் இப் பூமியில் நாம் கூன், குருடு, செவிடு நீங்கி இப் பூமியில் பிறந்திருக்கிறோம். என்னதான் நாம் சிறப்பாக வாழவேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் எம்முடைய மன இருளை நீக்கினால்தான் நாம் வெளிச்சமான வாழ்வுக்கு வரமுடியும்.

மனம் நிறைய வஞ்சகம், பொறாமை என்பவை குடிகொள்ளும் போது எம்முடைய முகம் வெளிப்படையாது. அத்தோடு விதியும் சேரும்போது சொல்லவே தேவையில்லை. எம் வாழ்வு எண்ணெய்யற்ற தீபம் போலாகி விடும். மனித சமூகம் தம்மால் முடியாத ஒன்றிற்கு விதியென்ற பெயரை வைத்து தம் இனத்தையே இருளுக்குள் இட்டுச் செல்கின்றது. விதியிலிருந்து விழித்தெழுந்தால் நாம் எல்லோரும் சேர்ந்து அதனை நன்மையான முறையில் மாற்றி எழுதலாம்.

எந்தவொரு மனிதனாலும் முடியாதது ஒன்றும் இல்லை. முயற்சிகள் தவறலாம். ஆனால் முயற்சிக்க நாம் தவறக் கூடாது என்பது போல் ஏன்நாம் சோம்பலாய் இருந்து கொண்டு விதி என அலட்ட வேண்டும். மனித இனத்தின் சிறப்பான குணமென பகுத்தறிவு விளங்குகின்றது. உயிரினங்கள் யாவற்றிற்கும் இல்லாத ஒரு அறிவு எமக்கு இறைவன் தந்துள்ளான். அதன் பொருளை நன்கு உணரவேண்டும்.

பகுத்துஅறிதல் அதாவது பகுத்தறிவு நாம் பகுத்து அறிந்து விதியை மாற்றி செயல்பட வேண்டும். நாம் நல்ல முறையில் அவற்றை பயன்படுத்தத் தெரியாமல் விழலுக்கு இறைத்த நீர்போல் எம் வாழுங்காலத்தை வீணடிக்கலாமா?

எனியாவது எம் வாழ்வில் விதியென்ற மாய இருளை அகற்ற மூளை என்ற எண்ணை ஊற்றி முயற்சி என்ற விளக்கெடுத்து மனமென்ற திரியை அதில்வைத்து முழுமையான விளக்கையேற்றி விதியென்ற மாய இருளை விரட்டியடித்து முழுமையான தூய்மையான வெளிச்சத்தில் வாழ்வோம்.

**சு.சிவாஜினி**

# சிறார்களை மிருதுவாய் அணுகுங்கள்

இன்று எம் அனைவரின் கண்முன்னாலும் விரிந்து கிடக்கும் கடமைகளில் ஒன்று எமது சிறுவர்களை பேணி வளர்த்தலாகும். இச் சிறுவர்களின் கைகளிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. ஒரு நாட்டிற்கு இன்றியமையாதது கல்வி, வீரம், சிறந்த பண்புகளாகும். இதனை புகட்ட வேண்டியவர்கள் தெரிந்து சில தவறுகளையும், பிழைகளையும் செய்கின்றனர். கொச்சைப் பேச்சுக்களை பேசுகின்றோம். பயமுறுத்துகின்றோம், அடிக்கின்றோம். இதனால் குழந்தைகளின் எதிர்காலம் பாதிப்படைகின்றது. கல்வியை புகட்ட வேண்டியவர்கள் கொச்சை பேச்சைப் பேசுகின்றோம், வீரத்தைப் புகட்டவேண்டியவர்கள் பயமுறுத்தும் கதைகளைச் சொல்லியும், அடித்தும் துன்புறுத்துகின்றோம். இதனால் நாகரிகமற்ற முறையில் பேசுவது மட்டுமன்றி தமிழ்.மொழியை மழுங்கடிக்கச் செய்வதோடு, அச்சமும், மன அழுத்தங்களும் தலை தூக்கு கின்றன. இது சிறுவர்களின் கல்வியை பெரிதும் பாதிக்கின்றன. இந் நிலை மாற வேண்டும். பெற்றோர், உறவினர் பேதமின்றி அனைவரும் அக்கறைகாட்டுவதே இன்றைய தேவையாகும். சிறுவர்களை அடித்து துன்புறுத்துவதை விட ஒரு முறைக்குப் பல முறை அன்பாகச் சொல்லி தவறு செய்வதை தடுப்பதே மேலானது. இதனால் சிறுவர்களின் மனதில் மகிழ்ச்சி குன்றாமல் விடுவதோடு, வன்முறை சிந்தனைகளும் அகற்றப் படும். என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. எனவே! இவர்களுக்கு கல்வியையும், சுவாரஷ்யமான குட்டிக் கதைகளையும் நற்சிந்தனைகளையும் போதிப்பதோடு, விளையாட்டுக்களிலும் ஊக்கப்படுத்த வேண்டும், இதன் மூலமே எதிர்காலத்தில் சிறந்த கல்விமான்களாகவும், வீரர்களாகவும், பண்பாளர்களாகவும் ஆக்குவதோடு எமது நாட்டையும் கட்டியெழுப்ப முடியும்.


**ச.வாமதீஸ்**

# பழக்கலவைப் பானம்




**தேவையான பொருட்கள்:**

- தோடம் பழச்சாறு - 1 மேசைக்கரண்டி
- பசன் பழச்சாறு - 1 மேசைக்கரண்டி
- எலுமிச்சம்பழச்சாறு - 2 தேக்கரண்டி
- அன்னாசிப்பழத்துருவல்- 1 மேசைக்கரண்டி
- சீனி -1 மேசைக்கரண்டி
- தண்ணீர் - 2 டம்ளர்
- றோஸ் எசென்ஸ் - 1 தேக்கரண்டி
- உப்புநீர் -1 தேக்கரண்டி



**செய்முறை:-**

கொதித்தாறிய நீரில் சீனியைச் சேர்த்துக் கரைத்து வடித்துக் கொள்ளவும்.

அந்நீருடன் தோடம்பழம், பசன் பழம், எலுமிச்சம் பழச்சாறுகளையும் ,உப்பு, றோஸ் எசென்ஸ், அன்னாசிப் பழத்துருவல் யாவற்றையும் சேர்க்கவும்

குளிரூட்டியில் வைத்து அல்லது ஐஸ் கட்டிகளைச் சேர்த்துப் பரிமாறிக்கொள்க.

அன்னாசிப்பழத்துருவலுக்குப் பதிலாக அப்பிள் துருவலையும் சேர்த்துக்கொள்ளலாம்.

# வீட்டு வைத்தியக் குறிப்புகள்...

நரம்புத் தளர்ச்சியைச் சரி செய்ய தினசரி வெந்நீரில் சிறிது தேன் கலந்து பருக வேண்டும்.

* * *

வறட்டு இருமல், தொண்டைப் புண் ஆகியவை இருந்தால் வெந்நீரில் தேன் கலந்து பருகவும். உடனே பலனளிக்கும்.

* * *

தினமும் உணவில் பூண்டு சேர்த்து வந்தால் உடம்பிலுள்ள கொலொஸ்ட்ரோல் குறையும்.

* * *

நார்ச்சத்து அதிகமுள்ள உணவு உண்டால் சர்க்கரை கொலொஸ்ட்ரோல் குறையும். எடை கட்டுப்படும் மலச்சிக்கல் சரியாகும். இரத்த அழுத்தம் குறையும்.

* * *

தேங்காய் எண்ணெய்யையும், எலுமிச்சை சாற்றையும் கலந்து தேய்த்தால் மூட்டு வீக்கம், வலி சரியாகும்.

* * *

தினமும் ஒரு சிறு கொத்து திராட்சைப்பழம் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் அறவே நீங்கிவிடும். சளித்தொல்லையும் சரியாகிவிடும்.

* * *

குமரகுரு பரிசுத் திட்டத்தின் 31 தொடக்கம் 35 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.

**பரிசுத்திட்டம் -31**
த.கமலாவதி,
மு/கொல்லவிளாங்குளம்,
அ.த.க.பாடசாலை,
வவுனிக்குளம்.

**பரிசுத்திட்டம் -32**
தி.தாமரைச்செல்வி,
119, கண்டி றோட்,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

**பரிசுத்திட்டம் -33**
ஆறுமுகம் தர்சினி,
வேம்படி,
வல்வெட்டித்துறை.

**பரிசுத்திட்டம் -34**
சு.நிர்மலா,
இல.55, D.8,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

**பரிசுத்திட்டம் -35**
லீலா இராமச்சந்திரன்,
நெத்தலியாறு,
பாண்டியன் ஒழுங்கை,
தருமபுரம்.

பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியுது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்-36**

பெயர்:..........................................

முகவரி:..........................................

..........................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

1985 மே 15 நெடுந்தீவு மாவலித்துறைமுகத்தில் இருந்து 64 பயணிகளுடன் காலை 7.00 மணிக்கு புறப்பட்ட பொதுவேலைகள் திணைக்களமாக இருந்து, இப்போதைய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் குமுதினிப்படகு அரைமணி நேரத்தின் பின் கடலில் சிறிலங்காக் கடற்படையினரால் வழிமறிக் கப்பட்டது.

இயந்திரத்தின் ஓட்டுநர் அறை அதாவது கபினின் முன் பின் பகுதிகள் என பிரிக்கப்பட்டுள்ளன.

படகில் கடற்படையினர் குமுதினியை நிறுத்தச் சொல்லி நிறுத்தினார். ஆறு கடற்படையினர் முக்கோண கூர்க்கத்தியும் கண்டங்கோடலிகள் இரும்புக்கம்பிகள் சகிதம் குமுதினியில் ஏறினர் பின்னிருந்த பயணிகளை கபினின் முன்பக்கம் செல்லுமாறு மிரட்டினர். அவர்கள் அனைவரும் சென்றுவிட்டனர். பின்புறம் இருபுற இருக்கைகளுக்கு நடுவே பலகைகளினால் இயந்திரத்தில் இருந்து பின்புறம் புறொப்பிலருக்கு செல்லும் ஆடு தண்டுப்பகுதி மூடப்பட்டிருப்பது.

இப்பலகைகளை கடற்படையினர் அகற்றினர். இருக்கை மட்டத்தில் இருந்து சுமார் 4 அடி ஆழமானதாக அது இருந்தது. இதன்பின் முதலில் படகுப்பணியாளர்கள் ஒவ்வொருவராக உள்ளே அழைக்கப்பட்டனர். குமுதினியின் இருபக்க வாசல்களிலும் உள்ளும் வெளியும் கடற்படையினர் இருந்தனர். ஒவ்வொருவராக



## ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

கடற்படையினர் அழைத்து கத்தியால் குத்தியும் கண்டங்கோடலியால் வெட்டியும் இரும்புக்கம்பியால் தாக்கியும் கொன்று அந்த நடுப்பள்ளத்தில் போட்டனர். இப்படி கொல்லப்படுபவர்கள் எழுப்பும் அவல ஒலி முன்புறம் இருப்பவர்களுக்கு கேட்கக்கூடாது என்பதற்காக அவர்களை பெயரையும் ஊரையும் உரக்கச் சொல்லுமாறு பணிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் உரத்துச் சொல்ல அதில் பின்புறம் கொல்லப்படுபவர்களின் அவல ஒலி மறைந்தது. பின்புறம் செல்பவர்களுக்கு என்ன நடக்கிறது என்பது முன்புறம் இருப்பவர்களுக்கு தெரியவே தெரியாது. பின்புறம் செல்பவர்கள் உள்ளே சென்று கிடங்காக உள்ள பகுதியில் குத்திக்கிடப்பவர்களை காணும்வரை அவர்களுக்கு முன் சென்றவர்களுக்கு என்ன நடந்ததெனத் தெரியாது. அவலக்குரல் எழுப்பமுடியாது செத்தவர்போல் இருந்தவர்களும் உண்டு. தாக்க குரல் எழுப்பியவர்கள் அதிகளவில் தாக்கப்பட்டு இறந்தது என கடற்படையினரால் கருதப்பட்டு போடப்பட்டனர். உள்ளே பள்ளமாக இருந்த பகுதியில் உடல்கள் போடப்பட்டதால் முன்புறம் இருந்து செல்லுபவர்களுக்கு முதல் சென்றவர்களும் கொல்லப் பட்டது தெரியாது. ஒருவர் நுழைவாயிலிலேயே கொலையுண்டோரைக் கண்டு கடலில் குதித்தார். வேட்டி அணிந்திருந்த படியால் அவர் கடலில் மிதக்கத் தொடங்கினார். துப்பாக்கியால் சுடப்பட்டு அவர் கொல்லப்பட்டார். இப்படியாக 7 மாத குழந்தை முதல் வயோதிபர்வரை ஈவிரக்கம் இன்றி கொலைசெய்யப்பட்டனர். அதில் செத்தவர்போல் கிடந்து ஒரேயொரு படகுப்பணியாள் மட்டுமே உயிர் தப்பினார்.

நடுக்கடலில் இப்படியாக சகலரும் கொல்லப்பட்டும் காயப்பட்டும் போக அனைவரையும் கொன்றுவிட்டதாக கடற்படையினர் கருதிக்கொண்டு திருப்திப்பட்டனர். அந்த திருப்தியால் மகிழ்வடைந்த கடற்படையினர் தமது படகில் நயினாதீவு தளத்திற்குச் சென்று நல்ல பிள்ளைகளாக இருந்துவிட்டனர்.

குமுதினி இயந்திரம் நிறுத்தப்பட்டதால் அது நடுக்கடலில் தத்தளித்தது. குமுதினியில் சென்றோர் அனைவரும் இறந்தும் குற்றுயிரும் குலையுயிருமாக பின்புற புறப்பிலரை சுழற்றும் ஆடு தண்டு கிடங்குக்குள் கிடக்கின்றனர். படகின் ஓட்டிகள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனர். சம்பவவேளையில் 7 படகுப் பணியாளர்களில் 6 பேர் மட்டும் இருந்துள்ளனர். அவர்களுடன் இருவர் ஓட்டிகளான ஹொாக்ஸன்கள். அவர்கள் இருவரும் கொல்லப்பட்டுவிட்டனர். இவர்களைவிட படகை ஓட்டக்கூடிய நிலையில் காயமடைந்து ஒருவரும் இல்லை. படகின் இயந்திர இயக்குநர் மட்டும் மண்டையில் கத்திக்குத்துடன் மயங்கிக் கிடந்தார். 30 நிமிடங்களாக குமுதினி ஆழக்கடலில் தத்தளித்துக் கிடந்தது.

பின்புறக்கிடங்கில் மயங்கிக் கிடந்தவர்களில் தெளிந்த திடகாத்திரமான மயிலிட்டி வாசிகள் தம்மை சுதாரித்து எழுந்த இருவர் மயங்கிக்கிடந்த இயந்திர இயக்குநரை எழுப்ப முயன்றனர். ஆனால் அவர் அரை மயக்கத்திலிருந்து எழவில்லை. இருந்தும் அந்த நிலையில் அவரை இழுத்துக்கொண்டு இயந்திர கபினுக்குள் அவரை அவர்கள் இழுத்துச் செல்கின்றனர்.

துருவன்




# பெருங்கற்கால ஈமத்தாழிகள்

பெருங்கற்கால பண்பாடு எமது மண்ணில் கிறிஸ்துவுக்கு முன் 1000 ஆண்டளவில் தொடங்கிவிட்டது.

பெருங்கற்கால பண்பாடு என்றால் என்ன?

இறந்தோரை அடக்கம் செய்வதற்கு பெருங்கற்களால் ஆன ஈமச்சின்னங்களை அமைத்ததால் அது பெருங்கற்கால பண்பாடு என்ற பெயரைப் பெற்றது. இது இடைக்கற்காலத்துக்குப் பின் ஆரம்பமாகியது. இந்த பெரியகல் சவ அடக்கு முறையில் கல்லறை, கல்மேசை, கல்திட்டை, நடுகல், கல்வட்டம் என்ற பெயர்களில் கற்கள் பயன்படுத்தப்பட்டன. இந்த சவ அடக்கத்தில் இறந்தோரின் எச்சங்களுடன் இரும்பு ஆயுதங்கள், சிவப்பு, கறுப்பு வண்ணங்களில் உருவாக்கப்பட்ட மட்பாண்டங்களும் புதைக்கப்பட்டன. இரும்புக்கருவி பயன்பாடு இக் காலத்தில் ஆரம்பமானதால் இது இரும்புக்காலம் என்றும் அழைக்கப்படுகிறது. விவசாயம்,• கால்நடை வேளாண்மை, நீர்ப்பாசனம், மட்பாண்ட உற்பத்தி இக்காலத்தில் வளமாக்கப்பட்டன. வரலாற்று உதயகாலமாகக் கூறப்படும் இந்தப் பெருங்கற்காலத்துக்கும் நமக்கும் என்ன தொடர்பு.

வன்னியின் ஒரு பகுதியான புத்தளத்தின் பொன்பரப்பி என்ற பொம்பரிப்பில் பெருங்கற்கால ஈமத்தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. 04 அடி உயரமும் 02 அடி அகலமும் கொண்ட மண்ணாலான தாழிகளில் இறந்தோர் இங்கு அடக்கம்செய்யப்பட்டனர். இதனை 'முதுமக்கள் தாழி' என வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். 1956,1970 ஆம் ஆண்டுகளில் பொன்பரப்பியில் இந்த முதுமக்கள் தாழிகள் கணுடுபிடிக்கப்பட்டன. 320 சதுர அடி பரப்பில் 12 தாழிகள் இங்கு கண்டெடுக்கப்பட்டன.

1970 இல் இது பற்றிய ஆய்வில் ஈடுபட்ட அமெரிக்காவின் பென்சில்வேனிய பல்கலைக்கழக தொல்பொருள் காட்சியக புதைபொருள் ஆய்வுக்கருவிகள் தமது அறிக்கையில் குறிப்பிட்ட விடயத்தை இங்கு நினைவூட்டவேண்டும். இப்போது நாம் அறிந்துள்ள இலங்கை வரலாற்றை மாற்றியமைக்கக்கூடிய மேலும் சூடான தகவல்களை இவ்வாய்வு மேலும் பூர்த்தி செய்த பின் அறியக்கூடியதாக இருக்கும். இரும்பு பயின்ற யுகத்தினரால் இப் புதைகள் உண்டாகின என்பது அந்தக் குறிப்பு.

இதேபோல் தமிழகம் ஆதிச்ச நல்லூரில் திராவிடரின் தொன்மையான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவையும் பெருங்கற்கால பண்பாட்டுடையதே. தமிழகம் திருநெல்வேலியிலுள்ள ஆதிச்ச நல்லூர் முதுமக்கள் தாழி மனித எலும்புக்கூடுகளை வரலாற்றறிஞர்கள் அவை மனித தோற்றத்தின் தொடக்க காலத்தை சேர்ந்தவையாக இருக்கக்கூடும் என்றனர்.

புத்தளத்தின் பொன்பரப்பி தவிர யாழ்ப்பாணத்தில் கந்தரோடை, ஆனைக்கோட்டை, காரைநகரின் சத்திராந்தை, மன்னாரின் மாந்தை, வவுனியாவின் மாமடு பகுதிகளிலும் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள். பூநகரி, அக்கராயன், அநுராதபுரம், யாழ்தீவகம், வேலணையின் சாட்டி, கும்புறுபிட்டி திருகோணமலையில் குச்சவெளி, மட்டக்களப்பில் கதிரவெளி பகுதிகளில் பெருங்கற்கால மட்பாண்டங்கள் மற்றும் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவை திராவிடருடையவை. பெருங்கற்காலத் திராவிடர் வாழ்வின் சான்றுகள் அவை.

தமிழ் மக்களின் தொன்மை வரலாற்றுச் சிறப்பின் ஒரு அம்சமான பெருங்கற்கால பண்பாடு நிலவுகின்றது. இன்றைக்கு 3000ஆண்டுகள் முற்பட்டதாக இப்பண்பாடு தமிழகத்திலும், இலங்கையிலும் நிலவியது. கிராமங்களை அமைத்து சிறப்புடன் இப் பண்பாட்டுக்காலத்தில் தமிழ்மக்கள் வாழ்ந்துள்ளனர். பெருங்கற்கால பண்பாடு ஆங்கிலத்தில் மெகாலிதிக் கல்ச்சர் என அழைக்கப்படுகின்றது. இறந்தோர்களின் உடல்களை தாழிகளில் இட்டு புதைத்து ஈமச்சின்னங்களை அமைக்க பெரிய கற்களை பயன்படுத்தியதால் இது பெருங்கற்கால பண்பாடு எனப்படுகின்றது. பெருங்கற்பண்பாட்டின் சிறப்பம்சம் அவர்கள் அமைத்த ஈமச்சின்னங்களாகும். பெரியளவில் மண்ணினால் பானைகள் அல்லது தாழிகளைச் செய்து அவற்றில் இறந்தோர் உடல்களை வைத்து, நிவேதனங்களை வைத்து புதைப்பது சிறப்பான விடயமாகும். 3000ஆண்டுகளுக்கு முற்பட்டதான இந்த ஈமச்சின்னங்கள் மூலம் தமிழரின் தொல்வாழ்வு சிறப்பு அறியப்படுகின்றது. தமிழ் நாட்டில் ஆதிச்ச நல்லூர் என்ற இடத்தில், இத்தகைய தாழிகள் கொண்ட ஈமக்காடு முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. இதன்மூலம் தமிழரின் வரலாற்றின் சான்றுகள் வெளிக்கொணரப்பட்டன. கி.பி, 1000ஆண்டுகள் முதல், கி.பி 500ஆண்டுகள் வரையில் நீழ்ந்தது. புத்தகத்தின் பொன்பரப்பி என்ற இடத்தில் 1950ஆம் ஆண்டிலும், 1970ஆம் ஆண்டிலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோது மேற்பரப்பிலிருந்து ஒரு சம ஆழத்தில் 12 ஈமத்தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுடன் கற்சான்றுகளும் கண்டெடுக்கப்பட்டன.

இதேபோல் 1950இல் மன்னார் மாந்தையில் திராவிட முதுமனிதனின் எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது. 1980இல் ஆனைக்கோட்டையில் இத்தகைய பெருங்கற்கள் பண்பாட்டுக்கால ஆக்கமான 2 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

காரைநகர் சத்திராந்தையில் 1981 இல் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

1984இல் வன்னி கிளிநொச்சி குஞ்சுப்பரந்தனில் 8அடி சுற்றளவு- 4.1/2 அடி உயர, 1அங்குல தடிப்புடைய முதுமக்கள் தாழி கண்டுபிடிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் கதிரவெளி, உகந்தைமலை, விரியாழ, இன்று சிங்கள தேசமாகவுள்ள சிறிலங்காவில் பண்டத்தாரா, தப்போது மருதம்மடுவ, மிகுந்தலை, தூபராமா அருகுப் பகுதி, பழயகம்பளை, கிருங்கின்ன, தல்கஸ்வேவ, கஸ்சோகன் கனத்தகோண்வேவ, கபரணை, மலிகம்பிட்டி, ஆகிய இடங்களில் தொல் தமிழர்களின் பெருங்கற் பண்பாட்டு ஈமச்சின்னங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெருங்கற்பண்பாட்டு சின்னங்கள் இலங்கைத்தீவின் பெரும்பாலான பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது தமிழர்கள் இலங்கைத்தீவின் முதுமனிதர்கள் என்பதை நிரூபிக்கும் சான்றுகளாகும். இத்தகைய சான்றுகளில் புதிதாகவும் பல இணைத்துவருகின்றன.

குரலோன்



# பொருண்மிய வாசல்

மீண்டும் மீண்டும் நீர்வளம் தொடர்பாகவே நாம் அக்கறை கொள்ள வேண்டியுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் எங்கள் மக்களை பல விதத்திலும் பாதிப்படையச் செய்த சுனாமியின் காரணத்தால் நீர்வளம் கூட பாதிப்படைந்தது.

பல இடங்களில் குறிப்பாக கரையோரப் பிரதேசங்களில் பல நன்னீர் கிணறுகள் உவர்நீர் கிணறுகளாக மாறியுள்ளதாக அறியப்படுகின்றது. பலதடவைகள்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

அக்கிணறுகளை இறைத்த பின்னரும் கூட அவை உவர் நீராகவே உள்ளனவாம்.

இது எவ்வளவு ஒரு மோசமான ஒரு நிலைமை என்பதை நாங்கள் உணர வேண்டும். ஏற்கனவே எங்கள் பிரதேசங்களில் நன்னீர் அதுவும் சுத்தமான நீருக்கு மிகப்பெரிய தட்டுப்பாடு நிலவுகின்றது. இத்தகைய நிலையில் இருக்கும் கிணறுகளும் இவ்வாறு உவர்நீராக மாறும் ஆபத்து எங்கள் மக்களின் நிலையை மேலும் ஆபத்துக்கு உள்ளாக்கும்.

இதுதவிர மேலும் ஒரு பிரச்சினை இந்தக் கிணறுகள் தொடர்பில் ஏற்பட்டுள்ளது. அதாவது விவசாயக்கிணறுகளுக்கு குளோரின் இடுதல் ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

பொதுவாக கிணறுகளைச் சுத்தப்படுத்த குளோரின் இடுவது எல்லோரினதும் வழக்கம். சுனாமி தாக்கத்தின் பின்னர் இந்தச் செயற்பாடு அதிக கவனம் பெற்றுள்ளது.

இதுவே விவசாயக் கிணறுகளுக்கு ஆபத்தை உண்டாக்கியுள்ளது. விவசாயக் கிணறுகளை தமது குடிநீர்த் தேவைக்காகப் பயன்படுத்துவோர் அதற்கும் குளோரின் இடுகின்றனர். அதன் விளைவு பாரதூரமானதாகும்.

விவசாயக் கிணறுகளுக்கு குளோரின் இடுவதனால் கிணற்றிலுள்ள எல்லாக்கிருமிகளும் எல்லா உயிரினங்களும் அழிந்துவிடும். அந்த நீரை விவசாயப் பயிர்களுக்கு நீர்பாய்ச்சுவதன் மூலம் அந்தப்பயிர்களும் பாதிப்படையும் அவலம் ஏற்படுகின்றது. பயிர்களில் உள்ள நல்ல நுண்கிருமிகள் முற்றாக அழிந்துவிடும்.

எனவே விவசாயக் கிணறுகளை குடிநீர்த்தேவைக்குப் பயன்படுத்துவோர் அந்த நீரை கொதிக்கவைத்து ஆறிய பின்னரே பயன்படுத்துவது பொருத்தமானது.

அதைவிடுத்து விவசாயக்கிணறுகளுக்கு குளோரினை இட்டு பயிர்களை நாசமாக்க முனைய வேண்டாம்.

# கால்நடைக் கழிவுகளும் சேதனைப் பசளைகளும்!

விவசாயச்செய்கையில் வளர்ச்சியடைந்த நாடுகளில் விவசாயிகள்கால் நடைகள், கோழிகள் போன்றவற்றை வளர்க்கிறார்கள். அவற்றின் கழிவுகளை அகற்றுவது இவர்களுக்குப் பிரச்சினையாக இருப்பதில்லை. இக்கழிவுகளை உரிய முறைப்படி பயன்படுத்துவதால் பெறுமதிமிக்க சேதனைப் பசளையாக மாற்றுகிறார்கள். ஆனால், எமது நாட்டில் கிடைக்கின்ற கால்நடைக் கழிவுகளை பயன்படுத்துவது அரிதாகவே உள்ளது.

சிறிய இடத்திலே செறிவான உணவுகளை வழங்கி ஆடு, மாடுகளை வளர்க்கின்றனர். இதனால் பெருமளவு கால்நடைக் கழிவுகள் உற்பத்தியாகின்றன. கால்நடைக் கழிவுகளை பலவகையான காற்றின்றிய நொதித்தல் செயல்முறை தொழில் நுட்பங்களை பெருமளவு பயன்படுத்தி வெற்றியடைந்துள்ளார்கள்.

இதில் உயிர் வாயுவை உற்பத்தி செய்து எரிபொருள் சக்தியாகவும் கழிவைச் சேதனைப் பசளையாகவும் பயன்படுத்தலாம். இவற்றை விட கால்நடைக் கழிவுகளைத் திரும்பவும் கோழிகளுக்கான உணவாகவும் பயன்படுத்துகின்றனர்.

பயிர்களுக்கு சேதனைப் பசளை உபயோகிப்பதற்கான காரணங்களில் ஒன்று பயிராக்கவியலாக இருப்பினும் பெருமளவு விளைச்சலைப் பெறுவதற்கும் உற்பத்தித் திறன் கூடிய மண்ணையும் பெறுவதற்குமாகும். மற்றொன்று பொருளாதார முக்கியத்துவமுடையது. செயற்கைப் பசளைகளை அதிக விலை கொடுத்து வாங்குவதை விட இது செலவும் குறைவு. எது எவ்வாறிருப்பினும் சேதனைப் பசளை இடுவதைப் பெரும்பாலும் விவசாயிகள் விரும்புவதில்லை. ஒரு சிலர் மட்டும் சேதனைப் பசளையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது சேதனைப் பசளைகளை மேட்டு நிலப்பயிர்ச் செய்கையில் ஓரளவு உபயோகித்துக் கொண்டு வருகின்றனர். குறைந்த அளவு நிலப்பரப்பில் மரக்கறி உற்பத்தி செய்யும் போது சேதனப்பசளை சிலர் இடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. விவசாயத்திணைக்களமும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து சேதனைப் பசளை பாவித்து மேட்டு நிலப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு "வதிவிட வேளாண் சேவைப் போட்டி" யில் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. ஆகவே சேதனப் பசளைப் பிரயோகம் ஒவ்வொரு விவசாயிகளும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அடுத்ததாக கோழி எருவை பூரணமாக ஒரு சேதனப் பசளையாகக் கருதலாம். கோழி எருவில் பயிர்களுக்குத் தேவையான முக்கிய மூலகங்கள் இதில் அடங்கியுள்ளன. நைதரசன், பொட்டாசியம், பொசுபரசு ஆகியன அதிகளவிலும் கல்சியம், மக்னீசியம், கந்தகம், இரும்பு, செம்பு, நாகம் ஆகிய மூலகங்கள் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகின்றன. ஏனைய சேதனப் பசளைகளை விட கோழி எரு விரைவாகப் பிரிகை அடையும்.

கோழி எருவை உருளைக் கிழங்கு, மரக்கறிப்பயிர்களை நடுகை செய்வதற்கு முன்பதாக மண்ணில் இட்டு நன்கு கலந்துவிடவேண்டும். இதனால் போசனைச் சத்துக்கள் வீணாவதைத் தடுக்கலாம். கோழி எருவைக் கலந்த பின் 3-4 நாட்களுக்குத் தினந்தோறும் நீர்பாய்ச்ச வேண்டும். இதனால் பயிர்கள் கருகி விடமாட்டாது. அடிக்கட்டுப் பசளையாக கோழி எரு பயன்படுத்துவது உகந்ததல்ல. ஏனெனில் கோழி எரு நீருடன் சேரும் போது அமோனிய வாயு வெளியேறி பயிர்களை எரித்து விடும். கோழி எருவை தோட்டத்திற்குப் போட்டு நீர் இறைத்து 2-3 நாட்களின் பின்பே பயிர்களை நாட்டுதல் வேண்டும்.

ஆடு, மாடு போன்ற கால்நடைக் கழிவுகளையும் தொழுவத்தில் இருந்து நீக்கப்படும் புல், வைக்கோல் போன்றனவும் காணப்படும் இவற்றை உடனடியாகத் தோட்டத்திற்கு இடக்கூடாது. ஏனெனில் இதில் உக்கலடையச் செய்யும் நுண்ணுயிர்கள் தமது தேவைக்கு நைதரசனைப் பயன்படுத்துகின்றன. இதனால் நைதரசன் குறைபாடு இக்கழிவுகளில் ஏற்படும். இவற்றின் கழிவுகளை உக்கலடைந்த பின்பே பயிர்களுக்கு இட வேண்டும்.

விவசாயிகளாகிய நாம் வளமான சேதனப்பசளைகளைப் பயன்படுத்தி ஆரோக்கியமான வாழ்வுக்கு அத்திவாரம் இடுவோம்.

த.சிவலிங்கம்

# ஆஷஸ் கிண்ணம் யாருக்கு?



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தொடர்ந்தும் உலக சம்பியன் என்ற பட்டத்தை தக்கவைத்து வருகிறது. தரவரிசையில் முதலாம் இடத்தில் உள்ள அவ்வணியை 2ஆம் தரத்திலுள்ள நியூசிலாந்து அணியாலும் அண்மைய தொடரிலும் வீழ்த்தமுடியாது போயிருக்கிறது. நியூசிலாந்துடனான "ட்வண்டி 20" போட்டியிலும் அதனையடுத்து நடைபெற்ற ஒரு நாள் போட்டியிலும் 23 ஓட்டங்களைக் கடந்து வெற்றி பெறும் நியூசிலாந்தின் வாய்ப்புக்கூட தவிடுபொடியாகியது. அதனை ஆஸி அணியின் வீரர் மத்தியு



ஹெய்டன் தடுத்து விட்டார். இவ்வாறான ஒரு அணியுடனேயே தற்போது முன்னேறி வரும் இங்கிலாந்து அணி வரும் ஜூலை மாதம் ஆஷஸ் தொடரில் மோதவுள்ளது.

ஆஷஸ் தொடர் வருடம் தோறும் நடைபெறும் ஒரு தொடராகும். இத் தொடரைப் பொறுத்தவரை இரு அணியும் ஒன்றுக்கொன்று பரம எதிரிகளாகும். இங்கிலாந்தைப் பொறுத்தவரை 1987ஆம் ஆண்டில் மைக்கெட் டிங் தலைமையிலான அணி தொடரைக் கைப்பற்றியதன் பின் னர் இதுவரை தொடரைக் கைப்பற்ற முடியவில்லை.

ஆயினும் தற்போது முன்னேறி வரும் மைக்கெல்வோனின் தலைமையிலான இங்கிலாந்து அணி மிக உட்சாகத்துடன் காணப்படுகிறது. கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் வோன் தலைமையிலான அணி 7தொடர் வெற்றிகளை பெற்றதுடன் இவ் வருடம் ஆரம்பத்திலும் வெற்றி தொடர்ந்தது.

கடந்த வருடம் நியூசிலாந்து அணியையும் மேற்கிந்தியத் தீவுகள் அணியையும் தென்னாபிரிக்கா அணியையும் வெற்றி கண்டதும் எனினும் அது அண்மையில் நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் தொடரை பிளின்டொப் இன்மையால்பறி கொடுத்திருக்கலாம்.

இங்கிலாந்து அணிக்கு வருகை தந்திருக்கும் அன்ருஸ்ரோஸ் கெவின் பீற்றர்சன் ஆகியோரின் துடுப்பாட்டமும். சகலதுறை வீரரான பிளின்டொப் மற்றும் ஹார்மிசன் போன்றோரின் பங்களிப்பும் அணிக்கு நிறைய நம்பிக்கையைத் தருவதாக உள்ளது.



எனினும் மக்ராத், கஸ்பரோவிஜ் கிளஸ்பி ஆகியோரின் பந்து வீச்சை மேற்படி துடுப்பாட்ட வீரர்கள் சமாளிப்பதும் அவுஸ்திரேலியாவின் பொன்டிங், கில்கிறிஸ்ட், ஹெய்டன் கிளார் போன்ற நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களை ஹார்மிசன், பிளின்டொப், ஹோகாட் போன்ற இங்கிலாந்தின் பந்து வீச்சாளர்கள் திணறவைப்பார்களா என்பதைப்பொறுத்தும் ஆரம்பமாகவிருக்கும் ஆஷஸ் தொடா அனல் பறிக்கும் போட்டியாக அமையலாம். இதுவரை பறிகொடுக்காத ஆஷஸ் கிண்ணம் பறிபோகக் கூடாது என்பதில்



அவுஸ் அணியும் இந்த வருடத்திலாவது கிண்ணத்தைக் கைப்பற்றி 18 வருடகால கனவை நனவாக்குவதில் இங்கிலாந்து அணியும் கங்கணம் கட்டி நிற்பதால் இந்த வருடத்தில் இது போன்ற ஒரு போட்டி இல்லை என்பதாக அமையப் போகிறது.

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை ஒளியிலே

பற்ற கலாசிருஷ்டியாய்க் கிடந்த உலகம் மின்னலின் கண்ணை உறுத்தியது; "ஆ! என்ன அழகு; என்ன கோலக்காட்சி" என்று வியந்தது. முன்னே, இருளைப் பிளந்து தான் தோற்றுவித்த அந்தக் காட்சியையும், இப்போது உயிரோவியமாய்க் கிடக்கும் உலகக்காட்சியையும் தன்னுள் தானே ஒப்பிட்டுப் பார்த்து வியந்தது; என்றாலும், உண்மையை உள்ளத்தில் நுழையவிடாமல் தன்மானம் தடுத்தது. அதனாலே, மின்னலும் மின்னிக் கொண்டே இருந்தது.


ஆதவன் முழுச் சோபையுடன் பொலிந்தான் அந்தப் பொலிவிலே பிறந்த ஒளிக்கு முன் நிற்கமுடியவில்லை அந்த மின்னலால். மின்னல் தலை வணங்கியது. அப்போதுதான் மின்னலின் அகங்காரம் அழிந்தது; செருக்கு ஒழிந்தது; 'நான' மறைந்து தெளிவு பிறந்தது; மின்னல் துவண்டு போய் சூரிய தேவனின் காலடியில் விழுந்தது. பக்தனின் மனோநிலையில் அழுது புலம்பியது. "சூரிய தேவே! போற்றி போற்றி. நீ மெய்யறிவு; தெளிவின் நிலைக்களன். நான் புல்லறிவு; அகங்காரச் சின்னம் ஒளிக்கீற்றான இருள். உன் சக்தி அளப்பரியது; அது இருளைக் கெடுக்கும். நீ என் மன இருளையும் கெடுத்துத் தெளிவூட்டினாய். நீ வாழ்க! வாழ்க" என்றது.

சூரிய ஒளி, மின்னொளியைத் தன்னொளியாக்கிக் கொண்டது; மின்னல் மறைந்தது. சூரியன் மெய்ஞ்ஞானியின் அடக்கத்தோடு, சாந்தம் பொலிய மேலே மேலே வந்து கொண்டிருந்தான்.

# இன்றைய இளைஞர்களிடம் கலைநயத்தை காணமுடியவில்லை

## கலாபூசணம் சின்னத்தம்பி செல்லையா

### இரா-வின்



இசை நாடகத் துறையில் கடந்த அரை நூற்றாண்டிற்கு மேலாக நடிகராக, ஆர்மோனியக் கலைஞராக இயங்கி வரும் கலாபூசணம் சின்னத்தம்பி-செல்லையாவுடனான நேர்காணலில் அவர் பகிர்ந்துகொண்ட கருத்துக்களைத் தொகுத்துத் தருகிறோம். பளை, வண்ணாங்கேணி வாழ்விடமாக இருந்தபோதிலும் யாழ் நகர், அதனை அண்மித்த கலைஞர்களுடன் நெருங்கிய உறவைப் பேணிவருபவர். சின்னத்தம்பி அண்ணாவியாரின் புதல்வரான இவர் நடிகமணி வி.வி.வைர முத்துமுதல் தற்கால இசைநாடக கலைஞர்கள் வரை அனைவருடனும் அரங்க ஆற்றுகையில் பங்குகொண்ட பெருமைக்குரியவர்.

கடந்த மாதம் கலாபூசணம் விருதுபெற்ற இசைமணி, மரபுக்கலைச்சுடர், செல்லையா பகிர்ந்துகொண்டவை; எனது 10 வயதில் வள்ளி திருமணம் நாடகத்தில் "நாரதராக" பாத்திர மேற்று இசை நாடகத்துறையில் பயணத்தை ஆரம்பித்தேன். தொடர்ந்து பல பாத்திரங்கள் ஏற்று நடித்தபோதிலும் நாரதர் வடிவத்தில் அரங்கில் வலம் வந்ததே அதிகம். முறைப்படி கர்நாடக சங்கீதத்தை கற்றமையும் எனது தந்தையார் ஒரு பாரம்பரிய கலைஞர் என்பதாலும் இத்துறையில் தொடர்ந்தியங்க ஆரம்பித்தேன்.

இசைநாடகத்தில் ஆர்மோனியத்தின் பங்கு அளப்பரியது. எனவே இதில் நான் கொண்ட அதீத விருப்பம் காரணமாக ஆர்மோனியம் வாசிப்பதைக் கற்று இன்றுவரை ஆர்மோனியக் கலைஞராகவுள்ளேன். பல மேடைகளில் பழம்பெரும் [illegible]த்த, மறைந்த கலைஞர்க[illegible] நாடகங்களிற்கு ஆர்மோனியம் வாசித்துள்ளேன். இருந்தபோதிலும் இசைநாடகத்திற்கென ஆர்மோனியம் வாசிப்பதற்கு ஆர்மோனியக் கலைஞர் கோண்கவாஸ் தனிச் சிறப்புப் பெற்றவர், மிக அபூர்வமான கலைஞர் என்பதை இந்த இடத்தில் கூற விரும்புகிறேன்.

பாரம்பரிய கலைவடிவங்களின் போக்கு கால மாற்றத்தினால் சிதைவடைந்து வருகின்றது. இதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தபோதிலும் தென் இந்தியத் திரைப்படங்களின் ஆக்கிரமிப்பு அளப்பரியது. இசைநாடகத்துறையில் அனுபவமிக்க சிறந்த கலைஞர்கள் ஒருசிலர் உள்ளனர். இவர்களுடன் கலைத் துறைசார் நிறுவனங்களிலே எமது கலையைக் காக்க முன்வரவேண்டும்.

இன்றைய இளைஞர்களிடையே கலைநயத்தை காண முடிவதில்லை. அதிகரித்த பொழுது போக்கும், இலத்திரனியல் ஊடகங்களின் பாவனையுமே காரணமாகும்.

இளைஞர்களை கிராமரீதியாக சந்தித்து இசைநாடகம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில் கருத்தமர்வுகள், பயிற்சிகளை வழங்குவதுடன் அவர்களைக் கொண்டே ஆற்றுகைகளையும் மேற்கொள்ள வேண்டும். முன்பு ஒரு கிராமத்திலேயே பல நாடகங்கள் போடுவம் ஒரு மாதத்திற்குள், ஆனால் இப்பொழுது இவற்றை காணமுடிவதில்லை. அத்தி பூத்தது போல் எப்பவும் இருந்திட்டு ஒரு நாடகம் அதுவும் ஒரு மணித்தியாலயம். இந்நிலை மாற்றியமைக்கப்படவேண்டும். இதற்கு துறைசார்ந்தவர்கள் முன்வரவேண்டும். தொடர்ச்சியான ஆற்றுகைகளை நடாத்தாவிடினும் மூன்று மாதத்திற்கு ஒரு தடவையாவது நாடகத்தைப் போடவேண்டும். இதற்கு கலைக்கழகங்கள், அமைப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருமறைக் கலாமன்றம் இப் பணியைக் காலத்திற்குக் காலம் காத்திரமாக வெளிப்படுத்தி வருகின்றது. இரண்டு வருடத்திற்கு முன்னர் இசைநாடக விழாவினை ஏற்பாடு செய்து நடாத்தியமை வரவேற்கவேண்டியது. ஆனால் இப்பணி தொடரவேண்டும். பாரம்பரிய மேம்பாட்டுக் கழகம் பாரம்பரிய கலை வடிவங்களையும் கலைஞர்களை பாதுகாத்து வழிநடத்துவதில் தன்னாலான பணியினை ஆற்றி வருகின்றது. ஒவ்வொருவருடமும் பல இளம் கலைஞர்களை உருவாக்கும் முயற்சிகளை மேற்கொள்வதுடன், மூத்த கலைஞர்களை கௌரவிக்கின்றமை காலத்திற்கேற்ற பணி. கலாபூசணம் செல்லையா மெற்றாஸ் மயிலின் செயற்பாடுகள் பாராட்டப்படவேண்டியது. இருந்த போதிலும் இசைநாடகத்திற்கான பங்களிப்பு போதுமானதாக இல்லை.

கலைஞர்களைப் பொறுத்தவரையில் தூய்மையானவர்களாக இருக்க வேண்டும். அப்போதே கலை வடிவங்களும் தூய்மையாக இருக்கும். நேர்மையுடனும் ஒழுக்கமானவர்களுமான நாடகக் கலைஞர்கள் வளரவேண்டும். இவை இன்றைய மூத்தகலைஞர்கள் சிலரிடம் காணமுடிவதில்லை. நாம் சரியாக இருந்தாலே கலையையும் முழுமையாக அதேநேரம் திருப்திகரமாக வளர்க்க, பேண முடியும். கலைவடிவங்கள் காலத்தால் அழியாதவை கலைஞர்களும் அவ்வாறே மங்காப் புகழுடன் இருக்கவேண்டுமாயின் கலையை மதித்து அதற்கென உரிய மரியாதையை செலுத்த வேண்டும்.

கலைஞர்களைப் பொறுத்த வரையில் தான் ஏற்ற பாத்திரத்தை மிகத் திறமையாக, பாத்திரமாக மாறி வெளிப்படுத்த வேண்டும். பாடல், வசனம், அங்க அசைவுகளை பாத்திரத்திற்கு அமைவாக வெளிப்படுத்தி பார்வையாளர்களினது மனங்களில் இடம்பிடிக்க வேண்டும்.

பாத்திரங்களை அதன் மரபு தவறாது வெளிப்படுத்துவதற்கு போதிய ஒத்திகைகள் இருந்தாலும் குருபக்தி மிக அவசியம். ஒவ்வொரு கலைஞரும் தமது குருவை மதிக்கவேண்டும். குருபக்தி இதயத்தில் ஊடுருவ வேண்டும். அப்பதான் கலை வளரும். இல்லாவிடில் கொஞ்சக் காலத்தில் கலை நிண்டு போயிரும். கலைஞர்கள் கலைக்காக முழுமையாக தம்மை அர்ப்பணிக்காது விடினும் அர்பணிக்கும் குறித்த பகுதியையாவது ம்முழுமையாக அதேநேரம் தூய்மையாக வழங்க வேண்டும்.

ஆர்மோனியக் கலைஞராக சென்று சத்தியகீர்த்தியாக பாத்திரமேற்று நடித்தமை என்னால் மறக்க முடியாதது. பரந்தன் பாம்புக்கமம் நாகபூசணி அம்மன் கோயிலில் மூன்று நாட்களாக இசைநாடகங்கள் போடப்பட்டன. வி.வி. வைரமுத்து குழுவினரின் சம்பூர்ண அரிச்சந்திரா நாடகம் மூன்றாம் நாள் நடந்துகொண்டிருந்தது. மயான காண்ட பகுதியில் வி.வி.வைரமுத்து வந்து பிறந்ததும் மண்மீது......என பாடினார்.... ஆனால், குரல் கட்டிவிட்டது. வைரமுத்துவிடம் ஆர் மோனியத்தை கொடுத்துவிட்டு நான் சத்திய கீர்த்தியாகவும் வி.என். செல்வராஜன் தொடர்ந்து அரிச்சந்திரனாகவும் நடித்து. நாடகத்தை நிறைவுசெய்தோம். இன் நிகழ்வு இன்று நடந்ததுபோல் உள்ளது. ஆனால். மூத்த இவ்விரு கலைஞர்களும் இன்று அமரர்களாகி விட்டனர். இவர்களது இழப்பு இசைநாடகத்துறையில் ஈடுசெய்ய முடியாதவை.

பழைய கலைஞர்களில் பெரும் பாலானவர்கள் கர்நாடக சங்கீதத்தை முறைப்படி கற்றவர்கள். நாடகம் தொடங்கும்போது கீர்த்தனையுடன் மேடையில் ஏறுவார்கள். இப்பொழுது கீர்த்தனைபாடுவதே அரிதாகவுள்ளது. இவர்களிடையே பயபக்தி. இருந்ததுடன் ஏனைய கலைஞர்களை மதிக்கும் பண்பும் இருந்தது. இதனாலேயே இவர்கள் இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய கலைஞர்களிடையே மேற்படி விடயங்களைக்காணமுடிவதில்லை. என்னைப் பொறுத்தவரையில் எனக்கென தனியே ஒரு பாணியை வகுத்து அதனையே பின்பற்றி வருகிறேன்.

எனது தந்தையாரிடம் நான் பெற்றதை என் புதல்வர்களிடமும் வளர்த்துவருகிறேன். அதிலும் குறிப்பிடும்படியாக கலைஞனான கேசரி, இசை நாடக பூபதி இரத்தினகுமார் எம் பரம்பரையின் பெயர் சொல்வதற்கென இசை நாடகத் துறைக்கு தனது பங்களிப்பைவழங்கி வருகிறான். இவரது வளர்ச்சியின் நிறைவிலேயே எனது இறுதிக் காலத்தை மனநிறைவுடன் கழித்துவருகிறேன். ஒரு விதையாக இசைநாடகத் துறைக்கு எனது புதல்வனை அர்ப்பணித்துள்ளேன். காலப்போக்கில் பெருமரமாக பலபேரிற்கு நிழலாக அமைவான் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.



கலைத்துறைக்கு நான் ஆற்றியசேவையை மதித்து, அங்கீகரித்து கலாபூசணம் விருது வழங்கப்பட்டுள்ளது. 81 வயதில் இவ்விருதைப் பெறுகிறேன் எனும்பொழுது மனதிற்கு வேதனையாக இருக்கிறது. இருக்கும்போதே அனுபவிக்கவேண்டும்.

இருந்த போதிலும் கலைஞர்களிற்கான விருதுகளையும், கௌரவங்களையும் அவர்கள் இயங்கிக்கொண்டிருக்கும் போது வழங்குவதே மிகப் பொருத்தமாக அமையும் என நான் கருதுகிறேன்.

எம் கலையை வளர்க்கவேண்டும். புதிய கலைஞர்களை உருவாக்கவேண்டும். இளயவர்கள் ஆர்வத்துடன் முன்வர வேண்டும். கூத்தாடுவதும் குந்தி இருப்பதும் ஆத்தாதவன் செயல் என்பது அந்தக் காலம். இன்று கல்வி கற்ற பெரும் கல்விமான்களே கலைத் துறையில் உள்ளனர். விரும்பியோ விரும்பாமலோ எம்மை நாமே ஆள வேண்டும் எமது நிலங்களிலேயே நாம் வாழவேண்டும். இதில் வேறுயாரும் பங்கு கொள்வதற்கு இடமில்லை. இதே போல் எமது கலையையும் ஆள வேண்டியதும் ஆடவேண்டியதும் நாமும் எமது சந்ததியினருமே! என தனது கருத்துக்களை நிறைவு செய்தார் கலாபூசனம் சின்னத்தம்பி - செல்லையா.

இசைநாடகத் துறையில் இரண்டு வடிவங்களில் இயங்கிவந்து இன்று ஓய்ந்திருக்கும் முழுமையான மூத்த கலைஞரை சந்தித்த நிறைவில் செவ்வியை நிறைவு செய்தோம்.

# எங்கட தேங்காயை எடுத்து எங்களுக்கு அடிக்கினமாக்கும்...?



## ஏ9-ஏரம்பு

உலா-22

வணக்கம் எல்லாருக்கும்! என்னத்தைச் சொல்லிறது; உந்த அநியாயப்படுவாங்களின்ரை அக்கிரமம் வரவர மிதமிஞ்சிப்போகுது. திரும்பவும் இயக்கத்தின்ர முக்கியமான ஆக்களை நிராயுதபாணியான நிலையில வைச்சுச்சுட்டுப்போட்டாங்கள். எட சண்டை பிடிக்க விருப்பமெண்டால் 'ஓயாத அலைகள்' ஐத் தொடரவிட்டிருக்கலாமெல்லே! ஏலாத நிலைமையில எல்லே உள்ள உலகநாடெல்லாம் போய் கண்ணீர் ஊத்தி ஊத்தி தங்கட 40000 ஆமி யையும் காப்பாத்தச்சொல்லி கதறி யழுது, இப்பையிருக்க பேச்சு வார்த்தைச்சூழலுக்குத் தயாரெண்டு அறிவிச்சவை. இப்பை இயக்கம் ஒப்பந்தத்தின் படி பொறுமை காக்கி தெண்டு தெரிஞ்சவுடனே, சும்மா சொறிச்சேட்டைவிட்டுக் கொண்டு, ஏதோ பெரிய கெட்டித்தனம் எண்டு நினைப்பில திரியிறாங்கள். தங்கட காவலரணுக்கு முன்னால நடக்கிற துக்கெல்லாம் கருணா குழுவெண்டு சொல்லிச் சமாளிக்கலாமெண்டு அவையள் நினைக்கினம். அப்பிடி யெண்டால் உந்த இனந்தெரியாத 'எல்லாளன் படை', 'சங்கிலியன் படை'... ஏன் தங்களுக்கேற்பட்ட நெருக்கடி நிலைமையால அதிருப்தியடைஞ்ச ஜே.வி.பி ஆயுதக் குழுக்கள் கூட நினைச்சா எத்தினை அலுவலுகள் குடுக்கலாம். சொறிச் சேட்டையை கெட்டித்தனம் எண்டு நினைக்கிற ஆக்கள் உண்மையான கெட்டிக்காரர்கள் சேட்டை விடத் தொடங்கினால் எப்பிடியிருக்கும் எண்டிறதையும் கொஞ்சம் யோசிச்சுப் பார்க்கவேணும். இன்னுமொரு விசயத்தைக் கவனிச்சனீங்களே ? வழியோரமிருந்து வாழ்வு கொடுக்க வெண்டு இருக்கிற கோயிலே, அந்த வாழ்க்கையை எடுக்கவும் துணை போயிட்டிது.

இதைவிட பேரினவாத ஊடகங்களின்ரை அநியாயம் பெருத்த அநியாயம். தங்கட விருப்பு, வெறுப்பெல்லாத்தையும் கலர் அடிச்சு, தங்களுக்கு தீனி போடிற ஆக்களுக்கு விசுவாசமாய் கண்ட கிண்டபடியெல்லாம் எழுதித்தள்ளினம். ஒரு பத்திரிகையில இருக்கிற உண்மையைவிட, நாலைஞ்சில இருக் கிற பொய்யள் சிங்களச்சனத் திட்டையும் நல்லா எடுபடிது. என்ன விசயத்தையும் அச்சடிச்சபடி பார்க்கேக்கிள்ளை அதுக்கொரு தனிக் கௌரவம் தான். இப்பை பாருங்கோ பேரினவாதப்பத்திரிகை ஒண்டுக்கு நான் நாட்டின்ர தற்போதைய 'சிற்று ஏசனைப் பற்றி றிப்போர்ட் எழுதப்போறனெண்டு வையுங்கோ! '.... அவருக்கும், இவருக்கும் இடையில முரண்பாடாம். இவர் கோவிச்சுக் கொண்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடிட்டாராம். இதைப்பார்த்த உவருக்கு எல்லாம் வெறுத்துப்போய் சரியா மனம் உடைஞ்சிட்டாராம். பெயர் குறிப்பிட முடியாத இடத்திலிருந்து ராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த ஆதாரங்களின்படி இரண்டு நாட்களுக்கு முன் காலையுணவாக பிட்டும், பருப்பும் சாப்பிட்ட பிற்பாடு எந்த உணவையும் அவர் உட்கொள்ளவில்லை. அவர் கடைசியாகச் சாப்பிடப் பயன்படுத்திய கோப்பையின் சற்றலைற்படம் கீழே..', எண்டெல்லாம் எழுதிறது. அடுத்த கிழமை முதல் கிழமை நான் எழுதின வெடியளையே மேற்கோள் காட்டி ஒருமாதிரி பக்கத்தை ஷேப் பண்ணிப்போடலாம். ஏதோ பாருங்கோ, பிழைப்புக்கு வேற வழி தெரியாட்டி ஏதோ எங்களை வைச்சு வயித்தை நனைச்சுப்போட்டுப் போகட்டும். ஆனாலும், இனமுரண்பாடுகளை படு மோசமான நிலைக்குத் தள்ளிவிடுகிற ஆரோக்கியமில்லாத உப்பிடியான போக்குக்காரரால, மேலதிகமாகக் கஷ்ரப்படுகிற சனத்தின்ரை வயித்தெரிச்சலையும் உப்பிடியான ஆக்கள் கொஞ்சம் யோசிச்சுப் பார்த்துத் திருந்தோணும். சுனாமி றெயினைத் தாக்கி ஆயிரம் பேருக்கு மேல உயிர் ஊசலாடிக்கொண்டிருக்க, ஒண்டரை நாளா ஒண்டும் தெரியாமல் இருந்த தெற்கு தான். ஏன் முந்தியொருக்கால் சீனன்குடாவில கரும்புலியள் வெற்றிகரமாகத் தாக்குதல் எல்லாம் முடிச்சாப்பிறகு, ர்ாணுவப் புலனாய்வுத்துறைய்ய ஆதாரம் காட்டி அந்தக் கரும்புலியள் தாக்குதலுக்கு முன்னால ஆட்டுக்கறியோட புட்டுச்சாப்பிட்டவை எண்டும் ஒரு பத்திரிகை எழுதினது. ஆ ! கடவுளே ! நான் என்னத்தைச் சொல்லிறது !

நீங்கள் சொல்லுவியளாக்கும் 'பொய் நிரந்தரமற்றது, உண்மையே நித்தியமானது' எண்டு. உதை சும்மா வாய்ப்பிராக்காய் சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. அந்த உண்மைக்காக கஷ்ரப்படுகிற மக்களின்ரை உழைப்பிலதான் அதின்ரை வெற்றி தங்கியிருக்கு. இல்லாட்டி கனபேர் சொல்லிற பொய்யே நித்தியமாய் விடும். உப்பிடித்தான் கொஞ்சக்காலத்துக்கு முன்னால உங்கை ஒரு இடத்தில, ஒரு தென்னை மரத்தைச்சுத்தி எக்கச்சக்க சனம். ஏதோ எக்கச்சக்க புதினம் ஆக்குமெண்டிட்டு நானும் தலைதெறிக்க ஓடிப்போய் விசாரிச்சுப்பார்த்தன். அந்தத் தென்னையின்ரை பாளையிலை பிள்ளையார் தெரியிறார் எண்டு சொல்லிச்சினம். நானும் பூந்து, பூந்து பார்த்தன். ஒண்டுமாக் காணக்கிடைக்கேல்லை. பக்கத்திலை நிண்ட வரிட்டை வாய்விட்டே கேட்டிட்டன். 'அது சாமானியருக்கெல்லாம் லேசில தெரியாது. கொஞ்சமாவது Creative mind (சிருஷ்டித்திறன்) இருக்கிற ஆக்களுக்குத்தான் அவர் தெரிவார்', எண்டு பதில் கிடைச்சிது. அதிலை நிண்ட 30, 40 பேரிட்டை இருக்கிற திறமை என்னட்டை மட்டும் இல்லையெண்டு மற்றாக்களுக்குத் தெரிய வந்தால் எவ்வளவு வெட்கக்கேடு ! ஒரு விளக்கம் கெட்ட பெக்கோ எண்டெல்லே என்னை நினைச்சுப் போடுவினம். நினைக்கவே உடம்பெல்லாம் வேர்த்துக்கொட்டிச்சிது. இதை இப்படியே விடக்கூடாது எண்டு நினைச்சிட்டு, 'ஓம் ஓம் ! அங்கை அப்பிடியே பின்னால இடது பக்கமாய்ப் பாருங்கோ ! ஒரு வேலும், மயில்தோகையும் தெரியிது', பின் பக்கமாய் நிண்ட தென்னையின்ரை புண்ணியத்தில என்னால இப்பிடி பலத்துச் சொல்ல முடிஞ்சிது. எட மற்றவனுக்குத் தெரிஞ்சதுக்கு மேலால எனக்குத் தெரியிதெண்டு விலாசம் அடிக்கவேண்டாமே ! சொன்னதுதான் தாமதம் எல்லாரும் ஒருத்தரையொருத்தர் பார்த்திச்சினம்

மாறிமாறி ஏதோ முணுமுணுத்திச்சினம் என்னையும் திரும்பி ஒரு கேள்விக்குறியோடை பார்த்திச்சினம். நானோ அதை யெல்லாம் பாராத மாதிரி தென்னை யுச்சியில என்ரை Creative mindக்கு இன்னும் ஏதாவது அகப்படுதோ எண்டு தேடிக்கொண்டிருந்தன். உ[illegible]ள்ளுக்குள்ளை நக்கல், நையாண்டியெண்டு நினைச்சு சாத்துப்படி விழுந்திடுமோ எண்டும் ஒரு பயம். ஆனாலும் கொஞ்சநேரத்தில நிண்ட சனமெல்லாம் என்ரை கண்டுபிடிப்பை ஏகமனதா ஏற்றுக்கொண்டிச்சினம். எட விசயம் இவ்வளவு சிம்பிளாகக் கிடக்கிது. அங்கை தொடர்ந்து நிண்டு முழுக்கயிலாத்தையும் கண்டுபிடிச்சு அறிமுகப்படுத்தி, இந்த ஏரம்பரின்ரை Creative mind ஆ , கொக்கா எண்டு காட்டிறதுக்கு நிற்போமெண்டு பார்த்தால், இடைக்கிள்ளை வேறொரு அலுவல் வந்து குழப்பீட்டிது. இப்ப உந்த விசயம் என்னத்துக்கு வந்தது? 'ஆ.... பத்திரிகையளின்ரை பம்பலைப் பற்றிக் கதைச்சனாங்களாக்கும்.

சிங்கள ஊடகங்களைப் பற்றிக் கதைக்கிறோம். ஏன் எங்கட தமிழினத்திலேயே சிலதுகள் திருந்தாமல் இருக்குதுகள். நீங்களெல்லாரும் உந்த இடதுசாரி, வலதுசாரி, நடுசாரி, மதில்மேல்சாரி எண்டு பலமாதிரி சாரியளையும் பற்றிக் கேள்விப்பட்டிருப்பியள். அப்பிடி ஒரு பிரபலமான சாரிப்போக்குக்காரர் ஒருத்தர் யாழ்ப்பாணத்தில இருந்து கிட்டடியில வந்திருந்தார். நானும் சுனாமிக்குப் பிறகு அங்கால போகக்கிடைக்கேல்லை எண்டிட்டு, சுனாமிப் பாதிப்புகள், உணர்வலைகள் அங்கை எப்பிடியெண்டு அவரிட்டை விசாரிச்சன். 'ஓ. . என்ன பார்க்க எண்டு உவ்வளவு மினைக்கெட்டு வந்த பிரதமமந்திரியையும், முக்கிய ஆக்களையும் அவமதிச்சு அனுப்பினதுதான் சனத்துக்குப் பெரிசா பிடிக்கேல்லை. என்ன இருந்தாலும் வந்த பெரிய மனுசருக்கு உப்பிடிச்செய்திருக்கக்கூடாதெண்டு கதைக்கினம்' எண்டார் அவர். இதென்ன சனத்தின்ரை நிலைமையை நான் கேட்க, இது வேற ஏதோ விசுவாசமான பதில் வருகுதெண்டு ஏங்கிப் போன நான் அவருக்குச் சொன்னன், 'சுனாமியாலை தனிப்பட்டரீதியா நீரும் நஷ்டப்படேல்லை, நானும் நஷ்டப்படேல்லை. ஆனா அதாலை பாதிக்கப்பட்டு, கஸ்ரங்களுக்கு முகம் கொடுக்கிற சனம் கோவப்பட்டிருக்கெண்டால் அதிலை இருக்கக் கூடிய நியாயத்தை நாங்கள் புரிஞ்சு கொள்ள முயற்சிக்கோணும். உருப்படியா உதவியள் ஒண்டும் செய்யாமல் வெறுமனே கமராவுக்கு முன்னால வாக்குறுதியளை அள்ளி வழங்கிக்கொண்டிருந்தால், பார்க்கிற ஆக்களுக்கு ஆத்திரம் வராமல் என்ன செய்யும்! வெளிநாடுகளிட்டை இருந்து உதவியளை வேண்டிறதுக்காக உந்த அரசாங்கம் கலைச்சுக் கலைச்சு தமிழரின்ரை கையை மட்டுமில்லை, காலையும் பிடிக்கும். ஆனா போட்டோ எடுத்து காரியம் ஆனவுடன எல்லாம் அவுட். இது சாதாரணமா எல்லாருக்கும் விளங்கும். அது சரி சனத்துக்குப் பிடிக்கேல்லை எண்டு சொன்னீங்கள். எந்தச்சனம் ? பாதிக்கப்பட்ட சனமோ?பாடசாலையளிலை இருக்கிற சனமோ? இல்லாட்டி வெளியால இருக்கிற சனமோ ? எந்தச்சனம் அப்பிடி மனஸ்தாபப்பட்டிச்சிது ?' எண்டு கேட்டன். 'இல்லை... எனக்குத் தெரியாது . . நான் சொல்லேல்லை. அங்கையிருக்கிற ஒரு பேராசிரியர்தான் இந்தக் கருத்தைச் சொன்னவர்', எண்டு பதில் வந்திச்சிது. உதுக்கு மேல நான் என்னத்தைக் கதைக்கிறது, நீங்களே சொல்லுங்கோ பார்ப்பம் ! சனம் சொன்னது எண்டு பெரும்பான்மையில குறிப்பிடப்பட்ட கருத்து, அடுத்த கேள்வியிலையே ஒற்றை பேராசிரியராகப் போயிட்டிது. தொடர்ந்து விசாரிச்சால் பேராசிரியர் சிலநேரம் முன்னிலைப்பள்ளி ஆசிரியராவும் ஆகிடுவார். என்னவோ உப்பிடி புத்தி(?) முத்தின ஜீவியளோடையும் மாரடிக்கவேணும் எண்டிறது எங்கட இனத்தின்ரை கஷ்டகாலம் !

இல்லாட்டி கடக லக்கினத்தில் அமெரிக்கா சுதந்திரப்பிரகடனம் செய்ததால விரைவில 3ஆம் உலகப்போர் நடக்கிறதுக்கான வாய்ப்பிருக்கிறதா சாத்திரியார் ஒருத்தர் சொல்லியிருக்கிறார். உலகத்தில இருக்கிற துருவப்பனியள் கரைஞ்சு ஏழாக இருக்கிற சமுத்திரங்களின்ரை தொகை பத்தாக அதிகரிக்குமாம். அப்ப அந்த தண்ணியின்ரை பாரம் கூடி தாங்கேலாமல் பூமி 90° சரிஞ்சு போடுமாம். இது விசர் ஒவராக முத்தின கதை பாருங்கோ ! 3ஆம் மட்டுமல்ல 4ஆம் உலகயுத்தமும் நடந்து முடிஞ்சிட்டிது. கன உலகநாடுகள் பங்குபற்றினதால முதல் இரண்டு தடவையும் அவற்றை உலகயுத்தம் எண்டு வரலாறு பதிஞ்சு கொண்டிச்சிது. அதுக்குப் பிறகு 1991 இல நடந்த ஈராக் மீதான யுத்தத்திலையும், பேந்து அண்மைக்காலங்களாக நடந்து வருகிற ஈராக் தொடர்பான யுத்தத்திலையும் முதல் இரண்டு யுத்தங்களைப் போன்ற எண்ணிக்கையில கன நாடுகள் சம்பந்தப்பட்டிருக்கிது. இருந்தாலும் 'உலகயுத்தம்' எண்ட பேர் மட்டும்தான் கொடுக்கப்படேல்லை. உதே மாதிரித்தான் சமுத்திரப்பிரிப்புகளும். ஒண்டோடையொண்டு தொடர்பான நீர்நிலையளுக்கு சமுத்திரங்களெண்டு வெவ்வேற பேர் கொடுக்கப்பட்டது, காலப்போக்கில செயற்கையாக நிகழ்ந்த ஒண்டு. நாளைக்கே அமெரிக்க சனாதிபதி அத்திலாந்திக் சமுத்திரத்தின்ரை அமெரிக்கப்பகுதியை தன்ரை பெயரால 'புஷ் சமுத்திரம்' எண்டு பிரகடனப்படுத்தினால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேணும். அப்பிடியே ஆக்ரிக்கில 'பூட்டின் சமுத்திரம்' தோன்றும். இதைப்பார்த்து கொட்டாவி விடிற ஆராவது பக்கத்தில கிடக்கிற தண்ணியை தன்ரை பேரால 'சந்தி... சாக்கடை' எண்டெல்லாம் அழைக்கப்பார்ப்பினம். இதுக்கெல்லாம் குறி சொல்லித் திரியிறவர் அமெரிக்காவின்ரை ராசிபலன்படி 25.07.2032 முதல் உலகத்துக்கு நல்ல காலமாம். ஏதாவது பிரயோசனமா சொல்லியிருந்தால் உந்தக்கதையளைச் சவைக்கு எடுக்கலாம். எல்லாம் முடிஞ்சாப்பிறகு சனத்தின்ரை பலவீனத்தை வைச்சு பணம் பண்ணிற உப்பிடிப்பட்ட கும்பலுகளுக்கு ஏன்தான் பொறுப்பான ஊடகங்களும் துணைபோகுதோ கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

மற்றது பாருங்கோ! செத்த வீடுகள்ளை சில்வர்ப்பேணிகளவெடுக்கிறதெண்டு கேள்விப்பட்டிருப்பியளெல்லோ ! அப்பிடிப்பட்ட உறவுகளைப் பற்றி உங்கட கருத்தென்ன ? ஏன் கேட்கிறனெண்டால் கொஞ்சநாளைக்கு முன்னரிலை கொழும்புக்கு வந்திட்டு இஞ்சாலை வராமல் திரும்பிப்போன ஒருத்தர், பெரிசு பெரிசா அறிக்கையள் விடுறாராம். தானும் ஒருத்தன் இருக்கிறனெண்டு பப்ளிக்குக்கு சிக்னல் குடுக்க விரும்பினால் அதுக்கு உப்பிடியே எரியிற வீட்டுக்குள்ளை புடுங்கப்பார்க்கிறது ! இயக்கத்தில வயசு குறைஞ்ச ஆக்கள் இருக்கினமோ இல்லையோ எனக்கு அதைப் பற்றித்தெரியாது. ஆனாலும் வலுக்கட்டாயமா ஒருத்தரையும் சேர்க்கேல்லை எண்டு மட்டும் என்னால உறுதியாச் சொல்லேலும். நான் நினைக்கிறன் செஞ்சோலை, செந்தளிர், அறிவுச்சோலை, குருகுலம் எல்லாத்தையும் கணக்கில எடுத்திருக்கினம் · போல அந்தக் கனவான்கள்.எங்கட சின்னனுகள் குண்டு வீச்சுகளில கொல்லப்படேக்கிள்ளை கையாலாகாமல் கிடந்தவை. தண்ணி காட்டிற நிவாரணத்தைக் கொடுத்திட்டு, மற்றம்படி அரசாங்கத்தின்ரை தாளத்துக்கு ஆடிப்போட்டு, இப்பை எங்களைப் பற்றின கரிசனை மிஞ்சிப்போய் கணக்குகள் காட்டினமாக்கும். ஏன் கிரிசாந்தியும் 17 வயசுப்பிள்ளை தானே ! அதுவும் வெளிநாடுகளிலை இருக்கிற எங்கட சனங்கள் உள்ள றோட்டுகளை எல்லாம் நிரப்பி நிண்டு ஆர்ப்பாட்டம் வைச்சதாலதானே வெளியால வந்திச்சிது. ஏதோ பேருக்கு மட்டும் மரணதண்டனை குடுத்துப்போட்டு, அந்தத் தண்டனையை நிறைவேற்றாமல் இயற்கைச்சாவு வரும்வரைக்கும் இழுத்தடிக்கிற அரசாங்கத்தையெல்லாம் கண்டிக்க வக்கில்லை, வந்திட்டினம்

(22 ஆம் பக்கம் பார்க்க....)

# தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு (TITA)

## '100 கிராமியத் தகவல் தொழில் நுட்ப நிலையங்கள்' - செயற்றிட்ட மீளாய்வு - 2005

வடக்கு - கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில்
கிராமிய மட்டத்தில் தகவல் தொழில் நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கோடு
தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு ஆரம்பித்த
**'100 கிராமியத் தகவல் தொழில் நுட்ப நிலையங்கள்'** திட்டத்தின்
முதற்கட்ட நிறைவில் இருபது பயிற்சி நிலையங்களை நிறுவி நிர்வகித்து வருகின்றோம்
என்ற பெரு மகிழ்வோடு திட்டத்தின்
**அடுத்த கட்ட நகர்வுக்காக உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.**


**யாழ்ப்பாணம் :**
* யாழ்ப்பாணம் இலவச கணினி பயிற்சி நிலையம்
* யாழ்ப்பாணம் இலவச ஆங்கில வள நிலையம்
* இணுவில் கிராமிய த.தொ.நிலையம்
* வேலணை கிராமிய த.தொ.நிலையம்
* சாவகச்சேரி இலவச கணினிப் பயிற்சி நிலையம்

**கிளிநொச்சி :**
* இலவச மழலைகள் கணினிப் பூங்கா, பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி.
* இலவச் கணினிப் பயிற்சி நிலையம், இராமநாதபுரம், வட்டக்கச்சி.

**முல்லைத்தீவு :**
* கிராமியத் தகவல் தொழில் நுட்ப நிலையம், முள்ளியவளை.
* கிராமியத் தகவல் தொழில் நுட்ப நிலையம், முல்லைத்தீவு.

**திருகோணமலை :**
* இலவச கணினிப் பயிற்சி நிலையம், ஈச்சிலம்பற்று.
* கிராமியத் தகவல் தொழில் நுட்ப நிலையம், செல்வநாயகபுரம்
* இலவச கணினிப் பயிற்சி நிலையம், பாலையூற்று.
* கிராமியத் தகவல் தொழில் நுட்ப நிலையம், நிலாவெளி

**மன்னார் :**
* இலவச கணினிப் பயிற்சி நிலையம், மன்னார்.
* கிராமியத் தகவல் தொழில் நுட்ப நிலையம், பேசாலை





**மட்டக்களப்பு :**
* இலவச கணினிப் பயிற்சி நிலையம், கல்லடி.
* கிராமியத் தகவல் தொழில் நுட்ப நிலையம், சித்தாண்டி

**அம்பாறை:**
* இலவச கணினிப் பயிற்சி நிலையம், கல்முனை.

TITA
TAMIL INFORMATION TECHNOLOGY ASSOCIATION

**மலையகம் :**
* இலவச கணினிப் பயிற்சி நிலையம், பொகவந்தலாவ.
* கிராமியத் தகவல் தொழில் நுட்ப நிலையம், புஸ்ஸாவத்தை.



**உங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அனுப்பி வைக்க வேண்டிய முகவரிகள் :**

# தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு

## TAMIL INFORMATION TECHNOLOGY ASSOCIATION

TITA
TAMIL INFORMATION TECHNOLOGY ASSOCIATION

**தலைமையகம்.**
75, லோரன்ஸ் வீதி,
கொழும்பு - 04.
தொலைபேசி : 077 7780304
077 7271467

Tamilita .Org
**பிராந்தியச் செயலகம்**
401/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : admin@tamilita.org
வலைமனை : www.tamilita.org

AST Graphix



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 07**

**பகுதி -36**

இப்படியான விடயங்கள் பயன் படுத்தப்படும் பொழுது குறிப்பிட்ட தரவுகளில் தொடர்புபட்ட எந்த ஒருவரையும் தரவுகளை பயன்படுத்தும் எந்த ஒருவரும் அடையாளம் காணமுடியாத அளவுக்கு அத்தரவுகளில் உள்ள அனைத்துப் பெயர்கள் மற்றும் அடையாளம் காட்டக் கூடிய தகவல்கள் மாற்றப்




பட்டுவிடும், எங்களுடைய பணியைப் பொறுத்த வரை அவற்றில் தொடர்புபடும் தனித்தனி நபர்களது உளவியல் ரீதியான பிரச்சினைகளில் இருக்கும் அடிப்படையான ஒற்றுமைகள் காரணமாக, மேற்படி தரவுகளில் எஞ்சியிருக்கும் தகவல்கள் குறித்த நபரை இனம் காட்டப் போதுமானவை என நாம் நினைத்தாலும், நடைமுறையில் பிள்ளைகளின் விளையாட்டை வைத்து அவர்களை அடையாளம் காண முடியாமலிருக்கும்.

நான் பென்சிலை கூராக்க அறையை விட்டு வெளியேறிய போதும், கண்ணாடிக்குப் பின்னாலிருந்த அவதானிப்பாளர்கள் தங்கள் பணியைத் தொடர்ந்துகொண்டிருந்தார்கள்.

சவள் ஒன்றை எடுத்த டிப்ஸ், மணலை தோண்டத் தொடங்கினான். அப்படித் தோண்டும்பொழுது தனக்குத் தானே கதைக்கத் தொடங்கினான். "ஏய் மணலே, நீ இங்கே இருக்கலாம். யாரும் உன்னை குழப்பமுடியாது எண்டு நினைச்சியோ? மிருகங்களே! ஆட்களே! நீங்களும் அப்பிடி நினைச்சனீங்களோ? நான் உங்களுக்குச் செய்து காட்டுறன் உங்கள கிண்டி எடுக்கப்போறன். உங்கள கண்டுபிடிப்பன். நான் புதைச்ச ஆள நான் கண்டுபிடிப்பன். கண்டு பிடிக்கும் மட்டும் தோண்டிக் கொண்டே இருப்பேன்."

மணலை விரைவாக தோண்டத் தொடங்கினான். இறுதியாக தான் புதைத்த வீரர்களில் ஒன்றை வெளியே இழுத்தெடுத்தான். "அப்ப இஞ்சயோ இருந்தனீ? உன்ன என்ன செய்யப்போறன் எண்டு பார்....விறைச்சுப் போய் அவர் நேராய் நிற்கிறதை பார்....சரியா... வேலியில நிற்கிற இரும்புத் தண்டவாளம் மாதிரி....உன்ன இஞ்ச புதைக்கப் போறன்... தலைகீழாப் புதைக்கப்போறன்..... மணலைத் தோண்டிப் புதைக்கப்போறன்"

மணலைக் கிண்டி அந்த வீரனை தலைகீழாக உள்ளே தள்ளினான். மீண்டும் கண்ணுக்குத் தெரியாமல் போகும்வரை உள்ளே தள்ளினான். பின்பு கைகள் இரண்டையும் ஒன்றோடொன்று தேய்த்து மணலை உதிர்த்து விட்டான். புன்னகை ஒன்று அவன் முகத்தில் தோன்றியது. பின் வாய் விட்டுச் சிரித்தான். அவனுடைய குரலின் தொனி உல்லாசமான தாகவும் சந்தத்துடனும் ஒலிப்பதாக மாறிக் கொண்டது. "உன்னுடைய தொப்பியையும் கோட்டையும் கழட்டு டிப்ஸ். இங்கே குளிராக இருக்கிறது" என்றான்.

கூராக்கப்பட்ட எனது பென்சிலுடன் நான் திரும்ப வந்தேன். டிப்ஸ் ஏறிட்டு என்னைப் பார்த்தான்.

"இங்க குளிரா இருக்கு" என்றவன், "என்ர கோட்ட கழட்டவா?" என்றான்.

"இஞ்ச குளிரா இருக்கு" நான் பதில் சொன்னேன் "இண்டைக்கு உங்கட மேலங்கிய கழட்டாம விடுறது நல்லது.

"அப்ப வெப்பமாக்கிய போட்டு விடுங்கோ" என்றான் டிப்ஸ். பின் வெப்பமாக்கியை நோக்கிச் சென்றவன் அதனைத் தொட்டுப் பார்த்தான். "வெப்பமாக்கி குளிருது" என்றான். ஓம். அது குளிரா இருக்கெண்டு எனக்குத் தெரியும். "நான் அத போட்டு விடுறன்" என்று அறிவித்த டிப்ஸ் அதைச் செயற்படுத்தி வட்டான். "அதப்போட்டால் இஞ்ச சூடாயிருக்கும எண்டு நினைக்கிறீங்களோ?" நான் கேட்டேன்.

"ஓம் அடித் தளத்தில நெருப்பு எரிஞ்சா இஞ்ச சூடாயிருக்கும்...." "அடித்தளத்தில நெருப்போ....?" நான் கேட்டேன். "போறணையில..... அடித்தளத்தில இருக்கிற போறணையில...."

"போறணை இண்டைக்கு பழுதாப் போயிற்றுது. கீழ ஆட்கள் அதத் திருத்திக் கொண்டிருக்கினம்."

"அதில என்ன பிரச்சினை?" டிப்ஸ் கேட்டான். "எனக்குத் தெரியாது" என்றேன் நான். சிறிது நேர இடைவெளிக்குப்பின், "நீங்கள் அத தெரிந்துகொண்டிருக்கலாமே?" என்றான்.

"நானோ? எப்பிடி?"

நீங்கள் போய், அடித்தளத்தில ஆட்கள் வேலை செய்யிற இடத்துக்குக் கிட்ட அவயளுக்கு இடஞ்சல் இல்லாம நிண்டா, அவர்கள் என்ன செய்கிறார்கள் எண்டு பார்க்கிறதோட என்ன பேசிக் கொள்கினம் எண்டும் கேட்கலாம்தானே...." என்று அவன் எனக்குச் சொன்னான்.

"அப்பிடிச் செய்யலாம்தான்" என்றேன். "அப்படியெண்டா ஏன் செய்யேல்ல?" என்றுகேட்டான் டிப்ஸ்.

டிப்ஸ் உண்மையை உனக்குச் சொல்லிறண்டா.... "அப்பிடிச் செய்யவேணு மெண்டு எனக்குத் தோன்றயில்லை" என்று பதில் சொன்னேன்.

"இந்த வழியில கனக்க நல்ல விசயங்கள் நீங்க அறியலாம்."

"எனக்கு அத நிச்சயமா தெரியும்" என்றேன். இந்த வழியிலே... அதாவது. விடயங்கள் இடம்பெறும் இடத்துக்கு அண்மையாக....அங்கு இருப்போருக்கு இடஞ்சல் இல்லாம... தள்ளி நின்றபடி... அவர்களை அவதானிப்பது மூலமும் அவர்கள் உரையாடுவதைக் கேட்பது மூலமும் டிப்ஸ் பல விடயங்களை அறிந்துகொண்டிருந்தான் என்பதும் எனக்கு நிச்சயமாகத் தெரிந்தது.

அலுமாரிகளை நோக்கி நடந்து சென்ற அவன் "இவை எல்லாம் வெறுசாயிருக்கு" "ஓமோம்" என்றேன் நான்.

இப்போது என்னை அவனது அவதானிப்புகளை கவனிக்கவேண்டிய நிலைக்கு கொண்டுவந்திருந்தான்.

"இண்டைக்கும் காலுறைகள கழட்டேலாத அளவுக்குக் குளிராயிருக்கு" என்றான். "நானும் அப்படித்தான் நினைக்கிறேன்"

"போறணை போன வியாழனே பழுதாப் போயிருக்கவேணும்" என்றான் டிப்ஸ். "அது உண்மையாக இருக்கலாம்" நான் ஒப்புக்கொண்டேன்.

"அப்பிடியில்லயெண்டா வேற எப்ப பழுதாகியிருக்கும்? ....வேற எப்ப?" என்று கேட்டான். "எனக்குத் தெரியேல்ல...நான் போறணை பழுதாப் போறதப் பற்றிக் கவனிக்கிறயில்ல.... எனக்கு அதுகளப் பற்றி கனக்கத் தெரியாது" என்று நான் சொன்னேன்.


வாய்விட்டுச் சிரித்தான் டிப்ஸ். "குளிரேக்கதான் நீங்கள் கவனிப்பீங்கள்" என்றான். "ஓமோம்" என்று ஒப்புக்கொண்ட நான் "அது சரியான முறையில சூட்டத் தருமட்டும் அது சரியா வேலை செய்யுது எண்டுதான் நினைப்பன். அப்பிடித்தராட்டா அதுக்கு ஏதோ திருத்த வேலை செய்யவேண்டியிருக்கு எண்டுதான் நினைக்கிறனான்" என்று கூறினேன்.

"ஓம்" என்றான் டிப்ஸ். "அப்பதான் அதுபழுதாகி விட்டது. என்பதை நீங்கள் கவனிப்பீர்கள்"

"அப்பதான் நான் கவனிப்பேன் " என்று நான் ஏற்றுக்கொண்டேன்.

மெதுவாக மேசையை நோக்கி நகர்ந்த அவன் அதன் மீதிருந்த சூப்பிப் போத்தலை எடுத்து சூப்பத்தொடங்கினான். சூப்பிக்கொண்டே இடைக்கிடை என்னோடு கதைத்தான்.

"மிஸ் ஏ இண்டைக்கு றப்பர் செருப்புகளை போடயில்லை" என்றான்.



"இல்லை. இண்டைக்கு அதுகள போடயில்ல"

"அதான் நல்லது" என்றவன் அறையின் ஒரு மூலையில் இருந்த முக்கோண அலுமாரி ஒன்றின் அருகே ஒரு கதிரையை இழுத்துப் போட்டுக்கொண்டான். அதன் கதவில் பெரிய சதுரம் ஒன்று வெட்டியெடுக்கப்பட்டு அதற்கு திரை போடப்பட்டிருந்தது. இது அதனை ஒரு பொம்மலாட்ட அரங்காக ஆக்கிவிட்டிருந்தது. கதிரையில் ஏறிய டிப்ஸ் திரைகளை விலக்கிப் பார்த்துவிட்டு, வெறுசாயிருக்கு" என்றான். கழிவு நீர்த் தொட்டிக்கருகே கதிரையை இழுத்துப் போட்டுவிட்டு அதில் ஏறி தொட்டிக்கு மேலே இருந்த அலுமாரிக்குள் பார்த்துவிட்டு "இதுகும் வெறுசாயிருக்கு" என்று அறிவித்தான்.

"உயரத்தில் இருக்கிற அந்த அலுமாரிகளில ஒண்டும் இல்ல." என்றேன் நான். ஆனால் அவன் எல்லாவற்றிலும் பார்வையிட்டான். பின் கீழே இறங்கி கதிரையை அப்பால் இழுத்து வைத்துவிட்டு, நீர் குழாய்த் தொட்டியை மூடியிருந்த கதவுகளை திறந்து நீர்க் குழாயைத் திறந்துவிட்டான். முழு வேகத்தோடு நீர் ஓடிக்கொண்டிருக்கும் போது சூப்பிப் போத்தலில் இருந்து சூப்பியைக் கழற்றினான். சூப்பியை கையில் வைத்துக்கொண்டு போத்தலை நிரப்பியபின் போத்தலை கவிழ்த்து நீரைத தொட்டிக்குள் ஊற்றினான். சூப்பியை மேசை மீது வைத்துவிட்டு நீர்க் குழாயைப் பூட்டிவிட்டான். துப்பாக்கியை எடுத்து மணலை அதில் நிரப்பிக் கொண்டான். பின் விசை வில்லை அழுத்தி மணலை வெளியே சுட முயன்றான். ஆனால் அவனால் முடியவில்லை. துப்பாக்கியளிலயிருந்து சொரிந்த மணல் தரையில் படிந்தது. பின் மணல் பெட்டியின் விளிம்பில் ஏறி அமர்ந்து கொண்ட அவன் மீண்டும் துப்பாக்கியில் மணலை நிரப்பியபின், விசைவில்லை அழுத்தினான். (தொடரும்....)

---

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது தேசியத் தலைமையும் போராளிகளும் உயிர்களின் பெறுமதியை உணர்ந்தவர்கள். மாவீரர் துயிலும் இல்லங்களை அவர்கள் பூஜிக்கும் அழகே அதற்கு சாட்சி. ஆனால் அரசாங்கத்தால் மக்களின் உயிர்களுக்கும் இழப்புக்களுக்கும் பெறுமதி கொடுக்க முடியவில்லை. இதனாலேயே இனவாத கண் கொண்டு நிவாரணப் பணிகள் மீதும் பேரினவாத சாயம் பூசியுள்ளனர் தென்னிலங்கை இனவாதிகள்.

''சுனாமி' நடந்த மறு கணத்திலிருந்து எங்கள் கடற்படைத் தளபதியும் கடற்புலிகளும் மக்களோடேயே சேர்ந்து வாழ்வதும் புலி வீரர்கள் அனைவரும் அதற்கு துணைநின்று செயற்படுவதும் மக்கள் மத்தியில் தலைமை மீதான நம்பிக்கையை மேலும் மேலும் உரம் போடுவது எமது போராட்டத்திற்கு கிடைத்துக் கொண்டிருக்கும் மிகப் பெரிய பலமாக உருவாகும்.

அனர்த்த நிவாரணத்தில் புலிகளின் நிர்வாக முறைக்கும் மக்களின் தேவைக்குமிடையே மிக நெருங்கிய தொடர்பு இருப்பது குறிபிடத்தக்கது. உடனிருந்து மக்களின் சுமைகளில் பங்குகொண்டு உதவும் மனப்பாங்கை மேலும் ஒருபடி வளர்த்து செதுக்க இது போராளிகளுக்கும் ஒரு சந்தர்ப்பம் என்பது பார்க்கப்பட வேண்டியது.

முல்லைக் கடல் பரப்பிலிருந்து மீண்டு வந்திருந்த 65-வயது தாய் ஒருவரிடம் ஆற்றுப்படையாளி ஒருவர் "அப்ப அம்மா இனி முல்லைத் தீவுக்குப் போறதோ?" எனக் கேட்ட போது அந்த அம்மா உருகி நெகிழ்ந்து கூறினார்.

"எங்கட பிள்ளைகள் எத்தினையாயிரம் போராளிகள் இரத்தம் சிந்தி பிடிச்ச மண் முல்லைத்தீவு, உயிர் குடுத்து நாங்கள் வாழ வேண்டும் எண்டதுக்காக பிடிச்ச மண்ணுக்கு திரும்பிப் போகவேணும், சுனாமிக்கு பயந்து போகாமல் விட ஏலுமே!" என்று கேட்டிருந்தார்.

கடற்புலிகளின் சிறப்புத்தளபதி (தமிழீழக் கடற்படைத் தளபதி) கேணல் சூசை அவர்கள் வடமராட்சி கிழக்குப் பகுதி சென்று மக்களின் தேவையறிந்து உடனடியாக மக்களுக்கு கிடுகுகளால் வேயப்பட்ட வீடுகள் அமைக்கப்பட வேண்டும். வெக்கை தாங்கமுடியாத கூடாரங்களுக்குள் வாழ்வது கடினம் எனச் சொல்லியதை மக்கள் மிகவும் பாசத்தோடு நினைவு கொள்கின்றனர்.

எது எப்படியோ கடற்கோள் அனர்த்தத்தை தென்னிலங்கை இனவாதிகள் பேரினவாத சாக்கடைக்குள் போட்டு மூடிக்கொண்டிருக்க சர்வதேச சமூகத்தின் மனிதாபிமானப் பார்வை தமிழீழத்தில் திரும்பிக் கொண்டிருக்க, தமிழ் மக்களும் புலி வீரர்களும் தேசியத் தலைமையும் நேச மொழி பேசி ஆதரவுக்கரம் இறுக்கி வைரம் பாய்ச்சுகிறார்கள்.

தேச விடுதலைப் போரின் கேந்திர முக்கியத்துவம் மிக்க எங்கள் கடலை மக்கள் நேசிக்க, எங்கள் கடல் அன்னையிடம் விளைந்த வீரம் மேலும் பலமடைய, தமிழ் மக்களை ஓரங்கட்டி ஒதுக்கி விட நினைக்கும் பேரினவாத ஆட்சிக்கு முடிவு கட்டி, எங்களை நாங்கள் தீர்மானித்து ஆளும் சுயநிர்ணயத்துக்கான பணிகளில் ஈடுபட, எழுச்சி கொண்ட மக்கள் படையை அணி திரட்டும் கடமையில் "சுய நிர்ணயத்திற்கான அரங்காக தன் இலக்கை தீட்டிய படியே" அவல நீக்க ஆற்றுப்படை அரங்கை அரங்கச் செயற்பாட்டுக் குழு முன்னகர்த்திச் செல்கிறது.

---

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)


பெரீசா . . ! சத்தம் சந்தடியில்லாமலுக்கு உந்த 'கியூ மெடிக்கா' எவ்வளவோ காரியம் சனங்களுக்குச் செய்யிது. அதைவிட்டிட்டு சும்மா வாய்தான் ! இல்லை எங்கட நாட்டில அப்பிடி இல்லாட்டியும், நான் ஒண்டு கேக்கிறன். அமெரிக்காவிலையும், ரஷ்யாவிலையும் சிறப்புப்படைக்காக 12 வயசிலை இருந்து பயிற்சி குடுக்கினம். பிரிட்டனும் 16, ஜேர்மனி 17 எண்டெல்லாம் தங்கடையள் கழுவாமல் கிடக்கக்கூடியதா, ஏன் எங்களிட்டை வருகினம் ?

கொஞ்சநாளைக்கு முன்னால ஒரு வெளிநாட்டு நகரமொண்டு சுனாமியாலை சேதமடைஞ்ச தமிழ் நகரமொண்டை தங்களின்ரை 'இணைநகரம்' எண்டு அறிவிச்சு கௌரவிச்சவையல்லோ ! அவையளே 'அந்தமாதிரி' நவீனமாய் எல்லாத்தையும் கட்டிக்குடுக்கப்போகினம், எண்ட மாதிரியெல்லாம் சில தமிழாக்களின்ரை வாயால நம்பிக்கை மொழிகளெல்லாம் அலை புரண்டோடிச்சிது. எங்கட ஊடகங்களும் 'கய்யோ ! முய்யோ !' எண்டு சந்தோசத்தில் கைகால் தெரியாமல் கட்டமடிச்ச செய்தியாய் அதைப் போட்டவையெல்லோ! அந்த வெளிநாட்டின்ரை குறிப்பிட்ட நகரத்தில எங்கட பள்ளிக்கூட வயசுத் தமிழ்ப் பிள்ளையள் புனர்வாழ்வுக் கழகத்துக்கு குடுக்கவெண்டு சேர்த்த ஒரு தொகைக்காசை அந்த நகரசபை முடக்கிட்டிதாம். தங்கட நகரத்தில சேர்த்த காசை தங்களின்ரை உதவித்திட்டத்துக்குத் தானாம் தர வேணும் எண்டிச்சினமாம். எங்கட காசுக்கு ஒரு 12 லட்சம் வரைக்கும் தேறுமாம் அந்தச் சேகரிப்பு. சரி அறிவிச்சபடி உருப்படியா அலுவல்கள் தொடங்கீட்டுதோ எண்டிறதை அறியேலாமல் கிடக்கிது. ஒருக்கால் கவனிச்சு நீங்களே பாருங்கோ! எங்கட தேங்காயை எடுத்து எங்களுக்கே அடிக்கினம் போல ! ஏதோ ஆர் உலை வைச்சாலும் அரிசி அவிஞ்சால் சரி. ஆனால், எங்களுக்கிருக்கிற இந்தப்பக்குவ மனப்பான்மை ஏன் அவையளுக்கு இல்லாமல் போயிட்டிது ? நாங்கள் எங்களை மட்டும் நம்புவோம் ! அப்ப வாறன் நான் !

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

# பாவலன் பதில்கள்



*பாவலா!*
*வியாபாரம் செய்ய முதலா- மூளையா தேவை?*
*பிரியதர்சன்,*
*முழங்காவில்.*
மூலதனம் மட்டுமல்ல மூளை தனமும் இருந்தால் மட்டுமே வியாபாரத்தில் முன்னேறலாம்.

*ப்பாவலா!*
*இக்காலமனிதர்கள் மத்தியில் ஆன்மீக நம்பிக்கை குறைந்துவருவது பற்றி?*
*நேசன்,*
*முள்ளியவளை.*
தார்மீக சிந்தனை குறையக்குறைய ஆன்மீக உணர்வும் குறைந்துவருகிறது.

*பாவலா!*
*மக்களை மதிக்காத உத்தியோகத்தர்களை என்ன செய்யலாம்?*
*யசோதா,*
*வட்டக்கச்சி.*
அரசியல் வாதிகளாக்கி விடலாம்.

*பாவலா!*
*நாயக்கா பரம்பரையில் அடுத்த அரசியல் வாரிசுயாராக இருக்கும்?*
*ராதிகா,*
*ஆனந்தபுரம்,*
நிச்சயமாக அநுரா பண்டார நாயக்காவல்ல.

*பாவலரே!*
*சுனாமிக்கும் சிறிலங்கா ஆமிக்கும் என்னவித்தியாசம்?*
*ஞா. அழகரசன்,*
*புதுக்குடியிருப்பு.*
அது அன்று அழித்தது, இது நின்று அழிக்கிறது.

*பாவலா!*
*உமது முழு உருவத்தை ஒருமுறை வாசகர்களுக்காக காட்டுவீரா?*
*வ.குணம்,*
*கிளிநொச்சி.*
.......... என் எழுத்தினூடாக என்னைப் பார்கிறார்கள்தானே

பாவலா!
*ரோபோ மனிதனும் காதலிக்கத் தொடங்கினால் எப்படியிருக்கும்.*
*வதனி,*
*வவுனியா.*
காதல் இயந்திரமயமாகி விடும்.

*பாவலரே!*
*இன்றைய உலகில் சாதிக்கமுடியாதது?*
*முரளி,*
*யாழ்ப்பாணம்.*
எதுவுமே இல்லை இயற்கையைத் தவிர.

*வணக்கம் பாவலா!*
*பிரபலமானவர் ஒரு ரூபா தானம் செய்தால் தலைப்புச் செய்தியாகவும், சாதாரணமானவர் ஆயிரம் ரூபா தானம் செய்தாலும் வெளியே தெரிவிதில்லை ஏன்.*
*பகிரதி,*
*மல்லாவி.*
பிரபலமானவர் செய்வது விளம்பரம்.
சாதாரணமானவர் செய்வது தர்மம்.

*பாவலா!*
*சோம்பேறிக்கு உதவலாமா?*
*ராணி,*
*வட்டக்கச்சி.*
நீங்கள் சோம்பேறியாக இருந்தால்.

*பாவலா!*
*நேபாளத்தில் தற்போது நிலவரம் எவ்வாறு உள்ளது?*
*சிவாஜினி,*
*புளியங்குளம்.*
கலவரமாகவுள்ளது.

*பாவலா!*
*''எதிரிகளைக் கூட இணைத்து நாட்டைக்கட்டி எழுப்புவோம்'' என்று சனாதிபதி கூறியுள்ளாரே....?*
*பிரபா,*
*திருவையாறு.*
இப்போது எதிரிகளுடன் (தன் கணவரைக்கொன்ற எதிரிகளான ஜே.வி.பியினருடன்) இணைந்துதானே நாட்டைக் குழப்பிவருகிறார்கள்.

*பாவலா!*
*எல்லோரையும் காதலிப்பது ஒருத்தியை மட்டும் திருமணம் செய்வது எனது கொள்கை எப்படியிருக்கின்றது.*
*குமார்,*
*பரந்தன்.*
மிகவும் நல்லது ஏனெனில் எந்த வேறுபாடுகளும் இன்றி காதலின் புனிதம் கெடாமல் எல்லோரையும் நேசிக்கத் தெரிந்திருக்கிறதே.

*பாவலரே!*
*கோமாளி-ஏமாளி என்ன வேறுபாடு.*
*செல்வகுமார்,*
*பூநகரி.*
கோமாளி சிரிக்கத் தூண்டுபவன்.
ஏமாளி ஏமாற்றத் தூண்டுபவன்.

*பாவலா!*
*அடிமையாக வாழ்ந்தால் என்ன?*
*செல்வி,*
*புதுக்குடியிருப்பு.*
அடிமையாள் ''வாழ'' முடியாது.




''நிப்பாட்டுங்கோ அதிக வேகத்தில வண்டியோடியிருக்கிறீர்? அந்தா அந்த மரத்தடியில அலுவலர் இருக்கிறார் அவரோட போய் கதையுங்கோ''

''தம்பி இதென்ன அநியாயம் நான் ஐம்பதிலதானே வந்தனான் இஞ்சபாரும்''

''ஐயா! நானும் கருவி வைச்சுத்தான் பிடிக்கிறன்''

''நான் அதைப்பற்றிக் கேட்கயில்லை நான் அளவான வேகத்திலதான் வந்தனான்''

''ஓகோ அப்படியோ இஞ்ச பாருங்கோ அறுபதுக்கும் எழுபதுக்கும் இடையில வந்திருக்கிறியள்''

''சுத்தப் பொய் நீங்கள் பிழையான கணக்கை எனக்குச் சொல்லுறீயள்''

''ஐயா! இந்தக் கருவி லண்டனில் எடுத்தது. இது பொய் சொல்லாது''

''தம்பி நானும் சவுதி, கட்டார் ஓமானெல்லாம் வாகன மோடினனான். பொய் சொல்ல மாட்டன்''

''ஐயா இதொரு லண்டன் கருவி பொய் சொல்லாது''

''தம்பி இது யப்பான் வாகனம் அப்ப இது பொய்சொல்லுதே நான் வேகத்தைப் பார்த்துத்தானே ஓடுறன்.''

நீங்கள் வேகத்தை வாகனத்தில பார்த்தியள் சரி, விதியில போட்டிருக்கிற வட்டப் பலகையில! கவனிக்கயில்லை.''

''கவனிச்சனான் சந்திவரை அறுபது போட்டிட்டு இதில பட்டெண்டு நாற்பது போட்டிருக்கு பத்து யாருக்க நீர் நிக்கிறீர். அறுபதில வந்தவன் பத்து யாருக்குள்ள நாற்பதுக்கு மாறேலுமே.......... சரி....சரி இந்தாரும் அபராதம் எடுத்துக் கொண்டு ஆளைவிடும்.

ம்....... இறங்கடா கீழ இதென்ன சிறிலங்காப்பொலிசே.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –108



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –108

.............................................................
.............................................................
.............................................................
.............................................................

பெயர் : .............................................
முகவரி : .............................................
.............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –107



**க.இரத்தினசிங்கம்,**
**266, ஜெயந்திநகர்,**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

*சுனாமி பேரலையால் உறவுகளை இழந்து*
*அநாதையாய் போன ஐயா*
*இழப்புக்களை எண்ணி ஏங்காதீர்- தமிழ்*
*ஈழ உறவுகள் நாம் இருக்கிறோம் கலங்காதீர்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*உழைத்து வெந்த மானிடரின் துயரம்*
*போக்கும் அழகிய நீலக்கடலே- அதோ*
*உந்தன் பிள்ளை உறவிழந்து வாடுகிறான்*
*அவன் வாழ்வுபெற கைகொடேன் தாயே!*

ச.வசந்தராஜ்,
புதுக்குடியிருப்பு.

*உலகநாடுகளின் ''சுனாமி'' நிவாரணம் பலவிதம்*
*எல்லாம் பெற்று அரச வயிறு உப்பில் போக*
*உன் வயிறோ ஒட்டி ஒட்டிப் போகிறது*
*தமிழா! உன் கைதான் உனக்குதவி உழைத்திடு*

சு.செல்வி,
பரந்தன்.

*உறவிழந்து, உடைமையிழந்து, ஊர்இழந்து*
*நடைப்பிணமாய் தவி(னி)த்திருக்கும் உயிரே*
*உன்னை உறவு சொல்ல ஒரு தேசமே உள்ளதை-நீ*
*தைரியமாய் உழைத்திடு.*

திருமதி ரா.சுகந்தன்,
பரவிப்பாஞ்சான்

*சுனாமி ஒரு சோக வரலாறு-இதில்*
*சுரண்டுவதிலும், சுருட்டுவதிலும் போட்டி ஏனடா*
*சொந்தம், சொத்திழப்பு நீண்ட பட்டியல் -இதில்*
*சொத்து சேர்கிறது அரசியல் கூட்டமடா.*

பைந்தமிழ்,
யாழ்ப்பாணம்.

*சாலையிலே நடைபிணமாய் எத்தனை நாள் வாழ்வதையா*
*வேலையில்லை மாண்டுவிட்ட உறவுகளை நினைத்திங்கு*
*ஓலையிலே உம் பெருமை உலகமது எழுதிடனும்*
*நாளையதை வளமுடனே வாழ்த்திடுவோம் வாருமையா!*

அ.பிரபாகரன்,
முள்ளியவளை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு

மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்..

உங்களின் இக்காலத்தெரிவுக்கு...



# குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
அதிநவீன ஆடைகளை
உள்ளடக்கிய
திருமணமற்றும் மங்கள
நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர
சாறிகள், பட்டுச்சாறிகள்,
பட்டுவேட்டிகள்
மற்றும் சல்வார் சோலிகிற் சூட்
கவுண், சேட் சூட்டிங்மற்றும்
பெரியோர்கள், சிறியோர்களுக்கான
ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
உடன் நாடுங்கள்.



## குமாரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி.

தொ.பே: 021-228 5971

SM Graphics

(சி-11453)




செல்வம் செழிக்கக்கூடிய வளமான விளைச்சலுக்கு
இலங்கையில் முன்னணியில் திகழும்

# எட்க்ரோ

## கிரிவ்ஸ்

MK-12/MK-20

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், புத்திசாலியான உங்கள் சரியான தெரிவு
எட்க்ரோ நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் பொங்கிவரக்கூடிய சலுகைகள்
ஒரு வருடத்திற்கான உத்தரவாத சான்றிதழ். பலம் மிக்கதும் நீண்ட
காலம் உழைக்கக்கூடியதும் அதிக தண்ணீரை பெற்றுக்கொள்ளக்கூடிய
வல்லமை. சுயமாகவும் சுயமற்றதாகவும் நீர் இறைக்கவல்லது. எரிபொருளை
சேமிக்க வல்லது. நாடளாவிய விற்பனைக்குப்பிந்திய சிறந்த சேவை.
தேவையான அளவு உதிரிப்பாகங்கள்.




SM Graphics

EDNA GROUP

## எட்னா அப்ளயன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

160, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு-04
தொலைபேசி: 508961-2, 502291-3, 592135-6
தொலைநகல்: 594558, 500909
தொடர்புகளுக்கு: மயூரா-0777 418821 இபுனு-0777 418817

யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

## ஆர்க் என்ரப்பிறைசஸ்

(சி-11452)

150, 152, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 2052



# வடக்கு கிழக்கு கிராமிய அபிவிருத்தி சேவைகள் (தனியார்) நிறுவனம்







நாம் வன்னி மக்களின் நலன்கருதி பின்வரும்
பொருட்களை விநியோகம் செய்கின்றோம்
விநியோகிக்கப்படும் இடங்கள்

## பசுமை வேளாண் சேவை நிலையங்கள்

தொடர்புகட்கு
வ.கி.கி.அ.சே.நிறுவனம்
கனகபுரம்
கிளிநொச்சி.

T.P.No 0212285023
FAX 0212285751

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மாசி 13 | 25 -02-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை -07






## அரசின் அசமந்தப் போக்கைக் கண்டித்து

## பாராளு.வளாகத்திற்குள் த.தே.கூ.ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மற்றும் சுனாமி நிவாரண நடவடிக்கைகளில் புறக்கணிப்பு என்பனவற்றைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் பாராளுமன்ற வளாகத்தினுள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இவ் ஆர்ப்பாட்டம் குறித்து அறிய வருவதாவது :-

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியான நிலையில் கடந்த ஒரு வருடமாக சிறிலங்கா அரசாங்கம் சமாதானப்பேச்சு வார்த்தைகளில் அக்கறை காட்டாமைக்கு எதிர்ப்புத்தெரிவித்தும் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்கு பொதுக்கட்டமைப்பை வடக்கு கிழக்கிற்கு உருவாக்காமைக்கு எதிர்ப்புத்தெரிவித்தும் இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பாராளுமன்ற பிரதான நுழைவாயிலுக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் கால் நடையாகவே பாராளுமன்றத்தை நோக்கிச்சென்றனர். சமாதானத்தை முன்னெடுப்

(IVஆம் பக்கம் பார்க்க)

# போராளிகள் மீது குறிவைக்கப்பட்டபோதே

# தற்காப்பு தாக்குதல் நடாத்தப்பட்டது!

## கிளாலியில் சிப்பாய் மீதான தாக்குதல் குறித்து அரசியல்துறையினர் விளக்கம்

(கிளிநொச்சி)

**வேவு நடவடிக்கையில் ஈடுபடும் பொருட்டு ஆயுதங்கள் மற்றும் தொலை நோக்கியுடன் நகர்ந்துவந்த இராணுவ அணியினர் கடமையில் நின்ற பெண் போராளிகளை நோக்கி துப்பாக்கியால் குறிபார்த்ததைத் தொடர்ந்து அவ்வணியினர் மீது எமது போராளிகள் மேற்கொண்ட தற்காப்புத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றுமொருவர் காயங்களுக்குள்ளானார்.**

இவ்வாறு கிளாலி முன்னரங்கப்பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் நேற்று முன்தினம் உள் நுழைய முற்பட்ட இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(IVஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கூட்டணியிலிருந்து விலகப்போவதாக இ.தொ.கா. எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து கடந்த வருட இறுதியில் ஆளும் கட்சியில் இணைந்து அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து விலகவுள்ளதாக எச்சரித்துள்ளது.


ஆளும் கட்சியில், பதவிகளையும், சலுகைகளையும் எதிர்பார்த்து எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதில் இணைந்து கொள்ளும் இ.தொ.கா.வின் எதிர்பார்ப்புக்கள் தற்போதைய அரசாங்கத்தில் சாதகமான பெறுபேறுகளை அளிக்கவில்லை.

இ.தொ.கா. தலைவர் பல தடவைகள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்திக்க முயற்சிகள் மேற்கொண்டபோதிலும் அதுவும் சரிவராத நிலையில் உரிய கௌரவம் தமக்கு கிடைக்காத நிலையில் இந்த எச்சரிக்கையை இ.தொ.கா. அரசாங்கத்திற்கு விடுத்துள்ளதாகவே அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

(IVஆம் பக்கம் பார்க்க)

## வே.கந்தையா ஏரம்பு ஐயா நாட்டுப்பற்றாளராக கௌரவம்

இந்த மண்ணின் மக்களையும் இம்மண்ணையும் நன்கு நேசித்த சிறந்த பண்பாளரும், எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும் என்ற உயர்போக்கும், பிறப்பெடுத்த மனிதர்கள் அனைவரும் விடுதலை வாழ்வை அடையப்பெற்றவர்களாகத் திகழகவேண்டும் என்ற நன்நோக்கையும் கொண்டு உயர்ந்த மனிதராக விளங்கிய மதிப்புக்குரிய வேலுப்பிள்ளை கந்தையா ஏரம்பு அவர்கள் 23.02.2005 அன்று காலமாகி விட்டார். அவரது சாவு அவரை அறிந்த அனைவருக்கும் பெரும் சோகத்தை ஊட்டியுள்ளது.



இவர், தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினரான தந்தை செல்வநாயகம் அவர்களின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அனைத்

(IVஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சி குறித்த நிலைப்பாட்டை அரசாங்கம் வெளிப்பத்த வேண்டும்

-ஐ.தே.கட்சி கோரிக்கை

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் தங்களது தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது. சுதந்திரக்கூட்டமைப்பிற்குள் இருக்கும் பேதங்கள் காரணமாக சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்லக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை. அரசாங்கம் இவ்வாறான காரணங்கள் குறித்து ஒரு நிலைப்பாட்டிற்குள் இருக்க வேண்டும் ஆகக்குறைந்தது சமாதான நடவடிக்கைகளுக்காக ஆரம்ப நிலை குறித்தாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே ஒரு இணக்கப்பாடு இருக்க வேண்டும் என ஐ.தே.க. தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார். விடு

(IVஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி நிவாரணப் பணி குறித்து எரிக்-மகிந்தராஜபக்ச பேச்சு

(கொழும்பு)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் நேற்று பிரமதர் மகிந்தராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்து சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இலங்கையில் இடம் பெறும் நிவாரணப் பணிகள் பற்றி ஆராய்ந்துள்ளார்.

அத்துடன் ஆழிப்பேரலையால் சேதமடைந்த விகாரைகளின் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்க நோர்வே அரசு தயாராகவுள்ளதென எரிக் தெரிவித்துள்ளார். (IVஆம்பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி பிரதேசசபை,கொடிகாமம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் 07.03.2005 ஆம் திகதி காலை 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். 07.03.2005 2.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிட்ட வேலைகளின் பொருட்டு நிர்மாணப் பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்கள் மாத்திரமே கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகைமையுடையவராவர். கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விகள் இணைப்பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர்,சாவக்சேரி பிரதேசசபை,கொடிகாமம்" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் எதிர்வரும் 07.03.2005 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| வேலையின் பெயர் | இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்விக்கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT15% உட்பட) |
|---|---|---|---|
| 1. சரசாலை பொது நூலகம் புனரமைப்பு வேலை | M9 | 2000.00 | 575.00 |

மேற்குறிப்பிடப்பட்ட கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் 04.03.2005 ஆம் திகதி 2.00 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இது சம்பந்தமாக மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**சாவகச்சேரி பிரதேச சபை,**
**தலைமைஅலுவலகம்,கொடிகாமம்.**

கு.ந.பாலச்சந்திரன்,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

(சி.11357)

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம் வடமராட்சி

01. யுனிசெப் திட்டத்தின் கீழ் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பின்வரும் பாடசாலைகளின் தற்காலிக வகுப்பறைகள் அமைத்தல் தொடர்பாக கேள்விகள் கேள்விச்சபைத் தலைவரும் வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 25.02. 2005ஆம் திகதி தொடக்கம் 03.03.2005ஆம் திகதி பி.ப.3.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித்திகதிக்கு அடுத்தநாள் 04.03.2005 ஆம் திகதி மு.ப.10.30 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமூகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயர் | தற்காலிக வகுப்பறை அமைத்தல் | | மீளளிக்க முடியாத வைப்புப் பணம் ரூபா | மீளளிக்க்கூடிய வைப்புப்பணம் | | ICTAD |
|---|---|---|---|---|---|---|
| | பொதி 1 வகுப்பறைகளின் எண்ணிக்கை | பொதி 2 வகுப்பறைகளின் எண்ணிக்கை | | பொதி 1 ரூபா | பொதி 2 ரூபா | |
| 1. யா/ஆழியவளை சி.சி.த.க | 03 | 14 | 250 | 5000 | 16000 | M9&M8 |
| 2. யா/வெற்றிலைக்கேணி பரமே | 03 | 11 | 250 | 5000 | 12000 | M9&M8 |
| 3.யா/வெற்றிலைக்கேணி றோ.க.த.க.பா | 01 | 02 | 250 | 2000 | 2250 | M9 |
| 4. யா/கட்டைக்காடு றோ.க.த.க.பா. | 02 | 05 | 250 | 4000 | 5500 | M9 |
| 5. யா/கேவில் அ.த.க.பா. | 02 | 05 | 250 | 4000 | 5500 | M9 |
| 6. யா/மாமுனை அ.த.க.பா. | 01 | 03 | 250 | 2000 | 3500 | M9 |
| 7. யா/செம்பியன்பற்று றோ.க.த.க.பா | 01 | 03 | 250 | 2000 | 3500 | M9 |
| 8. யா/தாளையடி றோ.க.த.க.பா. | 02 | 05 | 250 | 4000 | 5500 | M9 |
| 9. யா/மணற்காடு றோ.க.த.க.பா. | 03 | 09 | 250 | 5000 | 10000 | M9&M8 |
| 10.யா/வல்லை சிவகுரு வித்தியாலயம் | 04 | 15 | 250 | 5750 | 16500 | M9&M8 |
| 11.யா/வடஇந்து மகளிர் கல்லூரி | 01 | 04 | 250 | 2000 | 4500 | M9 |
| 12.யா/தும்பசிட்டி அமெ.மி.த.க.பா. | 01 | 04 | 250 | 2000 | 4500 | M9 |
| 13.யா/அல்வாய் வட அமெ.மி.த.க.பா. | 01 | 04 | 250 | 2000 | 4500 | M9 |

02. மேற்படி வேலைகளுக்கமைவாக கேள்விப்பத்திரப் பணத்தை தங்களுக்கு வசதியான வங்கியிலிட்டு வலயக் கல்விப் பணிப் பாளர் வடமராட்சி என்ற பெயரில் வங்கிக் கட்டளையைப் பெற்று (payorder) வடமராட்சி வலயப் பாடசாலைகள் வேலைகள் கிளையில் சமர்ப்பித்து 2005.02.25ஆம்திகதி தொடக்கம் 2005.03.03 திகதி பி.ப 3.30 மணி வரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. மேற்படி வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியுடன், இணைப்பிரதியும் தனித்தனி கடித உறையில் இடப்பட்டு உறைகளின் இடதுபக்க மேற்பக்கத்தில் வேலையின் விபரம் எழுதப்படவேண்டும். தனித்தனியாக உறைகளில் இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இரண்டையும் பிறிதொரு உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரே முத்திரையிட்டு "வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம்" என்ற முகவரி இட்டு வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் 03.03.2005ஆம் தகதி பி.ப.2.30 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத் திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

04. கேள்விச் சபையால் தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டதிகதியில் இருந்து இரண்டு வேலை நாட்களுக்குள் கேள்விச் சபைத் தலைவருடன் வேலைக்கான ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டு உரிய காலத்தில் வேலையைப் பூர்த்தி செய்து கையளித்தல்வேண்டும் எவ்வித காலதாமதமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் இவ்வேலை தொடர்பான மேலதிக விபரங்களை வடமராட்சி வலயக் கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகின்றேன்.

**வே.தி.செல்வரத்தினம்,**
**கேள்விச் சபைத் தலைவரும்,**
**வலயக் கல்விப் பணிப்பாளரும்,**
**வடமராட்சி.**

**பாடசாலை வேலைகள் கிளை,**
**வலயக் கல்வி அலுவலகம் ,**
**வடமராட்சி.**

(சி-11358)

-உடத்தலவின்ன படுகொலை-

# பிரதிவாதி சார்பில் நிதியமைச்சர் கொழும்பு மேல் நீதி மன்றில் சாட்சி

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலை வழக்கில் பிரதிவாதியின் சார்பில் நிதிய மைச்சர் சரத் அமுனுகம நேற்று சாட்சியமளித்துள்ளார்.

கொழும்பு மேல் நீதி மன்றத்தில் அவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவேளை சாட்டியமளித்த அவர் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தேர்தல் தினத்தன்று நான் வாக்குச்சாவடிக்கு நேரில் சென்று அவதானித்தேன் காந்திவித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் தேர்தலில் ஐ.தே.க.சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் உறவினரான ராஜா சேனநாயக்க என்பவர் ஆயுதம் ஏந்தியவண்ணம் குழப்பம் விளைவித்ததை கண்டேன் கடுஸ்கந்தோட்ட புனித அந்தோனியார் மகளிர் வித்தியாசலயத்தில் அமைந்திருந்த வாக்குச் சாவடிக்குச் சென்றபின்னர் வீடு திரும்பும் வழியில் நான் எமது கட்சியில் கண்டி மாவட்டக் குழுத்தலைவரான அநுருத்தரத்தவத்தையின் இல்லத்திற்குச்சென்றேன் இவரை கொலை செய்வதற்கு புலிகளின் தற்கொலை படையாளிகள் வந்திருப்பதாக செய்தி வெளியானதைத்தொடர்ந்து முன்னைய தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கை தொடர்பான நிலைமையை அறிந்துகொள்ளும் நோக்குடன் நான் ரத்வத்தையை சந்திக்கச் சென்றேன் தேர்தல் தினத்தன்று மாலை 4.00 மணியளவில் ரத்வத்தையின் இல்லத்திற்குச் சென்றவேளை அவர் உட்பட மூன்று புதல்வர்களும் இருந்தார்கள் என கூறியுள்ளார். இவ்வழக்கு எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளபடவுள்ளது.

# கிளிநொச்சி நகரில் களவாடப்பட்ட உந்துருளி நெல்லியடியில் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரப்பகுதியில் வைத்து கடந்த 18ஆம் திகதியன்று களவாடப்பட்ட உந்துருளியினை யாழ். நெல்லியடிப்பகுதியில் வைத்து கிளிநொச்சி காவல்துறையினர் மீட்டுள்ளனர்.

உந்துருளி களவாடப்பட்டு விட்டதென உந்துருளி உரிமையாளரினால் கிளி.காவல் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டதனை தொடர்ந்து தீவிர நடவடிக்கையினை மேற்கொண்ட காவல்துறையினர் கடந்த 23ஆம் திகதியன்று நெல்லியடிப்பகுதியில் வைத்து உந்துருளியினை மீட்டதுடன் சந்தேக நபரையும் கைது செய்து கிளி.மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின்பேரில சந்தேக நபர் தற்போது விளக்க மளியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் மீட்கப்பட்ட உந்துருளியினை உரிமையாளரிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் காவல் துறையினரால் மேற்கொள்ளப் பெற்றுவருகிறது. (சோ)

## கலந்துரையாடல்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச ஊரக எழுச்சிப் பேரவை கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் சனசமூக நிலைய உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்றது.

நல்லூர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ந. பாலகுமார் தலைமையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் குறிப்பாக, மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்சமூக சீரழிவுகள், பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, நல்லூர் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூமகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (41)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

விசுவமடுவிற்கும் கிளிநொச்சிக்கும் இடையில் விஸ்ணு வீடியோ புகைப்பட கலையகத்திற்குரிய புகைப்பட சுருள் ஒன்று டெவலப் செய்த நிலையில் உள்ள நெக்கரிப் தவறவிடப்பட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் விசுவமடுவில் அமைந்திருக்கும் விஸ்ணு வீடியோ புகைப்பட கலையகத்தில் ஒப்படைக்குமாறு அதன் உரிமையாளர் யோகன்.தெரிவித்தார். இதனை ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(சி-11505)

# கரும்புலி கப்டன் மங்கையின் ஏழாம் ஆண்டு நினைவு நிகழ்வு

கிளி. நாச்சிக்குடா அ.த.க.பாட சாலையின் முதல் மாவீரர் கரும்புலி கப்டன் மங்கையின் ஏழாம் ஆண்டு நினைவு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கிளி. நாச்சிக்குடா அ.த.க.பாடசாலையின் ஆசிரியர் சசிகரன் தலைமையில் இடம்பெற்றது.

ஈகச்சுடரினை கரும்புலி கப்டன் மங்கையின் சகோதரி ஏற்றி வைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து நினைவுரையினை பாடசாலை அதிபர் ஜெ. மாணிக்கவாசகர் அவர்கள் ஆற்றினார். பின்னர் மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

## அன்பளிப்பு

யாழ். வர்த்தகசங்கத்தினர் வலிகாமத்தில் அமைந்துள்ள மூன்று வைத்தியசாலைகளுக்கு வைத்திய உபகரணங்களை வழங்கியுள்ளனர். தெல்லிப்பளை மாவட்டவைத்தியசாலை, பண்டத்தரிப்பு அரசினர் கிராமியவைத்தியசாலை, சங்கானை அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றிற்கே இவ்வாறு வைத்திய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (33)

# இ.த.அ. சபையை ஏற்படுத்தினால் உடன் அரசிலிருந்து விலகுவோம்!

### – ஜே.வி.பி. எச்சரிக்கை

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஒன்றை ஏற்படுத்தி அதன்பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் முற்பட்டால் உடனடியாக அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்வதாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தெரிவித்துள்ளது.

சபாநாயகரிடம் விசேட அனுமதியைப்பெற்று ஜே.வி.பி.யின் பிரச்சாரசெயலாளர் விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரையொன்றை ஆற்றினார்.

அந்த உரையின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தமது கட்சியின் இணக்கப்பாடு இன்றி அரசாங்கம் சமாதான நடவடிக்கைகள் குறித்து புதிய நிலைப்பாடொன்றை தெரிவித்திருப்பதாக நேற்று பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையில் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையே கைசாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மூன்று வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையின் மூலம் அரசாங்கத்தின் புதிய நிலைப்பாடு தெளிவாகப்புலனாகின்றது.

அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையானது அரசின் பிரதான அமைச்சர்கள் பலருக்கும் முக்கிய பங்காளிகளான எமக்கும் தெரியாமல் வெளியிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் பெயரால் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையினை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். இதனைக் கண்டிக்கின்றோம். வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையினை மாற்றுவதற்கும் புதிய அறிக்கை ஒன்றை வெளியிட வைப்பதற்கும் எம்மாலான அழுத்தத்தினை அரசாங்கத்திற்கு கொடுத்து வருகின்றோம். என்றார் விமல் வீரவன்ச

வடக்கு -கிழக்கு பிரச்சினைக்கு இறுதித்தீர்வொன்றை காண்பது பற்றிய பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காமல் இடைக்கால நிர்வாகம் பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்படுவதையோ இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுவதையோ முற்றாக எதிர்ப்பதாக ஜே.வி.பி. யின் முக்கியஸ்தரான டில்வின் சில்வா கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.


ஆயினும் இப் பிரச்சினைக்கு பேச்சுவார்தைமூலம் தீர்வு காண்பதை ஜே.வி.பி.எதிர்க்கவில்லை.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்ட ஊடக அறிக்கை பற்றி தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் நோக்கில் இவ் ஊடகவியலாளர் மாநாட்டை ஏற்பாடு செய் துள்ளதாகவும்,

சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிரந்தர தீர்வே பேச்சுவார்தைக்கான அடிப்படையாக இருக்கவேண்டு மென்றும் ஜே.வி.பி. பேச்சு வார்த்தைக்கு எதிரானதென யாரும் தவறாக விளங்கிக் கொள்ளக் கூடாது என்றும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதை ஆதரிக்கின்றோம் என்பதை நாம் கூறி வந்துள்ளோம். இன்னும் அதே நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம் என்றும் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜே.வி.பி.யின் இந்த அறிவிப்பு குறித்து அரசாங்க சமாதான செயலக பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது இது குறித் துக் கருத்து எதனையும் கூற அவர் விரும்பவில்லை.


## கண்ணீர் அஞ்சலி



23-02-2005 அன்று இயற்கை எய்திய நாட்டுப்பற்றாளர் வே.க. ஏரம்பு அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாட்டுப்பற்றாளர் வே.க. ஏரம்பு

அருணோதயம் - புங்குடுதீவு

வர்த்தக சங்கம், பொதுச்சந்தை, கிளிநொச்சி.

(சி-11359)


# ஈராக்கிற்கு வேலைக்குச் செல்ல இலங்கையருக்குத் தடைவிதிப்பு

குவைத்தில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி ஈராக்கிற்கு அனுப்பப்படவிருந்த 18 இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விசா ரணை செய்த போது இவர்கள் வேலைவாய்ப்பு முகவர்களால் குவைத்துக்கு அனுப்பப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டு ஈராக்கிற்கு அனுப்பப்படவிருந்தது தெரிய வந்தது. இதனை அடுத்து இவர்கள் அனைவரும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். ஈராக்கில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்வதற்கு இலங்கையருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அங்கு வெளிநாட்டுத் தொழிலாளர்கள் கடத்தப்படுதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்திற்குள்ளா வதையடுத்தே இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## கண்ணீர் அஞ்சலி



நாட்டுப்பற்றாளர் திரு. வே. க. ஏரம்பு

23.02.2005 அன்று இயற்கை எய்திய நாட்டுப்பற்றாளர் திரு. வே. க. ஏரம்பு அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துயரில் பங்கெடுப்பதோடு எமது இதய அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வர்த்தக சங்கம், கிளிநொச்சி.

(சி.11360)


## கதிர்காமர் இந்தியா பயணம்

(லண்டன்)

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று இந்தியாவிற்கு பயணமானார். இவரது இந்திய விஜயம் அமைதி வழிமுறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விவாதிக்க ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமென்று இந்திய வெளியுறவு அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார்.


## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 10 10 1944

மறைவு 04 03 1999

அமரர் திரு.முருகேசு சுவாமிநாதன்

(முன்னாள் கிராமசேவையாளர்)

காலஞ்சென்ற எமதன்புத்தெய்வம் திரு.முருகேசு சுவாமிநாதன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவையொட்டி அன்னாரின் இல்லத்தில் 26.02.2005 சனிக்கிழமை நடைபெறவிருக்கும் மதியபோசனத்தில் உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

தகவல்:-
மனைவி,மங்களம்,
உடையார்கட்டு, வடக்கு.

(5695)



இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

மாபெரும் பரிசுப்போட்டி

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்ப்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள். இப்போட்டி பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி முடிவடையும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

அம்மன் களஞ்சியம்

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852,5077

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!



அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

(சி-11254)

# மருதமுனையிலிருந்து சாய்ந்தமருது வரை மீனவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

அரச உதவிகள் பாரபட் சமின்றி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்று மருதமுனையிலிருந்து சாய்ந்தமருது வரை மீனவர் ஆர்ப பாட்டப்பேரணியொன்றை நடத்தி னர்.மருதமுனை சந்தியிலிருந்து சாய்ந்தமருது நகர மண்டபம் வரை நடைபெற்ற இந்த பேரணியில் சுமார் 300 பேர் வரை கலந்து கொண்டனர். வடக்கு - கிழக்கு விவசாயிகளினதும் மீனவர் களினதும் பிரச்சினைகளுக்கு தேசிய மட்டத்தில் தீர்வுகாணப்பட வேண்டும். இராணுவ நெருக்கடி இல்லாமல் சுதந்திரமாக சகலரும் செயற்படக்கூடிய சூழ்நிலை ஏற் படுத்தப்பட வேண்டும். உத்தேச கடல் பாதுகாப்பு வலயம், மீளப் பெறப்பட வேண்டும் போன்ற கோரிக்கை களும் இவர்களினால் முன்வைக் கப்பட்டிருந்தது.

இந்த கோரிக்கைகள் அடங்கிய வாசக அட்டைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பிய இம்மீன வர்கள் இது தொடர்பான மனுக் களை சம்பந்தப்பட்ட அதிகாரிக ளிடம் கையளித்தனர்.

# ஆரையம்பதி அகதிமுகாமில் அதிரடிப்படையினர் அடாவடி

## -இரவில் பெண்களுடன் சேட்டை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட ஆரையம்பதி பாடசாலை அகதி முகாமிற்குள் இரவு நேரத்தில் அதிரடிப்படையினர் புகுந்து மக்களை துன்புறுத்திவருவதாக தெரிவிக்கப் படுகிறது.

குறிப்பாக பெண்கள் மீது அதிரடிப்படையினர் அடாவடிச் செயலில் ஈடுபட்டுள்ளனர். முகாமிற்குள் செல்லும் அதிரடிப்படையினர் டோர்ச் லைட் வெளிச்சத்தை பாய்ச்சி அவர்களை எழுப்புவதாகவும் தொல்லை படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. படையினர் இவ்வாறு முறை கேடாக நடந்து கொள்வது குறித்து அச்சமடைந்துள்ளதாகவும் இவர் களைக்கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முகாமில் தங்கிள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ள அதேவேளை இச்சம்பவம் தொடர்பாக போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் மகஜர் ஒன்றை கையளிக்கவுள்ளனர்.

## அரசின்....

பதில் எவ்விதமான முன்னேற்றகரமான முயற்சி களையும் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ள வில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார். பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத்தில் மீள்குடியேற்றம், நிவாரணம் போன்றவற்றை தொடர்ச்சியாக கொண்டுசெல்ல பொதுக்கட்டமைப்பை உருவாக்கவேண்டும் என்று கோரியபோதிலும் சிறிலங்கா அரசு எவ்விதமான நடவ டிக்கையையும் எடுக்கவில்லை என்று அவர் மேலும் கூறினார்.

## சுனாமி...

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முன்னோக்கிக்கொண்டு செல்வதற்கு சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் அர்ப்பணிப்புடன் செயற் பட வேண்டும் என எரிக் வேண்டுகோள் விடுத்தார்.

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் கொழும்பு நகரில் பல பகுதிகளில் சோதனைச்சாவடிகள் காணப்பட்டன. அத்துடன் எந்தவேளையில் தற்கொலை குண்டுத்தாக்குதல் இடம்பெறுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் அன்று காணப்பட்டது. ஆனால்இப்போது வடக்கு- கிழக்கு மாகாணத்திலும் அமைதி ஏற்பட்டுள்ளதாக நோர்வேயின் விசேட சமாதானப்பிரதிநிதி எரிக் சூல்ஹெய்ம் தெரிவித்தார்.

பிரதமருடனான இச்சந்திப்பில் இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிற ஸ்கர் உட்பட பலர் கலந்துகொண்டனர். இதேவேளை எரிக் நிதியமைச்சர் சரத் அமுனுகமவை சந்தித்து எதிர்கால சமாதான நடவடிக்கைகள் மற்றும் சுனாமி புனர்நிர்மானப் பணிகள் பற்றி ஆராய்ந் துள்ளார்.

## ஆளும்....

அக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சரு மான ஆறுமுகம் தொண்டமானுக்கு வீடமைப்பு, நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் வடிகால் அமைச்சு வழங்கப்பட வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் பாயிஸ் முஸ்தபா விற்கு உல்லாசத்துறை பிரதி அமைச்சர் பதவி வழங் கப்பட வேண்டும் என இ.தொ.கா. அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வந்துள்ளது. அதுவும் இதுவரை கைகூடவில்லை. இதனால்தான், இ.தொ.கா. விரக்தி யடைந்து இந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கருதப்படுகின்றது.

இதேவேளை, இ.தொ.காங்கிரசின் அமைச்சர் களான முத்துசிவலிங்கம், செல்லச்சாமி ஆகியோர் தமது அமைச்சர் பதவிகளை இராஜினாமாச் செய்யும் கடிதங்களைப் பிரதமரிடம் கையளித்துள்ள தாகவும் அக்கட்சியின் பிரதிச் செலயாளர்களில் ஒருவரான ஆர். யோகராஜன் கூறியுள்ளார்.

ஏற்கனவே, அரசாங்கத்தில் இரண்டாவது பங் காளிக் கட்சியான ஜே.வி.பி.யுடன் நெருக்கடி ஏற்பட் டிருக்கும் நிலையில், பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை இல்லாத இந்த அரசாங்கத்தில் இருந்து இ.தொ.கா. விலக விடுத்திருக்கும் எச்சரிக்கை ஓர் அரசியல் நெருக்கடியைத் தோற்று விக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய அரசியல் சூழ்நிலையை எதிர்கொள்வது தொடர்பாக சனாதிபதி சந்திரிகா தலைமையிலான உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பாராளு மன்றத்தில் எட்டு ஆசனங்களை இ.தொ.கா. கொண் டிருப்பது தெரிந்ததே.

## சமாதான....

தலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அரசாங்கம் வெளியிட்டுள்ள கருத்து குறித்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சி களிடையே முரண்பாடுகள் இருக்கும் போது அடுத் தவர்களுடன் எப்படி அரசாங்கத்தினால் பேச முடி யும்? என ஐ.தே.க. பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் வினா எழுப்பியுள்ளார்.

இதுவரை பயன்படுத்தப்பட்ட இடைக்கால கவுன் சில் என்ற பதத்திற்கும் இடைக்கால நிர்வாகசபை என்ற பதத்திற்கும் இடையில் வித்தியாசங்கள் உள் ளன. இதன் உண்மைத்தன்மை என்ன? அதிகார சபையின் செயற்பாட்டுத் தன்மை என்ன? இந்த அதிகார சபைக்கு வழங்கப்படுகின்ற அதிகாரங்கள் என்ன? எந்த அளவு தூரம் இது செயற்படும்? என்பது தொடர்பாக மக்களுக்குத் தெளிவு படுத்துவது அரசாங்கத்தின் கடமை. சமாதானப் பேச்சுவார்த்தை எந்த அடித்தளத்தில் ஆரம்பிக்கப்படுகின்றது என்பது குறித்து இதுவரை தெளிவில்லை. விடுதலைப் புலிகளினால் முன் வைக்கப்பட்ட ஆவணத்தின் அடிப் படையிலா அல்லது வேறு யோசனைகளின் அடிப் படையிலா? என்பது தெளிவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி பிரசாரச்செயலாளர் விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் நேற்று ஆற்றிய உரை குறித்து இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

# கண்ணீர் அஞ்சலி

## செபமாலை முத்து செபநேசன் [றெக்சன்]

பிரான்சில் வசித்துவந்த இரணைப்பாலையைச் சேர்ந்த செபமாலை முத்து செபநேசனின் (றெக்சன்) பிரிவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளோம். இவரின் இழப்பு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் இவரின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரான்சிலுள்ள**
**உறவினர்கள்**
**நண்பர்கள்.**

(சி-11506)

# நாட்டுப்பற்றாளர் திரு.வே.க.ஏரம்பு அவர்களது சாவு அறிவித்தல்



புங்குடுதீவு முதலாம் வட்டா ரத்தைச் சேர்ந்த நாட்டுப் பற்றாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான திரு. வே. க. ஏரம்பு அவர்கள் 23-02-2005 நேற்று முன்தினம் பிற்பகல் 4.00 மணிக்கு இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தையா மனோன்மணியின் அன்பு மகனும், சரவணையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி சின் னம்மாவின் அன்புக் கணவரும், அருணாதேவி, சிறீதரன், மதிவதனி, பாலச்சந்திரன் (மாவீரர் அருணன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்ற தனலட்சுமி, மற்றும் ராசம்மா, ஞானம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை) சந்திரசேகரம், ஆகியோரின் அன்புச் சகோதரனும் குமாரதாஸ், சாந்தினி, வே. பிரபாகரன். ஆகியோரின் அன்பு மாமனாரும், பூர்ணிமா, வித்தியா, இந்துமதி, அருணன், சந்துஜா (பாலினி) சாள்ஸ் அன்ரனி, துவாரகா, பாலச்சந்திரன், ஆகியயோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், சுந்தரமூர்த்தி, மற்றும் வரராசசிங்கம்,ஞானம், காலஞ்சென்றதிலகவதி, கண்மணி, ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 24-02-2005 நேற்று தொடக்கம் மறுஅறிவித்தல் வரை கிளிநொச்சியிலுள்ள தூயவன் அரசறிவியற்கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள், போராளிகள், அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

## வே. கந்தையா....

துப் போராட்டங்களிலும் முக்கியமாகத் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு சத்தியாக்கிரகங்களிலும் திருகோணமலை பாதயாத்திரையிலும் பங்குபற்றியவர். அத்துடன், கல்வி மற்றும் சமூகப் பணிகளிலும் பல அமைப்புக களுடன் இணைந்து தனது அளப்பெரும் சேவையினை ஆற்றியவர்.

இம்மண்ணின் போராட்ட விடுதலைக் காலத்திலும் அவரின் பங்காற்றுதலும், உழைப்பும் தொய்வின்றி உயர்வாகவே இருந்தன. 1984ஆம் ஆண்டு அவரது மகன் பாலச்சந்திரன் எமது அமைப்பில் இணைந்து இறுதிவரை உறுதியுடன் நின்று போராடி இந்திய இராணு வத்துடன் நடந்த யுத்தத்தில் வீரச்சாவடைந் தார். திரு.க.ஏரம்பு அவர்கள் அவரது மகனான கப் டன் அருணின் (பாலச்சந்திரன்) இழப்பின் பின்பும் சளைக்காது தனது போராட்டத்துக் கான பங்க ளிப்பை ஆற்றிவந்தார்.

தமிழீழ மண்ணில் இந்திய இராணுவம் எங்கும் பரவி நின்ற காலத்திலும்அவர் தம் சொந்த மண்ணை விட்டு வெளியேறாது. இந்திய இராணுவத்தின் பலவித தொல்லைப்படுத்தலுக்கு ஆளானார். அந்த நிலையிலும் இறுக்கமான தனது மனப்பாங்கில் இருந்து மாறாது உறுதியுடன் போராட்டம் பற்றிய இரகசியங்களை வெளிவிடாது காத்து தமிழீழ விடுத லைப் போராட்ட வளர்ச்சிக்கு வரலாற்றுப் பங்காற் றினார்.

வரலாற்றுக் குறிப்பில் இடம்பெற்றுள்ள யாழ்ப் பாண இடப்பெயர்வின் பின் அவர் வன்னிக்கு வந்தார். வன்னி வாழ்வின் போதும் அவர் கொண்ட கொள்கையில் இருந்து சிறிதும் பின்னடிக்காது செயலாற்றினார். வன்னியில் பலவிதமான இடர் களை சந்தித்த காலத்திலும், அவர் உறுதியுட னேயே விளங்கினார். அவர் மக்களை, மண்ணை நேசித்தவர். விடுதலையை நேசித்தவர். உறுதியான கொள்கையும் மக்களின் குறை அறிந்து சேவை செய்யும் மனப்பாங்கும் கொண்ட அவரின் இழப்பு பேரிழப்பாகும்.

திருவாளர் வே.க.ஏரம்பு அவர்களின் பிரிவினால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தி னரின் சோகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாமும் கலந்துகொள்கிறோம். இம்மண்ணின் மனித ராக நின்று மகத்தான பணிகளைச் செய்த அவருக்கு நாட்டுப்பற்றாளர் என்னும் உயர்வினை வழங்கி அவரது பெருமையில் நாமும் இணைந்துகொள் கிறோம்.

## போராளிகள்....

அவ்வறிக்கையின் முழு விபரமும் வருமாறு; கடந்த புதன்கிழமை (23.02.05) மாலை 4.15 மணிய ளவில் கிளாலி முன்னரங்கப் பகுதியிலுள்ள விடுத லைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் உள் நுழைய முற்பட்ட இராணுவத்தினர் மீது புலிகள் தற்காப்புத் தாக்குதலை மேற்கொண்டனர். கிளாலி நீரேரிக்கு அண்மையாக உள்ள பெண் போராளிக ளின் முன்னரங்க நிலையிலிருந்து 40 மீற்றர் தூரத்தில் வேவு நடவடிக்கையில் ஈடுபடும் பொருட்டு ஆயுதங்கள் மற்றும் தொலைநோக்கியுடன் நகர்ந்து வந்த இராணுவ அணியினர் கடமையில் நின்ற பெண் போராளிகளை நோக்கி துப்பாக்கியால் குறிபார்த் ததைத் தொடர்ந்து அவ்வணியினர் மீது எமது போராளிகள் மேற்கொண்ட தற்காப்புத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றுமொருவர் காயங்களுக்குள்ளானார். 550 மீற்றர் சூனியப் பிரதேசமாக உள்ள இப்பிர தேசத்தில் எமது நிலையிலிருந்து 40 மீற்றர் வரை இராணுவத்தினர் வேவு நடவடிக்கைகளுக்காக நகர்ந்து வந்ததும் எமது போராளிகள் மீது தாக்குதல் தொடுக்க முயன்றதும் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாகும். இந்நிலையில், தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காகவே எமது போராளிகள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு மாலை 6 மணியளவில் விஜயம் செய்து அந்த இடத்தைப் பார்வையிட்டனர். அதன் பின்னர் கண் காணிப்புக்குழு உறுப்பினர்களின் முன்னிலையில் விடு தலைப்புலிகள் இறந்தவரின் உடலை முகமாலை சூனியப் பிரதேசத் தில் வைத்து சிறிலங்கா இரா ணுவத்தினரிடம் ஒப் படைத்தனர்.

இச்சம்பவம் நடந்த அதே இடத்தில் கடந்த 15.02.2003 அன்று ஓர் இராணுவ அணியினர் எமது கட்டுபாட்டுப்பகுதிக்குள் உள்நுழைந்து பெண் போரா ளிகள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் எமது போராளிகள் காயமடைந்தமை இங்கு குறிப் பிடத்தக்கது.

போர்நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முரணான வகையிலமையும் இவ்வகையான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கேற்ற நடவடிக்கைகளை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது